28°C
32°C
26°C
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

02 JUN 2014



விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 188 வள்ளுவர் ஆண்டு: 2045

வைகாசி 19, திங்கள் 02.06.2014

# அனானை அனுமதிப்பது தொடர்பில் முடிவில்லை

## ஐ.நா. குழுவை ஏற்றுக்கொள்வதில்லை என்பதிலும் மாற்றமில்லை; அரசு கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 2
ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளரான கோபி அனானுக்கு நுழைவிசைவு (விசா) வழங்குவது குறித்து இலங்கை அரசு இன்னும் தீர்மானிக்கவில்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் விசாரணைக்குழு அமைக்கப்படுவதை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்காது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிரான ஐ.நா. விசாரணை இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சுமந்திரன் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இதுகுறித்தும், கோபி அனானுக்குரிய நுழைவிசைவு தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்தும் வினவிய போதே அமைச்சர் கெஹலிய மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐ.நா. விசாரணைக் குழு குறித்த முடிவில் இலங்கை அரசானது தெளிவானதொரு முடிவிலேயே இருக்கிறது. கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போதே, இலங்கை அரசானது விசாரணைக் குழுவை ஏற்றுக்கொள்ளாது என தெரிவித்து விட்டது. இந்த நிலையில், ஜூன் மாத நடுப் பகுதிக்குள் இலங்கைக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்பதை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இவ்விசாரணைக் குழுவின் தலைவராக செயற்படவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளரான கோபி அனானுக்கு விசா வழங்குவது குறித்து இலங்கை அரசு இன்னும் முடிவுகளை எடுக்கவில்லை. இது குறித்த எந்தவித குழப்பங்களும் அரசுக்குள் இல்லை"– என்று தெரி வித்துள்ளார்.

அதேவேளை, ஜூன் மாதம் நடுப் பகுதிக்குள் ஆரம்பமாகும் எனக் கூறப்படும் சர்வதேச விசாரணையானது குற்றஞ் செய்தவர்கள் தண்டிக்கப்படுகின்றமைக்கப்பால், இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வொன்றை வென்று கொடுக்கும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ற-சி)

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்காக வீடமைப்புத் திட்டம்

சென்னை, ஜூன் 2
தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளுக்காக விசேட வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது இந்திய அரசு. அந்தத் திடடத்திட்டன் கீழ் 191 வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்காகவே இந்த வீட

21ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் 33 பேர் கைது

### தடை செய்யப்பட்ட வலையும் கைப்பற்றப்பட்டது



கைது செய்யப்பட்ட மீனவர்கள்

மன்னார், ஜூன் 2
இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 33 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் தற்போது மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 6 படகுகளில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 29 மீன

21ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் பிரச்சினை புறமொதுக்கப்படுமா?

பக். 12

## ஐ.நா. விசாரணைக் குழு இறுதி செய்யப்படவில்லை

### அடுத்த வாரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கின்றதாம் அரசு

கொழும்பு, ஜூன் 2
இலங்கையில் நடந்த இறுதிப் போரில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள குழு இன்னமும் மனித உரிமைகள் ஆணையாளரால் இறுதி செய்யப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்துக்கு அமைய இலங்கை

21ஆம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரன் இருக்கும்போது பொலிஸ் அதிகாரம் வழங்கலாம்

### ஏனைய மாகாணங்களே பிரச்சினை என்கிறார் டியூ.

கொழும்பு, ஜூன் 2
முதலமைச்சராக விக்னேஸ்வரன் பதவி வகிக்கும் போது, வடக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர.

மலையகத்தில் நடந்த பொது நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

"13ஆவது திருத்தச் சட்டத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான

21ஆம் பக்கம் பார்க்க

## மீனவரை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

மோடிக்கு 'ஜெ' கடிதம்

பக்கம் 02

## குடாநாட்டில் குற்றங்கள் தொடர்கதையாகின்றன

### பொலிஸாரின் நடவடிக்கையில் திருப்தியில்லை மக்கள் ஆலோசனைக் குழுக்கள் கூறுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 2
குடாநாட்டில் கொள்ளை, திருட்டு மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்கதையாகியுள்ளன. சம்பவ இடங்களுக்குச் செல்லும் பொலிஸார் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்கின்றனர், மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதலையும் செய்கின்றனர். ஆனால் அவற்றால் எந்தவிதப் பயனும் கிட்டுவதாகத் தெரியவில்லை. அந்தச்

21ஆம் பக்கம் பார்க்க

## வற்றாப்பளை பொங்கல்; தீர்த்தமெடுத்தல் இன்று

### காட்டா விநாயகர் கோயிலில்

யாழ்ப்பாணம், ஜூன் 2
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழாவை முன்னிட்டு கடலில் தீர்த்தமெடுத்து அதில் ஒரு வாரம் விளக்கேற்றும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்று வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளை காட்டா விநாயகர் கோயிலிலிருந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு பக்தர்கள் புடைசூழ தீர்த்தம் எடுப்பதற்காக புறப்படுவர். சிலாவத்தைக் கடலிலேயே தீர்த்தம் எடுக்கப்படும்.

பொங்கல்நடைபெறப் போகின்றதென்பதை உபகரிப்புக்கார

21ஆம் பக்கம் பார்க்க

## பொதுபலசேனா அமைப்பு படமெடுத்தாடும் விஷப்பாம்பு

### மாவை சேனாதிராசா கூறுகின்றார்

கல்முனை, ஜூன் 2
புற்றுக்குள்ளிருந்து படமெடுத்தாடும் விஷப் பாம்பு போன்றது பொதுபல சேனா அமைப்பு. அந்த அமைப்பு சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராகப் பல சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றது – என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சமகால அரசியலும் ஜெனீவா தீர்மானமும் எனும் தலைப்பிலான மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டமொன்று கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் ஒருவர் ஆஸ்திரேலியாவில் தீக்குளிப்பு

மெல்போர்ன், ஜூன் 2
ஆஸ்திரேலியாவின் விக்ரோறியா மாநிலத்தில் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்துள்ளார். மெல்போர்னிலிருந்து 100 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஜீலோங் நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

# இரண்டரை வயதுக் குழந்தைக்கு நஞ்சூட்டி தானும் உயிரை மாய்த்துக் கொண்ட தந்தை

## வடமராட்சி கிழக்கில் சம்பவம்: குடும்பப் பிணக்கே காரணம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கட்டைக்காடு, நித்தியவேட்டைப்பகுதியில் தந்தையும் இரண்டரை வயதான மகனும் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர். சடலமாக மீட்கப்பட்டவர்கள் இதே இடத்தைச் சேர்ந்த மரியதாஸ் மகேஸ்வரராஜா (வயது - 28), இவரது இரண்டரை வயதான மகன் ம.அன்ரூயன் ஆகியோரே மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்று முன்தினம் மகேஸ்வரராஜா தனது வீட்டுக்குச் சென்று தனது குழந்தையை அழைத்துச் சென்றுள்ளார். அதன் பின்னர் என்ன நடந்தது என்று எவருக்கும்தெரியவில்லை. இந்த நிலையில்நேற்றுக் காலை சீவல் தொழிலுக்குச் சென்ற ஒருவர் மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலத்தை அவதானித்து ஊரவர்களுக்கு தகவல் கொடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பொலிஸார் அங்கு சென்றபோது மரத்துக்கு கீழ் குழந்தை ஒன்றும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

இரண்டு சடலங்களையும் மீட்டு பொலிஸார் மந்திகை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். மரணவிசாரணைகளின் பின் சடலங்களை உறவினரிடம் ஒப்படைப்ப உத்தரவிடப்பட்டுள்ளது.

இளம் குடும்பஸ்தரான மகேஸ்வரராஜாவுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் குடும்பப்பிரச்சினை காரணமாக விவாகரத்துக் கோரி பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுவருவதாகவும் நீதிமன்றப் பணிப்புக்கமைய இவர்கள் இருவரும் பிரிந்து வாழ்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மகேஸ்வரராஜா தனது குழந்தையை கொலை செய்துவிட்டு பின்னர் தனது உயிரையும் மாய்திருக்கலாம் குழந்தையின் சடலத்தின் அருகில் சோடா போத்தல் மற்றும் 'டிப்பி டிப்பி' போன்ற பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துடன், இது தொடர்பில் மேலதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தனர்.

(ஐ-108-173-106)

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்துக

## வலியுறுத்துகிறார் சுப்ரமணியம் சுவாமி

புதுடில்லி, ஜூன் 1

இலங்கை அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகநடைமுறைப்படுத்த வேண்டும். அது மிக விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்தியாவின் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்ரமணியம் சுவாமி.

நல்லதைக் கொடுத்தால் நல்லதே நடக்கும் என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் இது நடைமுறையாக்கப்பட வேண்டும். அதன்மூலம் கடந்த கால கசப்பான அனுபவங்கள் முறியடிக்கப்படும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:-

"தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதே. ஜெயலலிதாவின் தேர்தல் வெற்றியானது இலங்கைத் தமிழர் பிரச்சினையால் கிடைக்கப்பெறவில்லை. தி.மு.கவின் பல்வேறு ஊழல்கள் அம்பலமானதனால் அந்த வெற்றி கிடைத்தது. புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் வைகோ சொந்த தொகுதியில் தோல்வியை தழுவியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் பலவீனமான நிர்வாகமே இலங்கை சீனாவுடன் நெருங்குவதற்கான காரணமாக அமைந்துள்ளது.

வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். 13ஆவது திருத்தச் சட்டம் முதலில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதன்பின்னர் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# போதைப் பொருள் வைத்திருந்தோர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஹெரோயின் மற்றும் கஞ்சா வைத்திருந்த இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஹெரோயின் வைத்திருந்த நபர் 14 நாள்கள் விளக்கமறியலிலும், கஞ்சா வைத்திருந்த நபர் நாளை வரை விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். கொக்குவில் மற்றும் தாவடிப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் 99.7 மில்லிகிராம் ஹெரோயினையும், மில்லிகிராம் அளவில் பொதிசெய்யப்பட்ட கஞ்சா பக்கெட்டுக்களையும் கைவசம் வைத்திருந்த போது கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ற-4-106)



இலங்கைக்கு இந்தியாவுக்கும் இடையேயான பரஸ்பர உறவு மேம்பட வேண்டும் என்றும், இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தும் நேற்று யாழ்ப்பாணத்தில் விசேட பூசைகள் நடைபெற்றுள்ளன. இந்துசமயப் பேரவை மற்றும் இலங்கை, இந்திய இந்து மக்கள் நட்புறவுக் கழகத்தில் ஏற்பாட்டில் இந்த வழிபாடுகள் நடைபெற்றன. நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து பதாகைகளை ஏந்தியவாறு இந்துசமயப் பேரவையின் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமாள் ஆலயத்தை வந்தடைந்தனர். இந்த நிகழ்வில் மாணவர்கள் மற்றும் இந்து சமய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-14)

# இலத்திரனியல் கழிவுகளை சேகரிப்பதற்கு ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளுராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகம், உப அலுவலகம் மற்றும் பொதுச் சந்தைகள் என்பவற்றில் இன்று இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தமக்கு அண்மையாகவுள்ள மேற்படி இடங்களுக்குச் சென்று இலத்திரனியல் கழிவுகளை ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட உள்ளுராட்சி உதவி ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால், பாவனைக்கு உதவாத இலத்திரனியல் மற்றும் மின்சாதனங்களைச் சேகரிக்கும் முகாமைத்துவ வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உள்ளுராட்சி மன்றங்களினாலும் இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் நடவடிக்கைகள் இன்றைய தினம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரையில் பொதுமக்கள் தமது இலத்திரனியல் கழிவுகளை குறித்த குப்பைத் தொட்டியில் கொண்டு சென்று சேர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ற-5-14)

# கைதான மீனவரை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் அவசர கடிதம்

சென்னை, மே 2

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 33 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

இது தொடர்பில் இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"கடந்த 45 நாள்களாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மீன்பிடித் தடைக் காலம் முடிவடைந்த நிலையில், கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களில் 33 அப்பாவி மீனவர்களையும், அவர்களது 7 விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டார்கள் என்பதை மிகுந்தத் துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த3 ஆண்டுகளில்இலங்கை கடற்படையினரால் 76 கைது நடவடிக்கைகளாலும், 67 தாக்குதல் நடவடிக்கைகளாலும் இந்திய மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக முந்தைய பிரதமருக்கு நான் பலமுறை கடிதம் எழுதி, தூதரக ரீதியில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து, இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினேன். ஆனால், அதனால் எந்தப் பயனும் இல்லை.

இந்த நிலையில், கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 33 மீனவர்களையும், அவர்களது 7 விசைப்படகுகளையும் இன்று அதிகாலை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்துச் சென்றிருக்கிறார்கள். மீனவர்கள் அனைவரும் இலங்கையின் தலைமன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மத்தியில் புதிய அரசு பொறுப்பேற்றுள்ளதால், தங்கள் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், இலங்கை கடற்படையினரின் இந்த நடவடிக்கை, தமிழகம் முழுவதும் உள்ள மீனவர்கள் மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினையால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்புமீனவர்கள்இடையிலான பேச்சிலும் உரிய பயன் கிடைக்கவில்லை. இதற்கு முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் அலட்சியப் போக்கும் பலவீனமான அணுகுமுறையும்தான் காரணம். உங்கள் தலைமையின் கீழ், இந்திய அரசுஉறுதியானநிலைப்பாட்டை எடுக்கும் என்று நம்புகிறேன்.

தமிழக மீனவர்களின் துயரத்தை முழுமையாக போக்கும் வகையில், நிரந்தரத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த விவகாரத்தில், கடந்த ஆண்டுகளில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

எனவே, இந்தப் பிரச்சினையில் நீங்கள் நேரடியாகத் தலையிட்டு, வெளியுறவு அமைச்சகத்தின் மூலம் இலங்கை அதிகாரிகளை அணுகி, உடனடியாக 33 மீனவர்களையும், 7 விசைப்படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில், இந்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என நம்புகிறேன். உடனடி நடவடிக்கையை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்"- என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

MAJOR II
GLUCOMETER WITH LIFETIME Warranty
Low in Price - High in efficacy
வாழ்நாள் உத்தரவாதத்துடனான ஒரே ஒரு குளுக்கோ மீற்றர்
குறைந்த விலை நிறைந்த வினைத்திறன்
MAJOR II குளுக்கோ மீற்றர் உங்கள் இல்லம் தேடி வருகின்றது
நீங்கள் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரா?
02.06.2014 தொடக்கம் 12.06.2014 வரை கீழ்குறிப்பிட்ட
ஒரு தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு
உடனடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
B. ராஜ்குமார் - 077 240 5620, 021 222 0077, 072 6995010
நீரிழிவிலிருந்து விடுதலை பெற்று நலமே வாழ்க!
உங்களுடன் நாங்கள் இருக்கின்றோம்
VANIKAA SURGICALS
203, Hospital Road, Jaffna.
Phone: 222 0077 Fax 222 2445
Email: vanisurgi@sltnet.lk
Website: www.vanisurgi.com

# செங்கொடி சங்க ஸ்தாபகரின் ஆண்டு நினைவஞ்சலி

ஹட்டன், ஜூன் 2

மறைந்த பிரபல தொழிற்சங்கவாதியும் செங்கொடி சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ஓ.ஏ.இராமையாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி கடந்த சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அமைச்சர் டியூ.குணசேகர தலைமையில் ஹற்றனில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓ.ஏ.இரா மையாவின் பாரியார் நினைவு தீபம் ஏற்ற அன்னாரின் உருவப் படத்திற்கு அமைச்சர் டியூ.குணசேகர மாலை அணிவித்தார்.

மறைந்த தொழிற்சங்கவாதி ஓ.ஏ.இராமையா மலையகத்தில் தேயிலை தினத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தி கொண்டாடிய பெருமையை உடையவர். (ற-10)

பார்சல் சேர்விஸ்

லண்டனில் உள்ள
உங்கள் உறவுகளிட
மிருந்து துரித கதியில்,

பாதுகாப்பாக
பார்சல்களை
உங்கள் வீட்டு
வாசலில் பெற்றிட.
(Door to Door Service)
Perma
International Shipping Ltd.
Tel: 0044 208 668 0252
0044 793 119 7571
0044 793 955 0397

## எதிர்கால பாதிப்பை தடுக்க வாக்காளராகப் பதியுங்கள்

### வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

வாக்காளர்களின் தொகையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பை தடுப்பதற்கு ஒவ்வொருவரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யுமாறு வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

"பலரும் தமது கவனவீனத்தால் த்ம்மை வாக்காளராகப் பதிவு செய்வதிலிருந்து தவறிவிடுகின்றனர். இதனால் அவர்கள் தமது வாக்குரிமையை இழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்தநிலை மிக வேதனைக்குரிய ஒரு விடயம் ஆகும். இன்றுவரை பல தேர்தல்கள் நடைபெற்றும்மக்கள் பலர் தமது வாக்குரிமையைப் பதிவு செய்யத் தவறியதால் தமது வாக்குரிமையை இழந்துள்ளனர்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது வாக்குரிமையைத் தமது பிரதேச கிராம அலுவலர்கள் ஊடாக பதிவை மேற்கொள்ள முடியும்.

தமிழர்களாகிய நாம் இன்று வாக்காளர் எண்ணிக்கை குறைவால் நாடாளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கையிலும் வீழ்ச்சிப் போக்கை கண்டுள்ளோம். இதனால் எதிர்காலத்தில் மேலும் பல விளைவுகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகலாம். இந்த நிலையைப் போக்க நாம் அனைவரும் வாக்காளராகப் பதிவை மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும்.

வாக்குரிமை என்பது மிக முக்கிய ஜனநாயக ஆயுதம். எம்மை ஆளுபவர்களையும் எம்மை ஆள நினைப்பவர்களையும் தீர்மானிக்கும் சக்தி இவ் வாக்குரிமைக்கே உண்டு. இந்த நிலையை உணர்ந்தவர்களாக நாம் ஒவ்வொருவரும் எமது வாக்கைப் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயம் ஆகும்"- என்றார். (வ-14)

# பாடசாலைகளிலும் மத்தியஸ்தர் சபை

தென்மராட்சி, ஜூன் 2

நாட்டில் இயங்கும் மத்தியஸ்தர் சபைகளில் பணியாற்ற இளம்சமுதாயத்தினரை இணைப்பதற்காக பாடசாலைகளில் மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்படவுள்ளன.

பாடசாலை மத்தியஸ்தர் சபையில் 25 மாணவர்களும் ஐந்து ஆசிரியர்களும் பணியாற்றுவர்.

மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகளை மாணவ சமுதாயத்தில் உருவாக்கும்போது எதிர்காலத்தில் சிறந்த மத்தியஸ்தர்களை உருவாக்க முடியும் என்று நீதி அமைச்சு கருதுகிறது.

மேலும், மத்தியஸ்தர் சபைகளில் காணி பிணக்குகளும் வருவதால் இந்த பிணக்குகளை தீர்ப்பதில் மத்தியஸ்தர் சபையினர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு சட்டக் கல்லூரிகளில் மத்தியஸ்தர் தொடர்பான பாட நெறி உருவாக்கப்படுவதுடன் சட்டத்தரணிகளையும் சபையில் இணைப்பதற்கான ஏற்பாடுகளையும் நீதி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு தெரிவித்தார் நீதி அமைச்சின் யாழ்.மாவட்ட உத்தியோகத்தர் ப.சனாதன சர்மா.

சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் தவிசாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் ப.நடராஜாவுக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பிரிவுபசார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மத்தியஸ்தர் சபையின் பணியானது இரு துருவங்களாக பிணக்குகளுடன் வருபவர்களை உரிய மத்தியஸ்தம் செய்து இரு பகுதியினரையும் மகிழ்ச்சிப்படுத்தி அனுப்புவதேயாகும். மத்தியஸ்தர் சபையின் தீர்ப்பு எழுதுவது நோக்கமல்ல.

பிணக்குகளை முழுமனதுடன் ஆராய்ந்து அவற்றை எவ்வகையில் தீர்த்து வைக்க முடியும் என்று முடிவு செய்து இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி அனுப்ப வேண்டும். இதனாலேயே வாழ்வின் அனுபவஸ்தர்களான 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களாக சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் தவிசாளராகப் பணியாற்றிய ப.நடராஜா நீதிமன்றங்களில் பணியாற்றி சிறந்த அனுபவங்களைப் பெற்றுள்ளதால் சபைக்கு வரும் பிணக்குகளை இலகுவாகக் கையாண்டு இரு பகுதியினரையும் சமாதானம் செய்து வைத்துள்ளார்.

இதனால் நீதிமன்றுக்கு உதவும் வகையில் சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை செயற்பட்டு மாவட்டத்தில் சிறந்த மத்தியஸ்தர் சபையாக செயற்பட்டு வருகிறது"-என்றார். (வ-9)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

பளை, ஜூன் 2

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கான சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை இன்று திங்கட்கிழமை தொடக்கம் 7ஆம் திகதிவரை கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் அறிவித்துள்ளார்.

பிரதேசத்தில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும், காலம் கடந்த பிறப்பு, இறப்பு தொடர்பான பதிவு செய்தலும், முதியோர் அடையாள அட்டை, 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களும், தொலைந்த, பழுதடைந்த, திருத்தப்பட வேண்டிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

தேசிய மொழிகள் மற்றும் விண்ணப்பங்களுக்குத் தேவையான முத்திரைகள், புகைப்படம் எடுத்தல் ஆகியவை இலவசமாக வழங்கப்படும்.

இன்று திங்கட்கிழமை புலோப்பளை பொதுநோக்கு மண்டபத்தில் அல்லிப்பளை, புலோப்பளை, புலோப்பளை மேற்கு, கச்சாய் வெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவு மக்களும்-

நாளை செவ்வாய்க்கிழமை பளை பிரதேச செயலக மண்டபத்தில் பளை நகரம், தர்மக்கேணி, முல்லையடி, மாசார், தம்பகாமம், கோரன்பற்று ஆகிய பிரிவு மக்களும்-

ஜூன் 5ஆம் திகதி வியாழக்கிழமை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையின் அரசர்கேணி, இத்தாவில், வேம்பொடுகேணி பிரிவு மக்களும்-

ஜூன் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முகமாலை கிராம அலுவலர் அலுவலகத்தில் கிளாலி, முகமாலை பிரிவு மக்களும்-

ஜூன் 7ஆம் திகதி சனிக் கிழமை இயக்கச்சி அ.த.க. பாடசாலையின் இயக்கச்சி கோவில்வயல், முகாவில் ஆகிய பிரிவு மக்களும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## இளம் தொழில் முயற்சியாளர் 43 பேருக்கு யு.என்.டி.பி. நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 2

இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நோர்வே அரசின் உதவியுடன், யு.என்.டி.பியினால் 43 பயனாளிகளுக்கு நிதிக் கொடை வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் முன்னோடி யாக மேற்கொள்ளப்பட்ட இந் தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட 43 பயனாளிகளுக்கே நிதி வழங்கப்பட்டுள்ளது.



யாழ்.அரச அதிபர் பயனாளி ஒருவருக்கு உதவித்தொகையை வழங்கியபோது

இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வேலைத் திட்டத்தை நோர்வே அரசுடன் இணைந்து யு.என்.டி.பி நடைமுறைப்படுத்துகின்றது. இந்தத் திட்டம் இலங்கையில் 4 மாவட்டங்களில் முன்னோடியாக முன்னெடுக்கப்பட்டது. அதில் யாழ்.மாவட்டமும் உள்ளடங்கியுள்ளது. யாழ். மாவட்டத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளே இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.

கோப்பாய், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய 4 பிரதேச செயலர் பிரிவுகளுமே இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன. இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 43 இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு, அவர்களது தொழில் தன்மைக்கு ஏற்பவும், அவர்களால் வழங்கப்படவுள்ள வேலைவாய்ப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு லட்சம் அல்லது ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதி கொடையாக வழங் கப்பட்டது. யாழ்.மாவட்டச் செயலகத்தில் வியாழக்கிழமை இந்த நிகழ்வு, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது. (வ-5)

## கொழும்புத்துறை பகுதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு



கொழும்புத்துறை, ஜூன் 2

கொழும்புத்துறை, ஆனந்தன் வடலிப் பகுதியில் திருடர்களின் தொல்லை அண்மைய நாள்களில் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மக்கள் உறங்கியதும் தமது கைவரிசையைக் காட்டும் திருடர்களின் நடமாட்டத்தால் அந்தப் பகுதியில் இரவு வேளைகளில் அச்சத்துடன் பொழுதைக் கழிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சென்.மேரிஸ் முதலாம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் கிணற்றின் அருகே பொருத்தப்பட்டிருந்த தண்ணீர்ப் பம்பி (மோட்டர்) கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடர்களால் பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் விதானையார் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த மோட்டர் கடந்த வாரம் களவாடிச் செல்லப்பட்டுள்ளது.

அதேவேளை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய சைக்கிள் ஒன்று கடந்த வாரம் இரவு நேரம் மாயமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் திருடர்களின் அட்டகாசம் குறைவடையவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-135)

## தமிழரின் எதிர்கால இருப்பை தீர்மானிப்பது வாக்குகளே!

### வாக்களிக்கத் தகுதியானோரை பதிவு செய்ய வலியுறுத்துகிறார் போக்குவரத்து அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழ் மக்களின் எதிர்கால இருப்பைத் தீர்மானிப்பது வாக்குகளே. எனவே முதலில் வாக்களிக்கத் தகுதியான தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று, தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் போக்குவரத்து, மீன்பிடி, வர்த்தக, வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களில் பெரும்பாலானவர்களுக்கு வாக்குரிமை இருக்கவில்லை. போர்க் காலத்தில் எந்தக் கிராமங்களிலும் சரியான முறையில் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது அரசியல்வாதிகளாலும், அரசியல்வாதிகளால் ஆளப்பட்ட அரச அதிகாரிகளாலும் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டது.

போருக்குப் பின்னரான ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல், இறுதியில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்களது வாக்குகளே அதிகம் இரத்துச் செய்யப்பட்டன. இனிமேல் அவ்வாறான தவறுகள் இடம்பெறக் கூடாது என்றால் தமிழ் மக்கள் அனைவரும் முதலில் வாக்காளர்களாக மாறவேண்டும்.

**2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களில் பெரும் பாலானவர்களுக்கு வாக்குரிமை இருக்க வில்லை. போர்க் காலத்தில் எந்தக் கிராமங்களிலும் சரியான முறையில் பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை.**

எனவே ஜூன் மாதம் முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்படும் வாக்காளர் தினத்தில் தொடங்கி ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் எமது மக்கள் அனைவரும் தமது வாக்காளர் இடாப்புக்களை பரிசீலனை செய்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் எமது மக்களின் அசண்டையீனங்களால் எமது வாக்கு வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புபட்டு எமது தொகுதிகளுக்கான நாடாளுமன்ற ஆசனங்களும் குறைக்கப்பட்டுள்ளமையும் யாவரும் அறிந்ததே.

எனவே நீங்கள் உங்கள் பதிவுகளை பரிசீலனை செய்யும்போது அயலவருக்கும் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களும் பதிவுகளை மேற்கொள்ள உதவுங்கள்"- என்றுள்ளது. (வ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**அன்னபூரணம் செய்வேத்தி**



பிறப்பு
03.08.1924

இறப்பு
03.05.2014

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
அன்போடு எம்மை வளர்த்து
ஆளாக்கி மேதினியில் எம்மை மேலோராய்
வாழச் செய்த அம்மாவே
நன்றியுணர்வுடன் இந்நாளில் ஆண்டவரில்
உங்கள் ஆன்மா இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (48678)(3.6.4) பிள்ளைகள்.

# முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் உருக்குலைந்து காணப்பட்ட சடலம் ஒன்றைப் பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் வெளிச்சவீட்டு வீதியைச் சேர்ந்த ஆ. தொம்மைப்பிள்ளை (வயது 72) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நாகர்கோவில் தெற்குப் பகுதியில் மக்கள் குடியிருக்க அனுமதிக்கப்படாத,மிதிவெடி அபாயமுள்ள பிரதேசத்தில் உள்ள சேதமடைந்த வீடு ஒன்றுக்குள்ளேயே தூக்கில் தொங்கிய நிலையில் சட லத்தை அப்பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடு பட்டிருந்த பணியாளர்கள் கண் டுள்ளனர்.

இதுகுறித்து பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு சென்ற பொலி ஸார் சடலத்தை மீட்டனர். இவர் சுமார் ஒரு வாரங்களுக்கு முன்னர் இறந்திருக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த 26 ஆம் திகதி முதல் காணாமற்போயிருந்தார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-106-108)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிற்றம்பலம் இந்திராதேவி**
(இளைப்பாறிய ஆசிரியை,
புத்தளம் இந்துக் கல்லூரி,
புத்தளம் சென். மேரிஸ் மகா வித்தியாலயம்)

கண்ணிமைக்கும் கணப் பொழுதில்
ஓராண்டு ஆனதம்மா!
ஆறவில்லை எம் துயரம்
அன்புறவே நீர் மறைந்த நாள் முதலாய்
ஆறாத் துயரில் வாடுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இந் நாளில் இறைவனை -
- வேண்டுகின்றோம்

தோற்றம் 08 . 09 . 1951
மறைவு 13.06.2013

மருதங்கேணி தெற்கு,
தாளையடி. (C-13962)

அம்மா, தங்கை
தம்பிமார் குடும்பத்தினர், உறவினர்கள்.

# இன அழிப்புக்காட்சிகளைப் பார்த்து கண்ணீர் விட்டனர் வெளிநாட்டவர்

### டென்மார்க்கில் நடைபெற்றுவரும் தொடர் கவனவீர்ப்பில்

டென்மார்க்கின் ஹெறால்போக் நகரத்தில் மே-18 முள்ளிவாய்க்கால் கவனவீர்ப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளன.

ஹேறால்போக் நகரத்தில் நடைபெற்ற நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான டெனிஸ் மற்றும் வேற்றின மக்கள் இன அழிப்புக் கோரக் காட்சி களைக் கண்டு கண்ணீர் விட்டனர்.

உலகில், அநாகரிகமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் மனித நேயம் அறவே அற்ற, இலங்கை அரசைக் கண்டிக்கத் தவறிய, ஐ.நா. வையும் கடுமையாக விமர்சனம் செய்தார்கள்.

மானிட வரலாற்றில் இப்படி ஒரு இனப்படுகொலை இது வரை நிகழ்ந்ததில்லை. இது மிகவும் கண்டிக்கத்தக்கதென, தங்களின் ஆதங்கங்களை முன்வைத்தார்கள்.

ஆயிரக்கணக்கான மக்களை முள்ளிவாய்க்கால் என்ற குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்க வைத்து, சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட ஆயுதங்களை திட்டமிட்ட ரீதியில் பயன்படுத்தி, சாட்சிகள் அற்ற போரை நடத்தி இலங்கையில் ஒரு இன அழிப்பை இலங்கை அரசு அரங் கேற்றியது.

தொடர்ந்தும் எமது தாயக பூமியில் திட்டமிட்டு மிக வேகமாக சிங்கள குடியேற்றங்களையும் நடத்தி, தமிழர் நிலப்பரப்பில் எமது கலாசார, பண்பாட்டு சின்னங்களை அழித்தும் பௌத்த சிலைகளை நிறுவியும், சிங்களப் பெயர் மாற்றங்களைச் செய்தும் எமது தாயக பூமியை ஆக்கிரமித்து வருகின்றது.

அதைத் தடுப்பதற்காக டென்மார்க் அரசு உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்த நிகழ்வில் டெனிஸ் மக்களுக்கு டெனிஸ் மொழியில் திசைகள் இளையோர் அமைப்பினரால் விளக்கம் கொடுக்கப்பட்டதுடன், துண்டு பிரசுரங்கள் வழங்கி இலங்கை மக்கள் மீது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற இன அழிப்பை விளங்கப்படுத்தியுள்ளார்கள்.

(வ)

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி விமலாவதி மகேந்திரம்



வேம்பிராய் வீதி, மந்துவில் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாவதி மகேந்திரம் நேற்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தி - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் மகேந்திரத்தின் அன்பு மனைவியும் கந்தசாமி, தெய்வேந்திரம்பிள்ளை (ஜேர்மனி), மகேஸ்வரி (சுவிஸ்), திரவியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரதீஸ் (ஆசிரியர் - கிளி/ இராமநாதபுரம் ம.வி), பிறேமலதா, சதீஸ்,தினேஸ், பிரசாந்தினி (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2014 - கலைப்பிரிவு மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயவனிதா (ஆசிரியை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), ஆனந்தகுமார் (ஆனந் வெல்டிங்) ஆகியோரின் மாமியாரும், டினுஷாந், கேனுஷாந்,நர்மதா, தேனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 02.06.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பிராய் வீதி, மந்துவில்,
கொடிகாமம். (C/13960)

தகவல் :
ம. பிரதீஸ் (மகன்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில்
ஆசிரியராகப் பணிபுரியும்

**சுந்தரலிங்கம் சுதாகர்**
(B.A, P.G.D.E)

அவர்கள் 29.05.2014 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர் பதவிகள் பெறுவதற்கும் இறைவனின் ஆசிகளை வேண்டுகின்றோம்.

*பல்லாண்டு வாழிய! வாழிய!!*
*சிறப்பெல்லாம் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்*

Congratulations

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்,
ஸ்ரீ சுதனா நகை மாடத்தினர்.

48687

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் சின்னத்துரை



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் சின்னத்துரை சனிக்கிழமை (31.05.2014) அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற செல்லம்மாவின் பேர்த்தியும் காலஞ்சென்ற நாகலிங்கம் - பொன்னு தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சிவராமலிங்கம் (ஓய்வூதியர் - உள்ளூராட்சி சேவை திணைக்களம்), தயாகுணலிங்கம் (ஓய்வூதியர் - உள்ளூராட்சி சேவை திணைக்களம்), நஞ்சினிதேவி (ஜேர்மனி), ராஜினிதேவி (ஜேர்மனி), ஜோதிலிங்கம் (பிரான்ஸ்), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பலீலா, சிவாஜினி, சற்குணராஜா, சிவாநந்தராஜா, நிர்மலாதேவி, காயத்திரி, ஆகியோரின் அன்பு மாமியும் ராகுலன் (கொமர்ஷல் வங்கி, வவுனியா), தீபிகா, ரூபிகா, ராகேஸ், கவிதா (பிரான்ஸ்), தினேஸ், ஹம்ஷா (பிரான்ஸ்), மயூரா (ஜேர்மனி), உமேஸ் (பிரான்ஸ்), துஷாரா, மகரிஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற மதுமிதன் மற்றும் மதுமிலா (ஜேர்மனி), சுகிர்தன், மினுஷா (ஜேர்மனி), மாலவன், நயன், ஜோதிதா (பிரான்ஸ்), திகள், மிதிலன், லக்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மகிமை, மிகன் (ஜேர்மனி), திஷானி, திபானி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2014) பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிவராமலிங்கம் (சின்னராசா) 0776623657
சி.தயாகுணலிங்கம் (குஞ்சன்) 0776624432
(மகன்மார்.)

இல. 94, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (48685)

## மரண அறிவித்தல்

### செல்லையா சங்கரலிங்கம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சங்கரலிங்கம் நேற்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தையா - மீனாட்சி தம்பதியரின் மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரி அவர்களின் மைத்துனரும், சச்சிதானந்தசிவம், ஜெகதாம்பிகை காலஞ்சென்றவர்களான தசாவதாரம், கைலாம்பிகை மற்றும் அருட்சிவம் ஞானாம்பிகை, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் சிவசங்கரன் காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் கௌரிசங்கரன், ஜெயசங்கரன், சிவசெல்லம், உமாசங்கரன்,யோகசங்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தசொரூபி, அட்சயன், சத்தியரூபி, கலைச்செல்வி, திருஞானம், தலதா ஆகியோரின் மாமனாரும், சுவர்ணி, கரிணி, கிம்அட்சனா, கஜாலித்யா,சாயின்,அபிநயா, சௌம்யா, சரண்யா, சகானா,கேசிகா, துசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.06.2014) திங்கட்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரையும் நாளை( 03.06.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் மு.ப 11.00 மணி வரையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மு.ப 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப ஒரு மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
011-2363967,0776068693 (C/14434)

தகவல் :
குடும்பத்தினர்

# பொலிவியா செல்கிறார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு.ஜூன் 2
இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மாத நடுப்பகுதியில் தென் அமெரிக்க நாடான பொலிவியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
ஜி-77 எனப்படும், வளரும் நாடுகளின் அமைப்பின் 50 ஆண்டு நிறைவு நிகழ்வுகள் பொலிவியாவின் சான்டா குருஸ் நகரில் எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கையின் சார்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.
இந்த அமைப்பில் தற்போது 133 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.




மஹிந்த ராஜபக்ஷ

இது உலகிலுள்ள நாடுகளில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானதாகும்.
இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ச)


# ‘13’ ஐ நடைமுறைப்படுத்த அனுமதிக்க போவதில்லை

## அரசின் பங்காளிக் கட்சிகள் எச்சரிக்கை

கொழும்பு.ஜூன் 2
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியிருப்பதைப் போல, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமாக இருந்தால் அதனை கடுமையாக எதிர்ப்போம் என்று அரசின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளன.
இந்தியாவின் உத்தரவுப்படி செயற்பட முற்படுவதால் அரசு ஏற்கெனவே நெருக்கடியான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மேலும் அதே பாதையில் செல்வதற்கு அரசு முற்பட்டால் மோசமான விளைவுகளைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண ஒமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.



விமல் வீரவன்ச



வண ஒமல்பே சோபித தேரர்

இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பாற்றுவதற்காகவே மக்கள் அரசைத் தெரிவு செய்திருக்கின்றார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தானது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கூறினார்.
13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருக்கின்ற போதிலும், அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்தும் தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.
13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்தால் அது மிகப்பெரிய தவறாக இருக்கும். மக்கள் அதற்கு ஒரு போதும் அனுமதி வழங்கமாட்டார்கள். அரசு அவ்வாறான உறுதியை வழங்கினாலும் அதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தொழிற்சாலையில் தீ

கொழும்பு.ஜூன் 2
திவுலபிடிய, வெவகெதர பிரதேச தொழிற்சாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
தீ அணைப்பு வாகனங்கள் இரண்டு குறித்த பகுதிக்கு அனுப்பப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது என்று கம்பஹா தீயணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.
தீ விபத்தால் பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதோடு, உயிர்ச் சேதங்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளிவரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)



அம்பாந்தோட்டை கார்ல்டன் சிறுவர் பாலர் பாடசாலை சிறார்களுக்கு ஜனாதிபதியின் பாரியாரும், முதற் பெண்மணியுமான ஷிரந்தி ராஜபக்ஷ கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ச)

# சிங்கள இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும்

## கலாநிதி நிர்மால் ரஞ்சித் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 2
மாதுளுவாவே சோபித தேரரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தத் தமது ஒத்துழைப்பு வழங்கப்படும் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.
இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
கங்கொடவில சோம தேரரின் வருகைக்குப் பின்னர், கடந்த சில தசாப்தங்களாக சிங்கள பௌத்த இனவாதத்துக்குப் புத்துணர்ச்சி வழங்கப்பட்டுள்ளது.
விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அரசில் இருந்து ஒதுங்கி இருப்பதால் ஏற்பட்டுள்ள சிங்கள இன வாத முகாமின் பிளவைப் பயன்படுத்தி சிங்கள இனவாதத்தைத் தோற்கடிக்க வேண்டியது முக்கியமானது. இதற்காக மாதுளுவாவே சோபித தேரரைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.
90 ஆம் ஆண்டுகடைசியிலும் அதன் பின்னரும் சிங்கள பௌத்த அமைப்புகளுக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது.
கங்கொடவில சோம தேரரின் தலையீடு, அதன் பின்னரான ஜாதிக ஹெல உறுமய, வெகுஜன சுதந்திர முன்னணி, ஜே.வி.பி ஆகியன மிகவும் ஆக்கிர மிப்பு ரீதியில் சிங்கள இனவாதத்தைமுன்னெடுத்தன.
இதனையடுத்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், அல்லிமலர் அமைப்பு, அண்மைய கால பொதுபலசேனா, இராவணா பலய ஆகியன வன்முறைச் செயற்பாடுகளை ஆரம்பித்தன.
சிங்கள இனவாதத்தின் இரண்டாம் கட்ட எழுச்சியாகவே நான் இதனை காண்கின்றேன்.
எனினும் 80 ஆம் ஆண்டுகளில் சிங்கள இனவாதப் பாசறையில் முன்னணித் தலைவராக இருந்த மாதுளுவாவே சோபித தேரர் இன்று இனவாதம் இல்லாதவர்களுடன் இணைந்து செயற்படும் நபராக மாறியுள்ளார்.
இதன் காரணமாகவே சிங்கள இனவாதத் தேசியவாதிகள் மாதுளுவாவே சோபித தேரரை விமர்சித்து வருகின்றனர் - என்றார். (த)

# வாகன விபத்தில் 7 பேர் காயம்

கொழும்பு.ஜூன் 2
எட்டியாந்தோட்டை, அலிவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விபத்தின்போது காயமடைந்த ஐவர் கரவனல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை மேலும் இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
வாகன சாரதியின் நித்திரை கலக்கத்தால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
இந்த விபத்து தொடர்பில் எட்டியாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# காய்ச்சல் தொடர்பில் வருவோருக்கு இன்று முதல் விசேட பரிசோதனைகள்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

*கொழும்பு.ஜூன் 2*
*டெங்குக் காய்ச்சல் தீவிரமாக பரவும் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவுகளில் காய்ச்சல் தொடர்பில் சிகிச்சை பெற வருவோருக்குத் தனியான பரிசோதனைகளை மேற்கொள்ள் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.*
*இந்த விசேட வேலைத் திட்டம் இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று சுகாதாரப் பணிப்பாளர் பாலித மஹீபால தெரிவித்தார்.*
*இதற்கமைய நோயாளர்களுக்கான குருதிப் பரிசோதனை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும் என்று அவர் கூறினார்.*
*டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்கு பொதுமக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.*
*தமது வீட்டின் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது, தேவையற்ற விதத்தில் நீர் தேங்கும் இடங்களை இல்லாதொழிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.*
*இதேவேளை, டெங்குக் காய்சல் பரவும் 35 சுகாதார பரிசோதகர் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.*
*கொழும்பு, கம்பஹா, களுத்தறை ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் சுமார் 15 சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் டெங்குக் காய்ச்சல் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.*
*டெங்கு நுளம்பு பரவும் பகுதிகளில் இரசாயன வாயுக்களை வீசுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)*

# பணிப் பெண்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 2
தொழில் வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் பணிப் பெண்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
தற்போது வெளிநாடு செல்லும் பணிப் பெண்களின் எண்ணிக்கை 33 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
எனினும் வெளிநாடுகளிலுள்ள பணிப்பெண்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற கட்டடத் திறப்பு விழாவில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார். இந்த நிகழ்வில் நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

# பாலமுனைக் கிராமத்தில் 100 வீடுகள் நிர்மாணம்

## உடன்படிக்கை கைச்சாத்து

மட்டக்களப்பு.ஜூன் 2

மட்டக்களப்பு. பாலமுனை கிராமத்தில் வீடு வசதியற்ற வறுமையான நூறு குடும்பங்களுக்கான வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த வீட்டுத்திட்டம் இலங்கை ஹிறாபவுன்டேசன் மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஆகிய நிறுவனங்களால் சவூதி அரேபிய நாட்டு நிதியுதவியுடன் நிர்மாணிக்கப் படவுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நூறு வீடுகளைக் கொண்ட இந்த வீட்டுத்திட்டத்தில் முதல் கட்டமாக 60 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

**இந்த வீடுகளுக்கான பயனாளிகளை காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவு செய்யவுள்ளது.**

இந்த வீடுகளுக்கான பயனாளிகளைக் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவு செய்யவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3.500 பேருக்கு இலவச குடிதண்ணீரை வழங்குவதற்குரிய நிதியுதவியை வழங்கு. வதற்கான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. (ச)

# போலி நாணயத் தாள்களுடன் 8 பேர் பொலிஸாரால் கைது

திருகோணமலை.ஜூன் 2

திருகோணமலை, லிங்கநகர் பகுதியில் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான போலி இந்திய நாணயத்தாள்கள் வைத்திருந்த எட்டுப் பேரை கிண்ணியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக கிண்ணியா பொலிஸ் நிலையத்துக்கு அழைத் துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஒரே இலக்கத்தைக் கொண்ட சுமார் 30 லட்சம் பெறுமதியான போலி நாணயத்தாள்களை அவர்கள் பரிமாற்ற முனைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மாணவர் இடை விலகல் மட்டக்களப்பில் அதிகரிப்பு

## வறுமை நிலையை அடுத்து

மட்டக்களப்பு.ஜூன் 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமை நிலை அதிகமாகக் காணப்படுவதால் பாடசாலை மாணவர்களின் இடைவிலகலும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலர் கோ. தனபாலசுந்தரம் தெரிவித்தார்.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் மாணவர்களின் இடைவிலகல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு எமது பிரதேச செயலகத்தால் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஓரிரு வருடங்களில் இந்தப் பிரச்சினையை முற்றாக நிவர்த்தி செய்ய முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


# நினைவஞ்சலி

34ஆம் ஆண்டு



செல்வி
கந்தசாமி இந்திராதேவி
உதிப்பு : 09.07.1955
உதிர்வு : 03.05.1980

25ஆம் ஆண்டு



செல்வன்
கந்தசாமி சிவகுலசிங்கம்
(இராசன்)
(இ.போ.ச.பருத்தித்துறைசாலை-1989)
ஆண்டவன் படைப்பு : 09.12.1966
அந்நியன் அழிப்பு : 26.07.1989

முதலாம் ஆண்டு



செல்வன்
சுப்பிரமணியம் பார்த்தீபன்
(MSc பொறியியல் மாணவன்-2011
பேராதனைப் பல்கலைக்கழகம்,
தொடர் கற்கை, லண்டன் பல்கலைக்கழகம்)
மலராக புலோலியில் : 05.12.1983
வாடியது லண்டனில் : 02.06.2013

மண ஓலை வரையாமல் செல்வங்களே மாண்ட ஓலை வரையலாச்சே
மண ஓலை வரைந்திருந்தால் சற்று மன அமைதியடைந்திருப்போம்
மாண்ட ஓலை வரைந்ததனால் நிம்மதி நாம் இழந்தோம்.

**எங்கள் இளவலே பார்த்தா!**
அந்நிய நாட்டில் நடுநிசியில் ஆருயிர் உறவுகள் அருகிலில் உனைமீட்க போராடி விழித்திருக்க
உன்னில் பாசம் வைத்த காலன் உனைப் பாசக் கயிறெறிந்து பறித்து சென்றானே
தடுக்க முடியவில்லை தளம்புகின்றோம் யாரை நோவோம் யார்க்கெடுத்துரைப்போம் ஆண்ட நின் அருளில்லையானால்....
இறைவா??? கொடிய புற்றுநோயை இவ்வையகத்திலிருந்து இல்லாதொழி இல்லையேல் மாற்று மருந்தைத் தா......
இக்கொடிய நோய் இல்லாதொழிய பிரிந்தவர்கள் அரனின் அடியில் சாந்தியுற எல்லோரும் பிரார்த்தியுங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (02.06.2014) திங்கட்கிழமை செல்வன் பார்த்தீபனின் நினைவாக இவரின் மாமா சிவகுலசிங்கம் அறிவாலயம் சாரையடி வீரபத்திரர் கோயிலடியில் நினைவு அன்பளிப்புக்கள் வழங்கப்படும். நேரம் முற்பகல் 10.30.

1) புலோலி தெற்கு மேற்கு J/411 பிரிவில் தர்மப்பணம் பெறுபவர்களுக்கு பண அன்பளிப்பு. (70 வயதிற்குட்பட்டவர்கள்)
2) வன்னி உறவுகள் இருவருக்கு பண அன்பளிப்பு
3) வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குறிப்பிட்ட சிலருக்கு வங்கியில் நிலையான வைப்பிலிட்டு பணம் வழங்கப்படும்.
4) புதிதாக அமைக்கப்பட்ட பெரிய தேவநத்தாய் முன்பள்ளிக்கு மின்சார இணைப்புக்கு பணம் வழங்கப்படும்.

புலோலி
(க.பாலஸ்கந்தராசா)
தொலைபேசி - 021 226 0068

குடும்பத்தினர்

(48527) (7.6.3)


# அபிவிருத்திக்கு அரசு அதிக நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் அதாஉல்லா தெரிவிப்பு



ஏ.எல்.எம்.அதாஉல்லா

மட்டக்களப்பு.ஜூன் 2

பொருளாதார அபிவிருத்திக்காகவே அரசு அதிகளவிலான நிதியொதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளது. அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் லொயிட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் உட்கட்டமைப்பு வேலைகள் மற்றும் வாழ்வாதார உதவிகளையும் மேற்கொள்ள முடியும்.

இதற்கமைய வருமானம் குறைந்த குடும்பங்களை இனம் கண்டு அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் மக்கள் பணிகளில் யாரும் அரசியல் செய்யக்கூடாது. அரசியலுக்காக மக்களை குழப்புவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதனால் அபிவிருத்திப் பணிகளே பாதிப்படைகின்றன- என்றார். (ச)

# தமது சுகபோகத்துக்கு சலுகைகளை அரசிடம் கேட்கிறது வடமாகாண சபை

## இவ்வாறு கூறுகிறார் யாழ். மாநகர சபை முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழ் மக்களுக்கு பசப்பு வார்த்தைகளைக் கூறிவிட்டுத் தமது சுகபோகத்துக்கான சலுகைகளையே அரசிடம் கேட்டு நிற்கிறது வடமாகாண சபை. அவர்களது போலியான நாடகத்தை மக்கள் அறியும் காலம் விரைவில் வரும் என்று யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் தொழிலாளர்கள் 72 பேருக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது தலைமையுரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கும்போது:-

மக்களுடைய வாழ்வாதாரத்தை அதிகரிக்கின்ற வகையிலே நாம் பல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பை வழங்குகின்ற ஆண்டாக இந்தஆண்டு திகழ்ந்து வருகிறது. 240 பேர்வரை தொழில் வழங்கப்படவுள்ளது.



யாழ்.மாநகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்கள் 60 பேருக்கும், நூலக உதவியாளர்கள் 12 பேருக்குமாக 72 பேருக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. தொழிலாளர் ஒருவருக்கான நியமனத்தை மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் வழங்கி வைத்தார்.

800 மில்லியன் ரூபா அளவில் மாநகர சபையின் நிதியைப் பிரயோகித்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதிகள் பல காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன. மாற்றியிருக்கின்றோம்.

மாகாண அரசின் பசப்பு வார்த்தைகளால் தமிழ் மக்கள் மாற்றப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தியில் சிறிது தாமதம் ஏற்பட்டது.

அவர்களுடைய போலியான நாடகங்கள் மக்களுக்கு இன்று வெளிப்படத்தொடங்கியுள்ளன. சட்ட விதிமுறைக்கு மாறாக சுகபோகங்களை அனுபவிப்பதற்காக வாகன விலக்கு பத்திரத்தை மாகாண சபை பெற்றுள்ளது.

மக்கள் சேவை செய்யும்போது வசதி வாய்ப்புக்களை தூக்கி எறியப்பட வேண்டும். ஆனால் அவர்கள் தமிழ் மக்களின் கலாசாரத்தை மீறி நடந்து கொள்கிறார்கள். மக்கள் மிகக் குறுகிய காலத்தில் அவர்களது நாடகத்தை அறிந்து கொள்வார்கள்.

ஆனால் நாம் ஆட்சிக்கு வந்த காலத்தில் 60 வீதமான சேவைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் ஊடகங்கள் அதனை இருட்டடிப்புச் செய்கிறார்கள். எனவே ஊடகங்கள் எமது செயற்பாடுகளை எழுச்சியான முறையில் மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும், என்றும் தெரிவித்தார். (வ-14-7)



புனித மரியாளின் திருவிழாவையும் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய மாதா கூட்டத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு அந்தோனியார் ஆலயத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற திருவிழாவில் மரியன்னையின் திருச்சொரூப ரதப்பவனி இடம்பெற்றபோது... (வ-135)

## பாவனைக்குதவாத மின்சாரப் பொருள்கள் சேகரிப்பு

தேசிய பாவனைக்கு உதவாத இலத்திரனியல் மற்றும் மின் சாதனங்களின் முகாமைத்துவ வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப.அலுவலக பகுதியில் பாவனைக்கு உதவாத மின்சார கழிவுப் பொருள்கள் அகற்ற ஏற்பாடாகியுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அருகிலும், நீர்வேலி வடக்கு காமாட்சியம்மன் சனசமூக நிலைய முன்றிலிலும், நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகிலும், நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை பாடசாலைக்கு அருகிலும் மற்றும் இராச பவானி களஞ்சிய முன்றிலிலும் மேற்படி மின்சாரக் கழிவுப் பொருள்கள் பிரதேச சபை வாகனங்களில் சேகரிக்கப்படும் என வலி.கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி தி.தவராஜா தெரிவித்துள்ளார். (க)

# சமய சந்நிதிகளில்

வேலணை, ஜூன் 2

வேலணை மேற்கு, பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறும் உற்சவத்தில் 10ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், மறுநாள் தேர்த்திருவிழாவும், 12ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

வைரவப் பொங்கல் 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது. (க)

♦♦♦

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 20 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத்திருவிழாவும், 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (வ-11)

♦♦♦

துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க)

♦♦♦

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. 11ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற் சவமும், மறுநாள் முற்பகல் 11.50 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். மேலும் தீர்த்தத் திருவிழாவன்று காலை 8 மணிக்கு மாணவர்களுக்கான சமய அறிவுத் தேர்வு இடம்பெறும். இதற்கான பரிசில்கள் 13ஆம் திகதி வழங்கப்படும். (க)

♦♦♦

சாவகச்சேரி சப்பச்சிமாவடி விநாயகர் ஆலய பெருந் திருவிழாநாளைசெவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். சிவஸ்ரீ சிவானந்த கணேசக் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் இடம்பெறும். (க-9)

♦♦♦

ஏழாலை அத்தியடி அருள்மிகு விநாயகர் திருக்கோயில் மஹோற்சவப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை மு.ப.10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 12 ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். அருளாசியை நல்லை ஆதீன சிவாச்சாரியார் கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆற்றுவார். (ஓ)

♦♦♦

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை மு.ப.10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங் கள் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழா கிரியைகள் கிரியா சிரோமணி, சிவாகம சேகரர் சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (வ-9)

♦♦♦

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை காலை விசேட பூசைகள் ஆராதனையுடன் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றம் இடம்பெறும்.

தொடர்ந்து 14 ஆம் திகதி வரை திருவிழா இடம்பெறும். தினமும் காலை 6.30 மணிக்கு பூசைகள் இடம்பெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-36)


# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

விக்கினராஜன்-கோபிகா தம்பதிகளின்
செல்வப் புதல்வனும்
அமரர் இரத்தினசோதிராஜா
மற்றும் தயாநிதி தம்பதியரின்
அன்புப் பேரனுமாகிய

3rd HAPPY BIRTH DAY
Vignarajan-Vithuran



செல்வன் வி. விதுரன்

இன்று (02.06.2014) திங்கட்கிழமை
தனது மூன்றாவது பிறந்தநாளை
தனது அன்புப் பெற்றோருடன் கொண்டாடுகின்றார்.
இவரை விநாயகர் அருள்பெற்று பாரினில்
பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பம்மா (யாழ்ப்பாணம்) அம்மம்மா (லண்டன்)
பெரியஅப்பப்பா + அப்பம்மா (கனடா, ஆஸ்திரேலியா, திருநெல்வேலி)
சின்னஅப்பப்பா + அப்பம்மா (ஆஸ்திரேலியா, அச்சுவேலி, கொழும்பு)
மாமா + மாமி→ சிவானு, சிவாஸ்தி (கனடா)
பெரியப்பா + பெரியம்மா→ ஓவியா (ஆஸ்திரேலியா)
பெரியப்பாமார்: (சுதாகரன், கஜன்) - ஆஸ்திரேலியா, அபிராம் (சிங்கப்பூர்)
(சதீஸ்குமார், கிஷோக்குமார்) - கனடா
மாமிமார்: சங்கீதா-(ஆஸ்திரேலியா), (அனித்திரா, யசினியா, தர்சா, மதுசா) - அச்சுவேலி
(உசாந்தினி, தர்சினி) - கொழும்பு
சித்தப்பாமார்: (மஞ்சுகான், கஜீராம், பிரியந்தன்) - அச்சுவேலி

யாழ்ப்பாணம். திருமதி த.இரத்தினசோதிராஜா (அப்பம்மா)

(48565)(7.6.3)



# அக்கினி வேதாகமப் பாடசாலை

## இலவச புதிய பயிற்சிப் பிரிவு ஆரம்பம்

இயேசு கூறினார் "அறுவடையோமிகுதி வேலையாள்களோ கொஞ்சம்"
இயேசுக் கிறிஸ்து பார்வையாளர்களை உருவாக்க வரவில்லை சீஷர்களை உருவாக்க வந்தார்.

பயிற்சியின் காலப்பகுதி: ஒரு வருடம்

கல்வியின் இலக்கு:
*இறையியலும் பயிற்சியும் (Theology and Practice)
*சுவிஷேசத்தை அறிவிக்கவும் சபையை ஸ்தாபிக்கவும் (Mission for Evangelism& Church Planting)
*நற்சான்று பயிற்சி (Character Training)
*ஒழுக்கமான அர்ப்பணிப்பு (Disciplined Devotion)

விண்ணப்ப ஆரம்பதிகதி: 02 June 2014
விண்ணப்ப முடிவுதிகதி: 15 June 2014

நீங்கள் இயேசுவின் சீஷர்களாக மாற விரும்புகிறீர்களா?
கர்த்தர் வைத்திருக்கிற அழைப்பை அறிந்து அவருக்காக அனலாகச் செயற்பட வாஞ்சிக்கிறீர்களா?
அதற்குரிய பயிற்சியை வேதாகமப் பாடசாலையில் மேற்கொள்ள விரும்புகிறீர்களா?

மேலதிக தொடர்புகளுக்கு: 021 790 4469 (48631)(4.9.6)
72/4, சொலமன் லேன், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
Email:fireschool.sl@gmail.com / Web:www.gpwmission.com

# ரவி - சரத் பொன்சேகா சந்திப்பு

## அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 2

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் வீட்டில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு சரத் பொன்சேகாவின் அறிவிப்புக்கு அமைய நடைபெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை, அரசியல் நிலைமைகள், அடுத்து நடைபெறவுள்ள தேர்தல் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

அரசுக்கு எதிரான சகல சக்திகளும் ஒன்றாக ஒன்றிணைய வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச நிகழ்ச்சி நிரலை செயற்படுத்திவரும் பின்னணியில் இருக்கும் சில தரப்பினர் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். (ச)

# வருடாந்தம் 5 இலட்சம் பேர் புதிய வாக்காளர்களாக பதிவு

## தேர்தல் ஆணையாளர் தகவல்



மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஜூன் 2

வருடாந்தம் 5 லட்சம் பேர் நாட்டில் புதிய வாக்காளர்களாக இணைந்து கொள்கின்றார்கள் என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வருடாந்தம் வயது முதிர்ந்த மற்றும் பல்வேறு காரணங்களால் உயிரிழப்போர் தொகை 2 லட்சம்வரை உள்ளதால், வாக்காளர் இடாப்பில் புதிதாக 3 லட்சம் பேர் பதி வாகின்றார்கள். வாக்காளர் இடாப்பில் ஒவ்வொரு வருடமும் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்வோர் மட்டுமே வாக்களிக்கும் உரிமையைப் பெறுகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் இளைஞர்களே அதிகளவில் தேர்தல் இடாப்பில் தம்மைப் பதிவு செய்துகொள்கின்றார்கள். மலையகப் பிரதேசங்களிலிருந்து கொழும்பில் தொழிலுக்காகத் தங்கியுள்ள இளைஞர், யுவதிகள் தம்மை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை. தேர்தல் வன்முறைகளைப் பொறுத்தவரை நாட்டில் எங்கும் இப்போது வன்முறைகள் நடைபெறுவதில்லை என்றே கூறவேண்டும். -என்றார். (ஐ)

### பொலிஸார் மீது தாக்குதல்

மாத்தளை, வில்கமுவ பகுதியில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நேற்று முன்தினம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் வில்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாவு வீடொன்றில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)


Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm
Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm


(சி.14429) (6.3)
Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**விற்பனைக்கு**
நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 492 2950/ 077 911 6052 (48616) (45.6.3)

**RENT**
Two Bedroom one with A/C Fully Furnished Apartment with sea view in Wellawatte. Available for Foreigners of Sri Lankan origin for short stays. No Brokers.
Contact : 077 339 3477 (48635) (7.6.3)

**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**
அராலி வீதி, சங்கானையில் நல்ல நிலையில் உள்ள பெரிய நாற்சார் வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 473 3893 (48630) (7.6.3)

**அம்மா முதியோர் இல்லம்**
எமது சுன்னாகத்தில் இயங்கிவரும் புதிய கிளையில் முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் 10,000 ரூபா அறவிடப்படும்.
தொடர்பு: 077 712 6857, 077 712 6859 (48579) (7.6.3)

**பாடசாலை சேவை ஆரம்பம்**

எமது ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான பாடசாலைகளுக்கு கீரிமலையில் இருந்து ஆரம்பமாகி மாவிட்டபுரம், தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம், கந்தரோடை, சுன்னாகம், மருதனார்மடம், இணுவில், கே.கே.எஸ். வீதி ஊடாக குறைந்த கட்டணத்தில் நம்பிக்கையும், பாதுகாப்புமான பாடசாலை சேவை ஆரம்பம்.
தொடர்பு: 077 130 0190 (48672) (7.6.3)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
**திருமண அழைப்பு**
அன்புடையீர்!
நிகழும் மங்கலகரமான ஜய வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் (02.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 9.50 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள பூச நட்சத்திரமும் விருத்தி யோகமும் கடக இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,
திரு.திருமதி பாலகிருஷ்ணன் தம்பதிகளின் புதல்வன் திருநிறைசெல்வன் **சிவபாலன்** அவர்களுக்கும்
திரு.திருமதி வரதராஜன் தம்பதிகளின் புதல்வி திருநிறைசெல்வி **வளர்மதி** அவர்களுக்கும் (உடுவில் பாலகதிர், யாழ்நீதிமன்றம்)
இறைவன் திருவருள் துணைகொண்டு நாச்சிமார் கோயில் மகாமாரியம்மன் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
திரு.திருமதி பாலகிருஷ்ணன் குடும்பத்தினர். கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
திரு.திருமதி வரதராஜன் குடும்பத்தினர். சேச் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(இருவீட்டார் அழைப்பு)
T.P. No : 077 252 9592 (48675/7.6.3)

**மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்!**
மகத்தான மக்கள் சேவையில் ஒன்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து 10ஆவது ஆண்டில் சேவை தொடங்கும் எமது மதிப்பார்ந்த யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள


**இராஜேஸ்வரி றெக்ஸ்ரைல்**
☎ 021 222 6953, 077 722 5310
ஸ்தாபனத்தாருக்குஎமது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
இன்றுபோல் என்றும் இமயமாய் உயர்ந்து வண்ணை காமாட்சி அருளால் வர்த்தகத்தில் நன்கு விளமான சேவையாற்றி சிறப்புடன் செயலாற்ற வேண்டுமென்று சிந்தை மகிழ்ந்து உளமார வாழ்த்துகின்றேன்.
வாழ்த்துபவர்:
வேணுகா கொமினிகேஷன்
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
Best Wishes
(C/13957/7.6.3)

**புதுக்கடை திறப்பு விழா**

மீண்டும் புதுக்குடியிருப்பு மண்ணில் புதுப்பொலிவுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கவுள்ளது
**தெய்வம் புடைவை மாளிகை**



எதிர்வரும் 04.06.2014 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறப்பு விழா செய்யவுள்ளோம் என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.
தெய்வம் புடைவை மாளிகை
புதுக்குடியிருப்பு.
(சி/13955)(1.3.6)

## நாகபூஷணி ஆலயத் திருவிழா குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்போக்குவரத்துச் சேவைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதார, குடிதண்ணீர் வசதிகள் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன. நயினாதீவு படகு உரிமையாளர்கள் சங்கம், கடற்படை, பொலிஸ் அதிகாரிகள், இ.போ.ச. மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், தொண்டர் அமைப்புக்கள், சுகாதாரப் பகுதியினர் உட்படப் பலர் கலந்துகொண்டு திருவிழா சிறந்த முறையில் இடம்பெற கருத்துக்களை வழங்குமாறு கேட்கப்படுகின்றனர். நயினாதீவு அம்பாள் ஆலயத் திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (வ-7)

# அனுமதியுடன் தறித்த மரத்துண்டங்களை எடுத்துச் செல்லப் பொலிஸார் இடையூறு

## சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்களில் அனுமதி பெறப்பட்டு தறித்த மரங்களை மர அரிவு ஆலைகளில் கொடுத்து துண்டங்களாகக் கொண்டு செல்லும் வேளையில் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு உள்ளாவதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச செயலகங்களில் பெறப்பட்ட அனுமதிப் பத்திரம் வைத்திருந்தாலும் அரிந்த மரங்களைக் கொண்டு செல்லும் போது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நீதிமன்று வரை கொண்டு செல்வதால் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உரிய திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் அனுமதி மறுக்கப்பட்ட மரங்கள் தவிர்ந்த ஏனைய வெட்டு மரங்கள் மற்றும் அத்தகைய வெட்டு மர வகைகளால் செய்யப்பட்ட ஏதாவது பொருளை இடம்பெயர்த்தல் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் அரச வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

> அரச வர்த்தமானிப் பத்திரிகை மூலம் சகல அரச அதிபர்கள் பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கருங்காலி, களுமெதிரிய, நெதுன், முதிரை மற்றும் வெண் சந்தன மர வகைகள் தவிர்ந்த ஏனைய எல்லா மரவகைகளிலும் அரிந்த மரங்கள் மரப் பொருள்கள், உருளைக் கம்பங்கள் மற்றும் விறகுகள் ஆகியவற்றைக் கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கினிசப்பு மரத்தால் செய்யப்பட்ட பொருள்கள் அரிந்த மரங்கள் கொண்டு செல்வதற்கு அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் அனுமதி வழங்குவதில் விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)



யாழ்.தேவியின் வருகைக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரையுள்ள ரயில் கடவைகளில் தற்போது பாதுகாவலாளிகளுக்கான அறைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (வ-20)

## இன்னும் இல்லை எமக்கு மின்சாரம்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட அல்லிக்கரை ஒழுங்கைக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இந்த ஒழுங்கையில் பத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளுடன் தோட்ட நிலங்கள் காணப்படுவதாகவும் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குமாறு உரிய தரப்புகளுக்கு பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## 9 இலட்சம் பெறுமதியான பொருள்கள் களவாடல்

### அரியாலை பகுதியில்

கொழும்புத்துறை, ஜூன் 2

அரியாலை புறாடி ஒழுங்கை பகுதியில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற துணிகர பகற்கொள்ளைச் சம்பவத்தில் சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடர்களால் களவாடிச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தத் திருட்டு சம்பவத்தில் வீட்டின் கூரையைப் பிரித்து உட்சென்ற திருடர்கள் தாலிக்கொடி உட்பட 15 பவுண் நகைகள், ரொக்கப் பணம், மடிக் கணினி, கைத்தொலைபேசிகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

வர்த்தக நிறுவனத்தில் பணியாற்றும் கணவனும் ஆசிரியையான மனைவியும் தமது பணிகளுக்குச் சென்றிருந்ததை அவதானித்து யாருமில்லாத வேளையில் பகல் நேரத்தில் இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-135)

## பஸ்ஸுடன் மோதியதில் ஓட்டோ வாய்க்காலுக்குள்



யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்-பருத்தித்துறை வீதியூடாக யாழ். நகருக்கு வந்து கொண்டிருந்த தனியார் பஸ்ஸுடன் ஆஸ்பத்திரி வீதியால் பயணித்த ஓட்டோ பருத்தித்துறை வீதிக்குத் திரும்பிய போது மோதியதில் ஓட்டோ அருகில் உள்ள பெரிய வாய்க்காலுக்குள் பாய்ந்தது. எனினும் ஓட்டோ சாரதி குதித்ததில் அவருக்கு நெற்றியில் சிறு காயத்துடன் தப்பிக் கொண்டார். ஓட்டோவில் பயணிகள் எவரும் இருக்கவில்லை. ஓட்டோவின் முன்புறக் கண்ணாடி கழன்று வீழ்ந்துள்ளன. பாரந்தூக்கி மூலம் ஓட்டோ வாய்க்காலிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. பொலிஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். (வ-7)

## மது ஒழிப்பு தினத்தில் பச்சை மட்டை அடி

### காயமடைந்த மாமன்மார் மருத்துவமனையில்

*யாழ்ப்பாணம், ஜூன் 2*

*மருமகன்களின் பச்சை மட்டை அடியில் காயமடைந்த மாமனார்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் மது ஒழிப்பு தினமான நேற்று முன்தினம் சாவகச்சேரி மற்றும் மாசார் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.*

*மது ஒழிப்புத் தினத்தில் கள்ளுத் தவறணைகளில் கூழ் காய்ச்சிக் கொண்டாடிய வேளையில் மாமன்- மருமகனிடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டு மாலையில் வீட்டுக்கு வந்தும் அது தீராததால் வெட்டி வைக்கப்பட்டிருந்த பச்சை மட்டையால் மருமகன் மாமனை முறையாகக் கவனித்தார். மட்டையின் கருக்கு உடலில் பல இடங்களை அறுத்ததால் காயமடைந்த மாமன்மார் சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*பளை மாசாரில் இடம்பெற்ற சம்பவம் பளைப் பொலிஸார் மற்றும் படையினர் தலையிட்டு நிறுத்தி காயமடைந்த மாமனை மருத்துவமனைக்கும், மருமகனைப் பொலிஸ் நிலையத்துக்கும் கொண்டு சென்றுள்ளனர்.*

*பளை மற்றும் சாவகச்சேரிப் பொலிஸார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)*

# பாட ரீதியான வெற்றிடங்கள் யாழ்.வலயத்தில் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.கல்வி வலயத்தில் பாட ரீதியாக உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை, வன்னிப் பிரதேசத்திலிருந்தும், தீவகப் பிரதேசத்திலிருந்தும் இடமாற்றம் பெற்று வந்து ஆசிரியர்கள் மூலம் நிரப்பவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், யாழ்.கல்வி வலயத்தில் மேலதிகமாக உள்ள 162 ஆசிரியர்களையும் வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்வதற்குக் கல்வி அமைச்சின் செயலாளர் சம்மதித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படி நடவடிக்கை கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்திலிருந்தும், தீவக வலயத்திலிருந்தும் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் தற்போது யாழ்.கல்வி வலயத்தில், பாட ரீதியாக வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய் கோட்டத்துககு ஏற்கெனவே 16 ஆசிரியர்கள் இவ்வாறு சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஏனைய ஆசிரியர்களையும் வெற்றிடமாகவுள்ள ஏனைய இடங்களில் சேவைக்கு அமர்த்தப்படவுள்ளனர். அவ்வாறு வெற்றிடம் இல்லாத பட்சத்தில் மாத்திரம், யாழ். வலயத்துக்கு அண்மித்த வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (து-5)

# மாணவர் இடைவிலகலை தடுக்க விசேட செயற்றிட்டம்

## முல்லைத்தீவில் கற்றல் உபகரணங்கள் கையளிப்பு



நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள், அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வறுமை காரணமாகப் பாடசாலையிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவதைத் தடுக்கும் நோக்குடன், புலம்பெயர் தமிழ் மக்களின் நிதியுதவியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கும் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தந்தை, தாய் அல்லது இருவரையும் இழந்த நிலையில் வறுமையுடன் கல்வி கற்கும் மாணவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குத் தைத்த பாடசாலைச் சீருடைகள், சப்பாத்துக்கள், பாடசாலை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வள்ளிபுனம், தேவிபுரம், கள்ளப்பாடு, செல்வபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 66 மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் முதலாம் கட்டம் முள்ளிவாய்க்கால் மண்ணில் மே 17 அன்று முள்ளிவாய்க்கால் மேற்கை சேர்ந்த 21 மாணவர்களோடு நடத்தப்பட்ட நிலையில் அதன் அடுத்தகட்டமாகவேநேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் ராஜ்குமார் என்பவரினால், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஊடாக வழங்கப்பட்ட நிதியிலேயே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்.

போர் அழிவுகளில் பல குடும்பங்கள் குடும்பத் தலைமைகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளன. ஏராளமான இளைய பராயத்தவர்கள் குடும்பத்தின் வாழ்வாதார நலிவால் பாடசாலை இடைவிலகலை எதிர்நோக்கியுள்ளனர். எம் தேசத்தின் கல்வி வளர்ச்சி பலவழிகளிலும் மேம்படுத்தப்பட வேண்டியே உள்ளது. இதன் ஒரு கட்டமாகவே பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் ஒரு முனைப்பில் இந்தச் செயற்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு பிள்ளைகளை பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் அனுப்பும் குடும்பங்களுக்கு இவ்வாறான ஊக்குவிப்புகள் உத்வேகத்தை அளிக்கும் என்பதையே எண்ணுகிறோம். குடும்பத் தலைமைகளை இழந்து வறுமையுடன் கல்வி கற்கும் மாணவர்கள், கல்வியைத் தொடரமுடியாமல் இடைவிலகும் மாணவர்களின் நிலையை நேரில் பார்த்தும் அறிந்த நிலையிலேயே இது தொடர்பில் தகவல்களைத் திரட்டத் தொடங்கியிருந்தேன்.

அதனடிப்படையில் முதற்கட்டமாகத் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்த மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இதே போன்று எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

எமது தேசத்தவர்களின் வாழ்வாதாரமும் சமூக கட்டமைப்புகளும் எழுச்சிபெறும் வரையில் மக்கள் தொடர்பிலான செயற்றிட்டங்கள் தொடரப்படும்-என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், வட மாகாணசபை உறுப்பினர்களான வீ.கனகசுந்தர சுவாமி, திருமதி.மேரிகமலா குணசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-5)

# செவ்வாய்க்கிழமை முதல் காணிக் கச்சேரி ஆரம்பம்

## வேலன்குளம் கிராம அலுவலர் பிரிவில்

வவுனியா, வேலன்குளம் கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை காணிக்கச்சேரி இடம்பெறவுள்ளது என்று வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை குஞ்சுக்குளம், செங்கல்படை, கோவில்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு கோவில்குளம், புளியங்குளம் மண்டபத்திலும் எதிர்வரும் 5 ஆம் திகதி மடுக்குளம், சிவன்நகர் பிரதேச மக்களுக்கு மடுக்குளம் பொது நோக்கு மண்டபத்திலும், எதிர்வரும் 6 ஆம் திகதி கோவில் மோட்டை, வேலன்குளம், சின்னதம்பனை மக்களுக்கு வேலன்குளம் கிராம சேவகர் அலுவலகத்திலும் காணிக்கச்சேரி இடம்பெறவுள்ளது என்று வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா கூறினார். (ச-402)

# இராணுவக் காவலரண்களால் மக்களின் இயல்புநிலை பாதிப்பு

## செல்வம் எம்.பியிடம் மாந்தை மக்கள் முறையீடு




மன்னார்,ஜூன் 2

மாந்தை கிழக்குப் பகுதியில் 6 இராணுவக் காவலரண்கள் இயங்குவதால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் பெண்கள் நடமாடுவதில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது என்று அப்பகுதிப் பொதுமக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம மக்களைத் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் சென்று சந்தித்து அவர்களது குறை, நிறைகளைக் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பின் போது அப்பகுதிகளில் மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினரின்கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் நீண்டகாலமாகக் குடிதண்ணீர் பிரச்சினை, மின்சாரம் இன்மை, காணிப்பிரச்சினை, பாதைகள் சீரின்மை போன்ற பிரச்சினைகள் நிலவி வருகின்றன. அவற்றை நிவர்த்தி செய்து தருமாறு மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் வவுனிக்குளம், அம்பாள்புரம் கிராம மக்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கிராமத்தில் நூற்றுக் கணக்கான குடும்பத்தவர்கள் நன்னீர் மீன்பிடியை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரு சில தனி நபர்கள் இந்தப் பகுதியில் பண்ணை அமைப்பதற்காக 50ஏக்கர் காணியை கையகப்படுத்தவுள்ளனர். இந்தச் செயற்பாடு நன்னீர் மீன்பிடிக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டுள்ளனர். (ச-56)

# ஆஸ்திரேலிய குழுவினர் புளியங்குளம் வருகை

## பழச் செய்கையையும் பார்வையிட்டனர்



ஆஸ்திரேலியக் குழுவை வரவேற்றபோது...

வவுனியா, ஜூன் 2

வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதிக்கு இலங்கைக்கான ஆஸ்திரேலியா நாட்டின் தூதரும் அவரது குழுவினரும் பயணம் மேற்கொண்டனர்.

ஆஸ்திரேலியா நாட்டின் நிதி உதவியுடன் வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழச் செய்கை முயற்சிகளைப் பார்வையிடுவதற்காகவே அவர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்தப் பயணத்தின்போது அவர்கள் பழச் செய்கையை மேற்கொண்டு வரும் மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நெடுங்கேணி பகுதியில் 50 ஏக்கர் காணியில் மேற் கொள்ளப்பட்டு வரும் பப்பாசிச் செய்கையையும் அவர்கள் பார்வையிட்டுள்ளனர். (ச-427)

# நன்னீர் மீன்பிடித் தொழில் மூலம் எமக்குப் பல்வேறு பிரச்சினைகள்

## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் மீனவர்கள்

வவுனியா, ஜூன் 2

வவுனியாவில் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியாவில் உள்ள குளங்கள் சிலவற்றில் மீன்பிடிப்பதற்காக வலைகளை மாலை வேளைகளில் போட்டுவிட்டால் மறுநாள் காலை அதில் சிக்கிய மீன்களைப் பெற்றுக் கொள்வது வழமையான செயற்பாடாகும். எனினும் சில சமயங்களில் அந்த வலைகளைச் சிலர் திருடிச் செல்வதால் தொழில் வாய்ப்பை இழக்க வேண்டியுள்ளது என்று நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

> வலைகளை சிலர் திருடிச் செல்வதால் தொழில் வாய்ப்பை இழக்க வேண்டியுள்ளது.

சிலர் எவ்வித அனுமதியுமின்றி சட்ட விரோதமாக மீன்களை பிடித்துச் செல்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

சில குளங்களில் வெங்காயத் தாமரை என்ற செடி பெருகி வருவதால் வலை செடிக்குள் சிக்குவதால் மீன்கள் பிடிபடுவது குறைந்துள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

குளக் கரைகளில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதாலும் மீன்பிடிப்பதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மீனவர்கள் கூறினர்.

வவுனியா குளங்களில் நிலவும் வலைத்திருட்டு, சட்ட விரோதமாக மீன்பிடித்தல் மற்றும் வெங்காயத்தாமரைச் செடியை அழித்தல், கழிவுப்பொருள்கள் வீசுதல் ஆகிய நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று வவுனியா நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# மன்னார் அரச அதிபரை சந்தித்த பிரிட்டன் தூதர்

மன்னார்,ஜூன் 2

கடந்த வியாழக்கிழமை மன்னாருக்குப் பயணித்த பிரிட்டன் தூதர் ஜோன் ரன்கின் மன்னார் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் குறித்த செய்தி சேகரிப்பு மற்றும் புகைப்படம் எடுப்பதற்கான அனுமதி ஊடகங்களுக்கு மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-56)



வீரம், விவேகம், விடாமுயற்சியின் அடையாளம் லக்ஷ்மி பாய். புரட்சித்தலைவர்களில் இவர் மிக ஆபத்தானவர் என்று ஆங்கிலேய படைத்தளபதி ஹீரோஸ் குறிப்பிட்டுள்ளார். இந்திய விடுதலைப் போரில் முக்கிய பங்காற்றிய ஜான்சியின் ராணி லக்ஷ்மி பாய், 1835இல் பிறந்தார். மணிகர்ணிகா என்பது இயற்பெயர். 4 வயதானபோது தாய் இறந்து போனார். துணிச்சலும் வீரமும் புத்திசாலித்தனமும் கொண்ட 7 வயது மணிகர்ணிகாவை, ஜான்சியை ஆண்ட கங்காதர ராவ் நெவல்கர் ராஜா திருமணம் செய்துகொண்டார். மணிகர்ணிகா, லக்ஷ்மி பாயாக மாறினார். ஜான்சி ராணியாகவும் பதவியேற்றுக் கொண்டார். 10 ஆண்டுகளுக்குப் பிறகு லக்ஷ்மி பாய் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். அந்தக் குழந்தையோ 4 மாதங்களிலேயே இறந்து போனது.

ஓர் ஆண் குழந்தையைத் தத்தெடுத்து, தாமோதர் ராவ் என்று பெயரிட்டனர். ஆனாலும், குழந்தையின் இழப்பு ராஜாவின் உடல்நலத்தைப் பாதித்தது. 1853இல் அவர் மரணம் அடைந்தார். நேரடி வாரிசு இல்லாதவர்களின் அரசுகள் ஆங்கிலேயரின் கீழ் வந்துவிடும் என்ற சட்டம் அப்போது இருந்தது. 60 ஆயிரம் ரூபாயை ஓய்வூதியமாகக் கொடுத்து விட்டு, லக்ஷ்மி பாயை வெளியேறச் சொன்னார்கள்.

அதோடு, ஜான்சியைக் கைப்பற்ற ஹீரோஸ் தலைமையில் ஆங்கிலேயப் படை வந்தது. நானும் அடிபணிய மாட்டேன்... என் நாட்டையும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று உறுதி பூண்டார். கடுமையான போர். 3 நாள்களுக்குப் பிறகு ஆங்கிலேயப் படை நகரத்துக்குள் நுழைந்து சூறையாடியது. குழந்தையுடன் மதில் சுவர் தாண்டி, பெரும் பெண்கள் படையுடன் நகரத்தை விட்டு வெளியேறினார் லக்ஷ்மி பாய்.

தாந்தியா தோபே மற்றும் சில புரட்சிப் படைகளுடன் சேர்ந்துகொண்டார் லக்ஷ்மி பாய். இந்தப் படை குவாலியரை முற்றுகையிட்டு, கோட்டையைக் கைப்பற்றியது. குவாலியரை நோக்கி வந்த ஆங்கிலேயப் படைகளுக்கும் லக்ஷ்மி பாய் படைகளுக்கும் இடையே போர் தீவிரமாக நடைபெற்றது. 1858 ஜூன் 17 அன்று, போரில் ஏற்பட்ட படுகாயத்தால் களத்திலேயே வீரமரணம் அடைந்தார் 22 வயதான லக்ஷ்மி பாய். இந்திய வரலாற்றில் வீரம் மிக்க பெண்ணாக நிலைத்துவிட்டார் ஜான்சி ராணி!

# புரட்சித் தலைவி ஜான்சி ராணி லக்ஷ்மி பாய்

# பெண்

பொன்னும் பெண் தான்
மண்ணும் பெண் தான்
விண்ணும் பெண் தான்
நதியும் பெண் தான்
நாடும் பெண் தான்
நிலவும் பெண் தான்
நினைவும் பெண் தான்
வீடும் பெண் தான்
வனமும் பெண் தான்
சொல்லும் பெண் தான்
புல்லும் பெண் தான்
உயிரும் பெண் தான்
காதலும் பெண் தான்
காமமும் பெண் தான்
உணர்வும் பெண் தான்
அன்பும் பெண் தான்
ஆசையும் பெண் தான்
அறிவும் பெண் தான்
அளவும் பெண் தான்
அனைத்தும் பெண்
தான் இருந்தும் தான்'
யார் என்பதை அறியாதவள்
தான் பெண்.



காந்திக்கு மனைவியாக இருப்பது எளிதான விடயம் அல்ல. தனக்கு உடன்பாடு இல்லாத விடயங்களையும் சகித்துக்கொண்டு, கணவரின் கொள்கைகளைப் புரிந்துகொண்டு, கடைசிவரை போராட்டக்காரராக வாழ்ந்து மறைந்தவர் கஸ்தூரிபாய்.

13 வயதில் மோகனதாஸ் கரம்சந்த் காந்தியுடன் திருமணம். அக்காலத்துப் பெண்களைப் போல இல்லாமல், கணவருடன் விவாதிக்கக் கூடியவராகவும் தன்னுடைய கருத்துகளைத் தைரியமாக வெளிப்படுத்தக்கூடியவராகவும் இருந்தார் கஸ்தூரிபாய். காந்தியிடம்தான் எழுத, படிக்கக் கற்றுக்கொண்டார்.

கஸ்தூரிபாய் 4 மகன்களைப் பெற்றெடுத்தார். வேலைக்காக தென்னாபிரிக்கா சென்றார் காந்தி. அப்போது குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக்கொண்டார் கஸ்தூரிபாய். பிறகு அவரும் தென்னாபிரிக்கா சென்றார். அங்கு நிறவெறியின் கொடூரம் கண்டு, போராட்டங்களில் ஈடுபட்டார் காந்தி. அவருடன் போராட்டக் களத்தில் பங்கேற்றார் கஸ்தூரிபாய். பல முறை சிறைக்கும் சென்றார். ஒருமுறை 3 மாதக் கடுங்காவல் தண்டனையும் அனுபவித்தார். காந்தி சிறையில் இருந்தபோது, வெளியில் இருந்து போராட்டங்களை வழி நடத்தினார்.

காந்தியின் அஹிம்சை, சத்தியம், அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டது மட்டுமல்ல... இன்னொரு பக்கம் அவருடைய வாழ்வியல் கொள்கைகளையும் பின்பற்றினார். எளிமையான உணவு, உடை, ஆச்சிரம வாழ்க்கை என எல்லாவற்றிலும் தன்னை இணைத்துக்கொண்டார் கஸ்தூரிபாய். தென்னாபிரிக்காவில் 10 ஆண்டுகள் போராட்டங்களுடன் கழித்த காந்தி குடும்பம், இந்தியா திரும்பியது. இங்கு விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து கொண்டிருந்த காலகட்டம்... காந்தி விடுதலைப் போரில் களம் இறங்கினார். கஸ்தூரிபாய் அந்தப் போராட்டங்களில் இறங்கியதுடன், ஏராளமான பெண்களை விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கச் செய்தார். 1942இல் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் ஈடுபட்ட காந்தியும் கஸ்தூரிபாயும் கைது செய்யப்பட்டு, புனேவிலுள்ள ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டனர். கஸ்தூரிபாயுடன் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வந்த நுரையீரல் நோய் கடுமையானது. 1944இல் சிறையிலேயே கஸ்தூரிபாயின் உயிர் பிரிந்தது.



# காந்தியின் கண்மணி

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொடுத்த வாக்குறுதிகளும் கேட்கப்படும் கேள்விகளும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதம மந்திரி நரேந்திரமோடியுடன் நடத்தியிருந்த பேச்சுகளின்போது இலங்கைத் தரப்பில் கூறப்பட்ட கருத்துக்கள் பற்றிய விவரங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் அரசமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தம் இந்தியாவில் காங்கிரஸ் கட்சி பதவியிலிருந்த காலத்தில் ராஜீவ் காந்தி பிரதமராய் இருந்தபோது உள்வாங்கப்பட்டது. அப்பொழுது இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்தன ஜனாதிபதி பதவியில் இருந்தார். இப்பொழுது இந்தியாவில் காங்கிரஸ் கட்சிக்கு பல வகையிலும் நேர்மாறான கொள்கையுடைய பாரதீய ஜனதாக் கட்சி புதிய பிரதமர் நரேந்திரமோடியின் தலைமையில் பதவிக்கு வந்துள்ளது. ஆனால் இந்திய நாடு ஏற்கெனவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாடுகளில் இருந்து புதிய அரசு மாறுவதாக - மாற்றி அமைக்க முயல்வதாக எதுவும் தெரியவரவில்லை.

உண்மையில் காங்கிரஸ் கட்சி விட்ட இடத்தில் இருந்தே பாரதீய ஜனதாக் கட்சி இலங்கை விவகாரத்தில் அடியெடுத்து வைத்திருப்பது தெரிகிறது. இலங்கை ஜனாதிபதியுடனான முதற் சந்திப்பிலேயே இந்தியப் பிரதமர் இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தையும் அதற்கு மேலாகவும் சென்று நிறைவேற்றும்படி கேட்டிருப்பதிலிருந்து இது புரிகிறது. இந்த விடயங்களை ஒரு சில நாள்களில் செயற்படுத்திவிடமுடியாது என்று இலங்கை தரப்பில் எடுத்துக்கூறப்பட்டபோது போர் முடிந்து 5 ஆண்டுகளுக்கு மேல் முடிந்து விட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியது மட்டுமல்ல, இலங்கை ஜனாதிபதியே இந்தியத் தரப்புக்கு வாக்குறுதியளித்திருந்தார் என்பதையும் அவர் அங்கு அதிகாரிகள் மூலம் எடுத்துக் காட்டியதாக செய்திகள் வந்துள்ளன.

சம்பூர் அனல் மின்நிலைய ஒப்பந்தங்கள் தொடர்பான வேலைகளையும் விரைவுபடுத்துமாறு மோடி இலங்கை அதிபரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். அந்த மின் நிலையம் தொடர்பான சில ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி ஒரு வருடத்துக்கு மேலாகியும் கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதி புதுடில்லியிலிருந்து திரும்பிய கையோடு அவைகளை விரைந்து முன்னெடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

சோனியா காந்தியின் தலைமையிலான பிரதம மந்திரி மன்மோகன்சிங் அரசைப் போன்று நரேந்திரமோடியின் அரசு மந்த கதியிலும் ஏனோதானோ என்றும் செயற்படமாட்டாது. வாக்குறுதியளித்துள்ள விடயங்களை விரைவாகச் செயற்படுத்தி பலாபலன்களை எதிர்பார்க் கும் என்பது தெரிகின்றது. அந்த அடிப்படையிலேயே இப்போது இலங்கை தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்தி நிலைமைகளை ஆராய புதிய வெளிநாட்டமைச்சர் சுஷ்மா சுவராஜ் அடுத்த சில மாதங்களுக்குள் இங்கு வரவிருக்கிறார்.

சுஷ்மா சுவராஜ் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது இந்திய நாடாளுமன்ற குழுவொன்றுக்குத் தலைமை வகித்து 2012 ஆம் ஆண்டு இங்கு வந்திருந்த் சமயம் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி ராஜபக்ஷ 13 ஆவது திருத்தத்தையும் அதற்கு மேலாகவும் சென்று நிறைவேற்றுவார் என்று வாக்களித்துள்ளார் என்று தெரிவித்திருந்தார்.

அந்த வாக்குறுதிக்கு என்ன நேர்ந்தது? என்று இப்போது இந்திய வெளியுறவு அமைச்சராக இங்கு வரவிருக்கும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கேட்பார் என்பது நிச்சயம் எதிர்பார்க்க வேண்டிய விடயம். அவருக்கு அளிக்கப்படும் பதிலைப் பொறுத்தே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை வருகை அமையும்.

ஐ.நாவின் விசாரணைக் குழுவினர் செயற்பட ஆரம்பிக்கும் அதே காலப் பகுதியில் இந்தியாவின் நெருக்குதல்களும் இவ்வாறு ஆரம்பமாவதனால் அரசு பல வகையிலும் சிக்கலுக்குள்ளாவது தவிர்க்க முடியாது. ராஜபக்ஷ அரசின் ராஜதந்திரம் அல்லது மூலோபாய நகர்வு எப்படிச் இருக்கப் போகிறது என்பதை உலகம் அவதானித்துக் கொண்டிருக்கிறது.

# மோடியின் பதவிக் காலத்திலும் தமிழர் பிரச்சினை புறமொதுக்கப்படுமா?

பழ. நெடுமாறன்

பிரதமர் பதவியை மோடி ஏற்பதற்கு முதல்நாள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத் தளபதிகளில் முக்கியமானவரும் பா.ஜ.கவின் தேசிய செயற்குழு உறுப்பினருமான சேஷாத்திரி சாரி ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து திட்டவட்டமான கருத்துகளை வெளியிட்டார்.

இந்திய-இலங்கை உறவு என்பது தமிழர்கள் பிரச்சினையால் பகையாகி விடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகளைக் கொழும்பு உண்மையாகவும் சுமுகமாகவும் தீர்க்கும் என பா.ஜ.க. கருதுகிறது. இதற்காக அந்த அரசு முயற்சிப்பதாகவும் நம்புகிறது. இலங்கை அரசுக்கு கால அவகாசம் தருவது அவசியம் என்று கூறியுள்ளார். அதாவது இந்திய-இலங்கை உறவு மிக முக்கியமானது. தமிழர்கள் பிரச்சினையால் அது பகையாகிவிடக் கூடாது என்று கூறியதன் மூலம் தமிழர்கள் பிரச்சினையைவிட இலங்கையின் உறவு முக்கியமானது என்பதை அழுத்தமாகவும் திருத்தமாகவும் அவர் கூறியிருக்கிறார்.

ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சந்திரிகா ஆகியோரின் காலங்களில் அதாவது 1987 முதல் 2003 வரை அவகாசம் அளிக்கப்பட்டும் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும், நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் மேற்கொள்ளப் பட்டும் எடுக்கப்பட்ட முடிவுகளை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை. 2009ஆம் ஆண்டு போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த பின்னும் தமிழர்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

2012ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையம் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் விசாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு 3 ஆண்டு கால அவகாசம் அளித்தது. அதற்கிணங்க இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழு அளித்த பரிந்துரைகளையும் நிறைவேற்றுவதற்கு ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

2013ஆம் ஆண்டில் மீண்டும் சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித 'உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை கோரினார். அதே ஆண்டில் மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோதிலும் அதை ஏற்க ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

2014ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமை ஆணையகக் கூட்டத்தில் சர்வதேச புலன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த விசாரணைக் குழுவை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது என்று ராஜபக்ஷ திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

கடந்த காலத்தில் நடைபெற்ற இவை அத்தனையும் சேஷாத்திரி அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனாலும் ராஜபக்ஷவுக்கு கால அவகாசம் கொடுக்கச் சொல்கிறார்.

இலங்கையின் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை தனது சாட்சிக்கு சேஷாத்திரி அழைத்துள்ளார். ஆனால் தன்னுடன் இந்தியாவுக்கு வருமாறு ராஜபக்ஷ விடுத்த அழைப்பை விக்னேஸ்வரன் ஏற்க மறுத்து தனது தலைமையில் உள்ள வடமாகாண அரசுக்கு அதிகாரங்கள் எதுவும் கடந்த எட்டுமாதங்களாக வழங்கப்படவில்லை. தமிழர்கள் பிரச்சினை எதுவும் தீர்க்கப் படவில்லை என்று கூறி ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கு வர மறுத்துவிட்டதை சேஷாத்திரி சாமர்த்தியமாக மறைத்திருக்கிறார்.



இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். அப்படியானால் பாகிஸ்தானின் ஓர் அங்கமாக இருந்த கிழக்கு வங்க மக்கள் தனி நாடு கோரி போராடியபோது, வங்கதேச சுதந்திர அரசை உடனடியாக இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் ஜனசங்கத் தலைவர் ஏ.பி. வாஜ்பாய் பேசியதையும், வங்க தேசத்துக்கு உடனடியாக இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்றும் கூறி டெல்லியில் 1971ஆம் ஆண்டு மே 24ஆம் திகதி ஜனசங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியதையும் சேஷாத்திரி மறந்துபோனாரா?

பாகிஸ்தானின் சட்ட திட்டத்துக்கு உட்பட்டுத்தான் கிழக்கு வங்கப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று சேஷாத்திரியும் அவர் சார்ந்திருந்த ஜனசங்கமும் அன்று பேசினார்களா? இலங்கையில் பிரிவினையை எதிர்ப்பதாக இன்று கூறுகிற சேஷாத்திரி கிழக்குப் பாகிஸ்தான் பிரிவினையை அன்று ஆதரித்தது ஏன்?

சார்க் நாடுகளில் ஒன்றான இலங்கையின் அதிபர் ராஜபக்ஷவை தனது பதவியேற்பு விழாவுக்கு மோடி அழைத்ததில் தவறு இல்லை என்று சேஷாத்திரி வாதாடுகிறார்.

இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் சார்க் நாடுகளில் யாரும் இனப்படுகொலைக்கு ஆளாகவில்லை. தமிழ்நாட்டு மக்களோடு தொப்புள்கொடி உறவுகொண்ட மக்கள் தான் இலங்கையில் படுகொலைக்கு ஆளாகியுள்ளார்கள். அதற்குக் காரணமான ராஜபக்ஷவை அழைப்பது பெருந் தவறு என தமிழக மக்கள் கருதுகிறார்கள்.

இலங்கையைச் சுற்றி இந்தியக் கடற்படை காவல் காத்தபோது பா.ஜ.க. அரசில் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்ணான்டஸ் இந்தியக் கடற்கரையைக் காவல்' காப்பதுதான் நமது கடற்படையின் கடமை மற்றொரு நாட்டின் கடற்கரையை காப்பது அல்ல' என்று கூறி நமது கடற்படையை திரும்ப அழைத்தார்.

இந்தியா வந்த ராஜபக்ஷ , பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையில் 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை உடன்பாட்டுக் கிணங்க 13ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாகவும் சீக்கிரமாகவும் நிறைவேற்ற வேண்டும்; மாகாண அரசுக்கு நிலம், காவல்துறை ஆகிய அதிகாரங்களை வழங்க வேண்டும்; தமிழக மீனவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் ஆகியவை முக்கிய பேச்சுக்கள் இடம்பெற்றதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

இலங்கை அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் 13ஆவது சட்டத் திருத்தம் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய-இலங்கை உடன்பாட்டில் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழர்களுக்கு என்று தனியாக ஒரு மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க 13ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு கொண்டு வந்தது. தமிழர்களுக்கு தனியாக ஒரு மாகாணம் தருவதை சீர்குலைப்பதற்காக சின்னஞ்சிறிய நாடான இலங்கையில் சிங்களவர் பகுதிகளுக்கென எட்டு மாகாணங்களையும் தமிழர்களுக்கு ஒரு மாகாணத்தையும் உருவாக்கினார்கள்.

இலங்கையில் மத்திய அரசே சிங்கள அரசாக இருக்கும்போது அவர்களுக்கென்று தனியாக எட்டு மாகாணங்கள் தேவையில்லை. தமிழருக்கு அளிக்கப்பட்ட மாகாணத்துக்கு நிலம், காவல்துறை, நிதி, ஆகிய அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. வேண்டுமென்றே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை துடைப்பதற்கு ராஜீவ்காந்தியின் காலத்திலிருந்து மன்மோகன் சிங் காலம்வரை இருந்த காங்கிரஸ் அரசுகள் எதுவும் செய்யவில்லை.

ராஜபக்ஷ குடியரசுத் தலைவரான பிறகு அவரின் மறைமுகத் தூண்டுதலின்பேரில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டதை எதிர்த்து இலங்கை உச்சநீதிமன்றத்தில் சிங்கள தீவிரவாத அமைப்பு ஒன்றினால் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி உச்சநீதிமன்றம் இந்த இணைப்பு செல்லாது என்று தீர்ப்பளித்தது. உடனடியாக இதைப் பயன்படுத்திக் கொண்டு ராஜபக்ஷ வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்தார். ராஜபக்ஷவின் இந்த நடவடிக்கை தவறானது. இந்திய-இலங்கை உடன்பாட்டுக்கு எதிரானது எனக் கண்டிக்கவோ திருத் தவோ மன்மோகன் சிங் அரசு முன் வர வில்லை.

இப்போது புதைகுழிக்குப் போய்விட்ட 13 ஆவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற சொல்லி வற்புறுத்துவது. போகாத ஊருக்கு புரியாத வழி காட்டுவதாகும்.

இலங்கையில் தமிழர் பகுதியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது. தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டு உள்நாட்டிலேயே அகதிகளாக வாழும் அவலம் நீடிக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏராளமான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்றன. அவர்களின் பாதுகாப்புக்காக சிங்கள இராணுவ முகாம்களும் அமைக்கப்படுகின்றன.

தமிழ்ப் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் பரிதாபம் நீடிக்கிறது. சிங்கள இராணுவத்தின் பாலியல் வன்முறைக்கு அவர்கள் தொடர்ந்து ஆளாக்கப்படுகிறார்கள். தமிழ் இளைஞர்கள் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டு காணாமற் போகிறார்கள். இந்த கொடுமைகள் குறித்தும் இவற்றைத் தடுத்து நிறுத்துவது குறித்தும் உறுதியான நடவடிக்கை எடுக்க மோடியின் அரசு முன்வரவேண்டும். ராஜபக்ஷ அளிக்கும் வெற்று வாக்குறுதிகளை நம்பி செயலற்றுக் கிடந்த மன்மோகன் சிங் அரசைப் போல புதிய அரசு இருந்துவிடக்கூடாது.

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து சேஷாத்திரி அளித்த விளக்கத்தை தேர்தலுக்கு முன் அளிக்க தமிழக சாதுரியவான்கள் தடுத்துவிட்டதாக அவர் கூறியிருக்கிறார்.

அதைப் பார்க்கும்போது பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையிலும் மோடி பேசிய கூட்டங்களிலும் ஈழத்தமிழர் பிரச்சினை இடம்பெறாமல் போனதற்கும் சேஷாத்திரியின் விளக்கத்துக்கும் ஒரே பின்னணி இருப்பது புரிகிறது.

உதயன் 02.06.2014 

# அன்பான பெற்றோரா நீங்கள்?

செல்வி ஹேமா தங்கவேலு
யாழ்.கல்வியியற் கல்லூரி
ஆரம்பப் பிரிவு



அவசர உலகில் இன்று பெற்றோர் பிள்ளைகள் உறவு ஆரோக்கியமான நிலையில்லாது ஏதோ உலக ஒப்பனைக்காகவே உள்ளது எனலாம். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே நிறைய இடைவெளி காணப்படுவதுடன் கருத்து முரண்பாடுகளும் அதிகரித்து வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் என நேரமின்மை, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பெற்றோர் வேலைக்குச் செல்வதால் பிள்ளைகள் பேரன், பேர்த்தி அல்லது வேறு உறவினர் பராமரிப்பில்தான் அதிகநேரம் உள்ளனர். இதனைவிட தாய், தந்தை இல்லாத குடும்பங்களில் பிள்ளையைப் பராமரிக்க வேறு ஒருவரின் துணையை நாடி நிற்றலும் இதற்கு இன்னொரு காரணம் எனலாம். இவ்வாறான பிள்ளைகள் பெற்றோருடன் அதிக பாசமாக நடந்து கொள்ள முடியாத அளவுக்கு அவர்களது உறவுப் பிணைப்பு காணப்படுவதுடன் இதனை அதிகரிப்பதற்கோ நிலைகளும் சாதகமாக இல்லை. இதற்கான வாய்ப்புகளும் பெற்றோர் தமது வேலை முடித்து வீடு வந்ததும் பிள்ளைகளை படி, அதைச் செய், இதைச் செய்யாதே என வற்புறுத்துவது , கட்டுப்படுத்துவது திணிப்பது பிள்ளைகளுக்கு உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களது செயற்பாடுகளும் சொன்னால்தான் செய்வது போன்று தாமாகச் செயற்பட முடியாத நிலை ஏற்படுவதும் செயற்பாடுகளில் ஆர்வம் குறைவதுடன் வெறுப்பும் ஏற்படும். எனவே பிள்ளைகளை தாமாக செயற்பாட்டைச் செய்ய அதாவது சுயமாக இயங்க விடுவது அவர்களுக்கு எது தேவை, எது பிடிக்கும் என அறிந்து கொள்ளும் முயற்சியாக அவர்கள் அங்கிருத்தலும் கரிசனை கொள்ளலும் அன்பான உரையாடலும் அவசியமானதாகும். பிள்ளைகளைப் பெற்றோர் தமக்கு அருகில் அழைத்து அக்கறையுடன் கதை கேட்பது, சிறுவர்களை முத்தமிடுதல், தட்டிக் கொடுத்தல், உணவூட்டுதல், தூங்க வைத்தல் என்பன அவர்களது உறவைப் பலப்படுத்துவதுடன் அவர்களது எதிர்கால நலனுக்கும் உதவலாம். வெறுமனவே பாடம் கற்பித்தல், வேலை செய்யும்படி கடிந்து கூறுதல், பிள்ளையின் ஆரோக்கியத்தை மட்டுமல்ல அவரது மனநிலையையும் பாதிக்கும். பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல், உணவு உண்ணல், அவர்களது கதையை செவிமடுத்தல் என்பன சுருக்கமாகச் சொன்னால் அவர்களுடன் நட்புறவாக உறவாடுதல், அவர்களை உற்சாகப்படுத்துவதுடன் இன்னும் பாசத்தை அதிகரிக்கச் செய்யும். இது போன்ற செயற்பாடுகள் பெற்றோர் பிள்ளைகளிடையே மிக நெருக்கமான உறவுப் பிணைப்பை ஏற்படுத்துவதுடன் எதிர்காலங்களில் ஆரோக்கியமான குடும்பங்கள் உருவாகவும் வழி சமைக்கும் எனலாம்.

> பெற்றோர் எனப்படுவோர் பிள்ளைகளின் மன நிலையைப் புரிந்தவர்களாக, அவர்களின் தேவைகளை, ஆசைகளை முடிந்தவரை நிறைவேற்றி வைப்பவர்களாக, தங்களை மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும்.



எனவே பெற்றோர் எனப்படுவோர் பிள்ளைகளின் மனநிலையைப் புரிந்தவர்களாக, அவர்களின் தேவைகளை, ஆசைகளை முடிந்தவரை நிறைவேற்றி வைப்பவர்களாக, தங்களை மாற்றிக்கொள்ள முன்வர வேண்டும். என்னதான் வேலைப்பளு இருந்தாலும் தமது பிள்ளைகளுடன் உறவாடி இணைந்திருக்கும் வகையில் அதற்கென நேரத்தை ஒதுக்கி அவர்களில் கரிசனை காட்டுவார்களாயின் நிச்சயமாக அவர்களது பிள்ளைகள் நல்லவர்களாக, வல்லவர்களாக, விவேகிகளாக , அறிவுசார் புலமை மிக்கவர்களாக, அமைதியை விரும்புபவர் களாக, தன்னை, பெற்றோரை ,தான் சார்ந்த சமூகத்தை ,தனது நாட்டை நேசிப்பவர்களாக உருவாகுவார்கள் என்பதில் ஐய மில்லை எனலாம்.

இவற்றை உணர்ந்து பெற்றோர்களாக மட்டும் இருந்து விடாது நல்ல ஆசானாக, நண்பராக, நல்ல வழிகாட்டியாக சமூகத்தில் பெற்றோர் பிள்ளையன் வலுவானதாக அமைந்து விடும்.

---

## தொடருந்து (Train) கடவைகள் மேலாக மேம்பாலம் அமைத்தல்

வாசகர் திருமுகம்

யாழ்ப்பாணத்தில் ரயில் பாதைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகிவிட்டன. போக்குவரத்துக்கள் அதிகமாகவுள்ள பல வீதிகளை ஊடறுத்து [illegible]ம்புப் பாதைகள் (ரயில் பாதைகள்) அமைக்கப்படவுள்ளன. அப்படியான முக்கிய வீதிகளை ஊடறுத்து ரயில் (தொடருந்து) செல்லும் வேளைகளில் வீதிகளில் வாகனங்கள் தரித்துக் காத்திருந்து செல்வதற்காக ரயில் கடவையின் இருபுறமும் அமைக்கப்பட்டிருக்கும் படலைகள் பூட்டப்பட்டிருக்கும். அந்த வேளையில் வாகன [illegible]ரிசல்கள் கட்டுப்படுத்த முடியாத அள[illegible] அதிகரிக்கும். முக்கியமாக யாழ். [illegible]ருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி இரண்டிலும் அளவுக்கதிகமான நெருக்கடிகளை இது உருவாக்கும். மேலும் ரயில் வர ஒரு சில நிமிடங்கள் தாமதமானாலும் வீதியில் எதிரும் புதிருமாக இரு பக்கங்களிலும் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களின் அளவு 1/2 கிலோமீற்றருக்கும் அதிகமாக நீண்டு விடும். அத்துடன் ஆரியகுளம் சந்தியில் வாகனங்கள் உரசிக் கொள்ளவும் கூடும். முன்னணி பாடசாலைகள், யாழ்.போ[illegible]தனா மருத்துவமனை, வங்கிகள், [illegible]டைகள், பேருந்து நிலையம் ஆகியவற்றுக்குச் செல்லும் முக்கிய வீதிகளாக யாழ்.பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி என்பன திகழ்கின்றன. ரயில் சென்றுவரும் நேரங்களில் இந்த வீதிகளில் போக்குவரத்து நெரிசலினால் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், நோயாளிகள், வாகனாதிகள் மற்றும் ஏனையோரும் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

எல்லாவற்றையும் விட ஒரு அதிமுக்கியமான விடயம் என்னவெனில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதி வழியே எச்சரிக்கை ஒலி எழுப்பியவாறே அவசர நோயாளிகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் அம்புலன்ஸ் பருத்தித்துறை வீதியிலிருக்கும் ரயில் கடவையைக் கடந்தே செல்ல வேண்டும். அந்த வேளைகளில் ரயில் கடவை படலைகள் மூடப்பட்டிருந்தாலோ அல்லது அந்த வேளையில் சற்று முன் ரயில் கடந்து போய் படலைகள் திறக்கப்பட்டாலோ உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நோயாளிகளை குறித்த நேரத்தில் யாழ். மருத்துவமனையில் சேர்ப்பிக்க முடியாத ஒரு நிலை உருவாகிவிடும். இப்பேற்பட்ட நிலையில் உரிய நேரத்தில் அவசர நோயாளியை மருத்துவமனையில் அனுமதித்திருந்தால் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் ரயில்வே படலைகள் மூடப்பட்டிருந்தால் தாமதம் ஏற்பட்டுவிட்டது என்பன போன்ற செய்திகள் எம் காதுகளை வந்தடையாமல் இருப்பது நல்லதல்லவா?

எனவே அதற்காக முக்கியமான வீதிகளான யாழ்.பருத்தித்துறை வீதி, கண்டி வீதி (கச்சேரிக்கு அருகேயுள்ள ரயில் கடவை) ஸ்ரான்லி வீதி போன்றவற்றை ஊடறுத்துச் செல்லும் ரயில் கடவைகளுக்கு மேலாக வாகனங்கள் தங்குதடையின்றி சென்று வர 3 மேம்பாலங்கள் அமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரச உயர் மட்ட தரப்பினரும் விரைவில் கலந்துரையாடி ஒரு சிறந்ததொரு முடிவை எடுப்பது சாலச் சிறந்தது என பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மா.சுதர்சன்**
**108, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்.**

---

## செந்தமிழில் சிவபூசை செய்திடுவோம்

மேற்படி விடயம் தொடர்பாக 2014.05.16 ஆம் திகதிய "உதயன்" இதழில் தமிழில் பூசை வழிபாடுகள் செய்யும் முயற்சி வரவேற்கப்பட வேண்டும் என்னும் கருத்தை மிகவும் உறுதிபட வலியுறுத்தித் தாங்கள் எழுதியிருந்த ஆசிரியத் தலையங்கம் காத்திரமானது. சிவபூசையில் சொல்லப்படும் மந்திரங்கள் தமிழில் சொல்லப்படுகையில் பக்தன் அதன் பொருளை உணர்ந்து நல்ல ஈடுபாட்டுடன் வழிபாடு ஆற்றுவான்.

சைவ மகா சபையினர் மேற்கொண்டிருக்கும் இந்த நல் முயற்சிக்கு தமிழுலகம் வரவேற்பைக் கொடுத்து எங்கும் தமிழ் மணம் கமழச் செய்ய முன்வர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

*தித்திக்கும் தமிழ் த[illegible] சிவனவனைச் சித்தமெலாம்*
*தித்திக்கத் தமிழ்கொ[illegible]ண்ட போற்றுதல் செய்வோமே!*
*தித்திக்கும் தமிழருக்கு விளங்காத மொழியெதற்கு?*
*சித்தமெலாம் நிறைந்திடவே திருமுறைகள் தனையோதி*
*எத்திக்கும் புகழ் மணக்க எங்கள் தமிழ் மொழியினிலே*
*ஏற்றமதை அளிக்கின்ற எம்மிறையை வணங்கிடுவோம்.!*
*சித்திக்கும் கரும மெலாம் ! சிந்தையெலாம் நிறைவாகும்!*
*செம்மைமிகச்செந்தமிழில் சிவபூசைசெய்திடுவோம்!*

**நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்**

## பதவி மாறிய விஜயகாந்த்



விஜயகாந்த்

சென்னை, ஜூன் 02
தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் நேற்றுமுன்தினம் முதல் பொதுச் செயலாளர் என்ற பதவியைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்.
தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் எப்போதும் அறிக்கை விட்டாலும் நிறுவனத் தலைவர் என்ற பதவியைப் பயன்படுத்துவார்.
ஆனால் நேற்றுமுன்தினம் அவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் என்றே குறிப்பிட்டு இருந்தார்.
தே.மு.தி.க. பொதுச் செயலாளராக இருந்த ராமுவசந்தன் மறைவுக்கு பிறகு அந்த பதவி யாருக்கும் கொடுக்கப்படாமல், வெற்றிடமாகவே இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# 37 கைதிகள், 32 மீனவர் விடுவித்தது இந்திய அரசு

## பாகிஸ்தானுக்கு மோடி நல்லெண்ணச் சமிக்ஞை

புதுடில்லி, ஜூன் 02
நரேந்திர மோடி தலைமையிலான இந்தியாவின் புதிய அரசு 37 பாகிஸ்தான் சிறைக் கைதிகளை விடுதலை செய்துள்ளது இவர்களுடன் 32 பாகிஸ்தானிய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.
விடுதலை செய்யப்பட்ட குறித்த மீனவர்களும் கைதிகளும் பதினாறு வருடங்கள் வரை இந்தியச் சிறைகளில் சிறைவாசம் அனுபவித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது
நரேந்திர மோடி பதவியேற்றதை அடுத்து பாகிஸ்தான் 152 இந்திய மீனவர்களை விடுதலை செய்தமை குறிப்பிடத்தக்கது.
நரேந்திர மோடி இந்தியப் பிரதமராக பதவியேற்றதன் பின்னர் பாகிஸ்தானுடனான உறவினை மேலும் பலப்படுத்துவதற்கான ஒரு சமிக்ஞையாக இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன.



விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்காக இரு நாள் பயணமொன்றை மேற்கொண்டு இந்தியா வந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் மோடியுடன் இருதரப்புப் பேச்சுக்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## பாலியல் வன்புணர்வு வழக்கு சி.பி.ஐ. விசாரிக்கப் பரிந்துரை

புதுடில்லி, ஜூன் 02
உத்தரப் பிரதேசத்தில் கும்பலால் இரு தலித் சகோதரிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டமை தொடர்பான வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க உத்தரவிடுமாறு மத்திய அரசுக்கு உத்தரப் பிரதேச அரசு பரிந்துரை செய்துள்ளது.
இதனிடையே மாநில அரசின் தலைமைச் செயலாளர் ஜாவித் உஸ்மான் நீக்கப்பட்டு அவரது பணியிடத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி அலோக் ரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.
பதான் மாவட்டத்தில் உள்ள கட்ரா சதாத்கஞ்ச் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமத்தைச் சேர்ந்த 14, 15 வயதுடைய இரு தலித் சிறுமிகள் கடந்த மே 27ஆம் தேதி காணாமற் போயிருந்தனர். அடுத்தநாள் உஷைத் பகுதியில் உள்ள மாமரத்தில் பிணமாகத் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டனர்.
உடற் கூற்றுப் பரிசோதனை அறிக்கையில், இருவரும் கும்பலால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு பின்பு, தூக்கில் தொங்க விடப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்தது.
தலித் சிறுமிகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் நிவாரணத் தொகை வழங்க உ.பி. அரசு உத்தரவிட்டது. ஆனால், நிவாரணத் தொகையை நிராகரித்த சிறுமிகளின் குடும்பத்தினர், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் என்று கோரினர்.
இந்த நிலையில், உத்தரப் பிரதேச அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், பாலியல் பலாத்காரம் சம்பவத்தை விசாரிக்க சி.பி.ஐக்கு உத்தரவிடுமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய முதல்வர் அகிலேஷ் யாதவ் முடிவு செய்துள்ளார். இது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## டீசலின் விலை அதிகரிப்பு: மத்திய அரசை சாடும் 'ஜெ'

*சென்னை, ஜூன் 02*
*முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசின் தவறான கொள்கைகளை மாற்றம் ஏதுமின்றி பா.ஜ.க தலைமையிலான அரசு தொடர்ந்து கடைப்பிடிப்பதாக சாடியுள்ள முதல்வர் ஜெயலலிதா, டீசல் விலை அதிகரிப்பைத் திரும்பப் பெற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தினார்.*
*இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், புதிதாக பொறுப்பேற்றுள்ள மத்திய அரசின் முக்கிய கவனமே உணவுப் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது தான் என்று மத்திய உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கூறிய ஓரிரு நாள்களிலேயே, விலைவாசியை உயர்த்தும் வகையில், நேற்று முதல் மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் டீசல் விலையை லீற்றருக்கு 50 காசுகள் உயர்த்தியுள்ளது வேதனை அளிக்கிறது.*
*இந்த விலை உயர்வு காரணமாக, ஓட்டோ, கார், வான், லொறி போன்ற தனியார் வாகனக் கட்டணங்கள் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாணவ-மாணவியர்கள், அலுவலகங்களுக்கு செல்வோர், சுற்றுலாப் பயணிகள், ஏழை எளிய பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் கூடுதல் வாகனக் கட்டணம் செலுத்த வேண்டிவரும். இது மட்டுமல்லாமல், காய்கறிகள், பழங்கள், அத்தியாவசியப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களின் விலைகளும் மேலும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஏழை எளிய, நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.*
*தற்போதைய மத்திய அரசின் இந்த நடவடிக்கை முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசின் தவறான கொள்கைகளை மாற்றம் ஏதுமின்றி தொடர்ந்து கடைபிடிப்பதாகவே உள்ளது. பாரதப் பிரதமர் இதில் தலையிட்டு, இந்த விலை உயர்வை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். (த)*

## 4 நாள்கள் 1 மில்லியன் லைக் பெற்றார் மோடி



நரேந்திரமோடி

புதுடில்லி, ஜூன் 02
பிரதமர் நரேந்திரமோடியின் முகநூல் அதிகாரப்பூர்வ பக்கத்துக்கு ஒரு மில்லியன் பேர் லைக் செய்துள்ளனர்.
பேஸ்புக்கில் பிரதமர் நரேந்திரமோடியின் அதிகாரபூர்வ பக்கம் தொடங்கப்பட்டு தொடங்கப்பட்ட 4 நாள்களுக்குள் ஒரு மில்லியன் பேர் அந்த பக்கத்துக்கு லைக் கொடுத்துள்ளனர்.
கடந்த மே 27ஆம் திகதி இந்த முகநூல் பக்கம் தொடங்கப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது.
இந்நிலையில் முகநூலின் இந்திய பொதுக் கொள்கை இயக்குநர் அன்ஹிதாஸ் கூறுகையில்: பிரதமர் மோடியின் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்துக்கு குடிமக்களின் ஆதரவு கிடைத்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.
ஏற்கனவே ஒரு மில்லியன் ரசிகர்களின் லைக்கை பெற்று விட்டது மேலும் இது அதிகரித்து உலக அளவில் அதிக லைக் பெற்ற ஒரு அரசியல் தலைவரின் பக்கமாக மோடியின் முகநூல் பக்கம் இடம் பெறும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
மேலும், வெள்ளை மாளிகையின் முகநூல் பக்கம் பெற்றுள்ள 1.2 மில்லியன் லைக் பெற்றதையும் தாண்டி இந்திய பிரதமர் மோடியின் முகநூல் பக்கம் குடிமக்களின் விருப்பத்தை பெறும் என தாம் தெரிவித்துள்ளார். (த)

## அம்மா உணவகங்கள் விரைவில் எகிப்திலும்

சென்னை, ஜூன் 02
தமிழ்நாட்டில் உள்ள அம்மா உணவகங்களை எகிப்து நாட்டு அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.
எகிப்து அரசின் சார்பில் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள அந்த நாட்டு அதிகாரிகள், குறைந்த விலைக்கு உணவு விற்கும் அரசின் இந்தத் திட்டத்தைத் தங்களது நாட்டிலும் ஆரம்பிக்க அவர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.



உணவகத்தை பார்வையிடும் அதிகாரிகள்.

எகிப்து நாட்டின் வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சைச் சேர்ந்த அடெல் ரசக் மற்றும் அகமது கலீல், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் இருக்கும் அம்மா உணவகத்தை நேற்றுப் பார்வையிட்டனர்.
இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களிடம் அவர்கள் பேசியதாவது:-
இந்த உணவகங்களைப் பற்றி ஊடகங்களில் அடிக்கடி பார்ப்பதால் அதை பார்வையிட்டு, அதைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தோம்.
இத்தகைய முயற்சிகளை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மட்டுமே எங்களது நாட்டில் மேற்கொள்கின்றன. ஆனால் இங்கு அரசே இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது- என்றனர். (த)

## டில்லியில் புழுதிப் புயல்

புதுடில்லி, ஜூன் 02
டில்லியை அதிர வைத்த புழுதிப் புயல் மேலும் இரு நாள்களுக்கு நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. எனினும் தலைநகரில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வீசிய அளவுக்கு புழுதிப்புயல் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து டில்லியில் உள்ள மத்திய வானிலை மைய விஞ்ஞானி டி.பி.யாதவ் கூறுகையில்; கடந்த வெள்ளிக்கிழமை டில்லியில் வீசியது அதிவேக காற்றுடனான இடி, மின்னல் ஆகும். இது டில்லியின் வடபகுதி எல்லையில் உள்ள ஹரியாணா மற்றும் சண்டிகர் மாநிலங்களில் உருவாகி தலைநகரத்தை எட்டியுள்ளது. சனிக்கிழமைகூட அது டில்லியின் தென்பகுதி, ஆக்ரா மற்றும் மதுரா ஆகிய இடங்களில் வீசியது. இது வீரியம் குறைவானது என்பதால் அதிக பாதிப்பு இல்லை என தெரிவித்தார்.
புயல் வீசும்போது எதிரில் வரும் நபர்கள், வாகனங்கள் கூட கண்ணுக்குத் தெரியாமல் போய்விடும் நிலை ஏற்படும். வீடுகளுக்குள்ளும் புழுதி புகுந்து படிந்துவிடும்.
கடலில் அடிக்கும் புயலை விட கோடையில் வட மாநிலங்களில் வீசும் புழுதிப்புயல், பல நேரங்களில் ஆபத்தானது. கடலில் வீசும் புயலால் அதன் கரைப் பகுதிகளிலும் மழை வரும். அது போல், வறண்ட பகுதியில் அடிக்கும் புழுதிப்புயலில் மண் வீசும் (த)

## அமெரிக்கச் சிப்பாயை விடுவித்தது தலிபான்



விடுவிக்கப்பட்ட சிப்பாய்

காபூல், ஜூன் 02
5 ஆண்டுகளாகப் பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருந்த அமெரிக்கச் சிப்பாயை ஆப்கானிஸ்தான் தாலிபான்கள் விடுவித்தனர்.
பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையோரம் உள்ள பாக்டிக்கா மாகாணத்தில் இருந்து அமெரிக்க படையைச் சேர்ந்த சார்ஜண்ட் போவே பெர்க்டால் (வயது-28) என்பவரைத் தாலிபான்கள் கடந்த 2009ஆம் ஆண்டு கடத்திச் சென்றனர்.
அமெரிக்காவின் குண்டனாமோ சித்திரவதைக் கூடத்தில் அடைபட்டிருக்கும் 5 தாலிபான்களை விடுவிக் கவேண்டும் என்று நிபந் தனை விதித்த அவர்கள், அமெரிக்கச் சிப்பாயைப் பணயக் கைதியாக அடைத்து வைத்திருந்தனர்.
அவரை விடுவிக்க ரகசியமாகவும், அதிகாரபூர்வமற்ற முறையிலும் பேரம் நடந்து வந்ததாகக் கூறப்பட்டது. இந்நிலையில், அமெரிக்க அரசு ஐந்து தாலிபான்களை விடுதலை செய்ததாகவும், இதனையடுத்து, சார்ஜண்ட் போவே பெர்க்டால் விடுவிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (த)

## பேஸ்புக் உரிமையாளர் ரூ.720 கோடி நன்கொடை

அமெரிக்கப் பாடசாலைகளுக்கு


மனைவியுடன் ஷூக்கர் பேர்க்

நியூயோர்க், ஜூன் 02
பேஸ்புக் சமூக வலை தளத்தின் உரிமையாளர் மார்க் ஷுக்கர்பேர்க், கோடீஸ்வரர். இவரது மனைவி பிரிசில்லா சான். இவர்கள் இருவரும் அமெரிக்காவின் சான்பிரான் சிஸ்கோ வளைகுடா பகுதியில் உள்ள பொதுப் பாடசாலைகளுக்கு ரூபா 720 கோடி நன்கொடை வழங்குகின்றனர்.
இந்தத் தகவலை மார்க் ஷுக்கர்பேர்க் பேஸ்புக்கில் தெரிவித்துள்ளார். சான் பிரான் சிஸ்கோ வளைகுடா பகுதி மிகவும் செழிப்பானது. இங்கு பல பாடசாலைகள் உள்ளன. ஆனால் அங்கு போதுமான வசதிகள் இல்லை.
எனவே அங்குள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கணினி, இன்ரர்நெற் வசதி போன்றவை செய்து வழங்க இருக்கிறோம். அதற்குத் தேவைப்படும் ரூபா 720 கோடியை 5 ஆண்டுகளில் வழங்க இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (த)


இந்தோனேஷியாவின் மிகப்பெரிய எரிமலையான செங்கொங் அபி பெரிய புகைமண்டலத்துடன் குமுறியதை பயணிகள் விமானமொன்றிலிருந்து ஒருவர் புகைப்படம் எடுத்துள்ளார். செங்கொங் அபியானது ஆவிகளின் மலை என்று அழைக்கப்படுகிறது. இந்தோனேஷியாவின் மிகக் கூடுதலான எரிமலைகளை தன்னகத்தே கொண்ட மலைத் தொடர்களுக்கு மத்தியில் இது அமைந்துள்ளது. செங்கொங் அபி எரிமலை 1512 ஆம் ஆண்டுமுதல் சீற்றத்தை வெளிப்படுத்தி வருகிறது. (த)

## நாயினால் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்

நியூயோர்க், ஜூன் 02
அமெரிக்க எயார்வேய்ஸ் விமானமொன்றில் பயணித்த நாயொன்று விமான நடைபாதையில் இரு தடவைகள் மலம் கழித்ததால் அந்த விமானம் அவசர கால நிலைமையின் கீழ் தரையிறக்கப்பட்டுள்ளது.
லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து பிலடெல்பியாவுக்குப் பயணித்த பயணிகள் விமானத்தில் பயணித்த மேற்படி நாய்க்குத் திடீரென வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது.
இந்நிலையில் அந்த நாயால் கழிக்கப்பட்ட மலத்தை விமான ஊழியர்கள் பெரும் போராட்டத்தின் மத்தியில் அகற்றியுள்ளனர். நாயின் மலத்திலிருந்து வெளிப்பட்ட துர்நாற்றத்தால் பயணிகள் ஏற்கனவே திணறிக் கொண்டிருக்க அந்த நாய் இரண்டாவது தடவையாகவும் மலம் கழித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
இந்நிலையில் அந்த விமானம் மிஸோரி மாநிலத்திலுள்ள கன்ஸாஸ் நகரில் அவசர கால நிலைமையின் கீழ் தரையிறக்கப்பட்டது. அங்கு அந்த விமானம் சுத்திகரிக்கப்பட்டதையடுத்து பிலடெல்பியாவை நோக்கி மீளவும் அது பயணத்தை தொடர்ந்துள்ளது. (த)



# அமைச்சர், உளவு அதிகாரி தலிபான்களினால் கடத்தல்

## பாகிஸ்தானில் சனியன்று சம்பவம்

லாகூர், ஜூன் 02
பாகிஸ்தானில், ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரையும், அந்த நாட்டின் உளவு அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவரையும் தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை கடத்திச் சென்றனர்.
இது குறித்து பொலிஸார் கூறியதாவது:-
பஞ்சாப் மாகாண அமைச்சரான ராணா ஜமீல் ஹசன், தனது மனைவியுடன் காரில் இஸ்லாமாபாத்துக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்போது பிண்டி பாட்டியான் என்ற பகுதியில் ஆயுதமேந்திய நபர்கள் சிலர் காரை வழிமறித்து ஹசனையும், அவரது மனைவியையும் கண்களைக் கட்டி கடத்தியுள்ளனர்.
பின்னர் அவரது மனைவியை விடுவித்த கடத்தல்காரர்கள், ஹசனை விடுவிக்க 2 நாள்களில் ரூபா 5 கோடி பணம் தர வேண்டும் என்றும், இல்லையேல் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்
கடத்தப்பட்ட ஹசனைப் பாதுகாப்பாக மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பஞ்சாப் மாகாண முதல்வர் ஷாபாஸ் ஷெரீப் பொலிஸாரிடம் கேட்டுக கொண்டுள்ளார்.
சம்பவம் தொடர்பாக விசாரிக்க இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஹசனை கடத்திய நபர்கள் தெஹ்ரிக்- இ-தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என உறுதியாகக் கூற முடியாது" என்று பொலிஸ் கண்காணிப்பாளர் உமர் விர்க் தெரிவித்துள்ளார்.

உளவுத்துறை அதிகாரி கடத்தல்

இந்நிலையில், பாகிஸ்தான் உளவு அமைப்பைச் சேர்ந்த அதிகாரியான ஜமன் என்பவரை லாகூரில் இருந்து தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பினர் கடத்தியுள்ளனர். அவரை விடுவிக்க ரூபா 20 கோடி கேட்டு அவரது குடும்பத்தினருக்கு தலிபான்கள் மிரட்டல் விடுத்துள்ளனர். (த)

## தாய்லாந்து ராணுவ அதிகாரிகளுக்கு பயணத் தடையை விதித்தது ஆஸி.

### இராணுவப் புரட்சியை அடுத்து

கான்பரா, ஜூன் 02
தாய்லாந்தில் நிகழ்ந்த இரத்தம் சிந்தா இராணுவ சதிப் புரட்சியைத் தொடர்ந்து, அந்நாட்டு இராணுவ மேலதிகாரிகள் பலர் மீது ஆஸ்திரேலியா பயணத்தடை விதித்துள்ளது.
அடுத்து வரும் வாரங்களில் தாய்லாந்தில் நடத்தத் திட்டமிட்டிருந்த மூன்று நடவடிக்கைகளையும் ஆஸ்திரேலிய அரசு பிற்போட்டுள்ளது.
இவற்றில் பயங்கரவாதத் தடுப்புப் பயிற்சிகள் மற்றும் வெடிபொருள் செயலிழப்பு ஒத்திகைகள் முதலானவையும் அடங்குமெனத் தெரிகிறது. ஆஸ்திரேலிய இராணுவ அதிகாரிகளால் தாய்லாந்து அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட சட்டம் தொடர்பான பயிற்சி நெறியும் பிற்போடப்பட்டுள்ளது.
வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப், பாதுகாப்பு அமைச்சர் டேவிட் ஜொன்ஸ்டன் ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவை பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



சதிப் புரட்சிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா பயிற்சிகளை ரத்துச் செய்திருந்ததைப் போன்று, ஆஸ்திரேலியாவும் தாய்லாந்தைத் தண்டிக்க முனைந்திருக்கிறதென வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது.
ஆஸ்திரேலியா நெடுங் காலமாகத் தாய்லாந்துடன் பாதுகாப்பு உறவுகளைப் பேணி வருவதுடன், இவ்வாண்டு பாதுகாப்பு உதவியாக 2.7 மில்லியன் டொலரைச் செலவழிக்கத் திட்டம் வகுத்திருந்தது.
ஆட்கடத்தல முதலான குற்றச் செயல்களைத் தடுக்கும் முயற்சிகளில் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு ஆஸ்திரேலியா மேற்கொள்ளும் முயற்சிகள் தாய்லாந்து முக்கியமான பங்குதாரராகத் திகழ்ந்தது. (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்**: எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் தடைகளைத் தாண்டி முன்னேற்றங்களைக் காண்பீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலைகளைச் செய்து முடிப்பதற்கு கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**இடபம்**: குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு விலகும். வேலை நிமித்தமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடலாம். மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். எதையும் செய்து முடிக்கும் மனோதைரியம் உண்டாகும். வழக்கத்தை விட கூடுதலாக செலவு செய்ய நேரிடும்.

**மிதுனம்**: வாழ்க்கைத் துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனதில் தேவையற்ற எண்ணங்கள் தோன்றும். எவ்வளவுதான் திறமையாகச் செயலாற்றினாலும் மற்றவர்களிடம் இருந்து பாராட்டு கிடைப்பது அரிது. தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும்.

**கடகம்**: அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் அதிக அலைச்சலுக்குப் பின்னரே செய்து முடிக்க முடியும். சக பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிடைப்பது தடைப்படும்.

**சிங்கம்**: பிள்ளைகளை அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் குழப்பங்கள் ஏற்படலாம். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. காரியதாமதம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. இருக்கும் இடத்தை விட்டு தற்காலிகமாக வெளியில் செல்ல வேண்டி இருக்கும். பணவரவு தாமதப்படும்.

**கன்னி**: முன் கோபத்தைக் குறைத்து நிதானமாகப் போவது நல்லது. கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கும் போட்டிகள் விலகும். தேங்கி இருக்கும் பொருள்கள் விற்பனை ஆகும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பது போல் இருந்தாலும் சற்று இழுபறி நிலை இருக்கும்.

**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு விடயத்தையும் நேராகச் சென்று பார்ப்பது நல்லது. அடுத்தவரை நம்பி இருப்பதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்களிடம் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**விருச்சிகம்**: கோபத்தைக் குறைத்து நிதானத்தைக் கடைப்பிடிப்பது காரிய வெற்றிக்கு உதவும். கடன் தொல்லை தராது. வெளியூர் பயணம் செல்ல நேரலாம். கருத்துக்களை பரிமாறும் முன் பொறுமை மற்றும் நிதானம் அவசியம் என்பதை உணருங்கள்.

**தனுசு**: மிகவும் விரும்பிய நண்பர்களை விட்டுப் பிரிய வேண்டிய நிலை வரலாம். உங்களின் பொருள்களை மிகவும் கவனமாக பார்த்துக் கொள்ளவும். தூக்கம் இல்லாமல் தவிக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு யோகா போன்ற பயிற்சிகளைச் செய்வது நன்மையைத் தரும்.

**மகரம்**: உங்களுடைய தாய்வழி உறவினர்களுடன் கருத்து மோதல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகமான உழைப்பை கொடுக்க வேண்டி வரலாம். வேலையில் கவனமுடன் செல்வது நல்லது.

**கும்பம்**: உத்தியோகத்தர்கள் திறமையை நிர்வாகம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும். உங்கள் பணி நிரந்தரமாகும். மேலதிகாரிகள் மற்றும் உடன் பணி செய்வோரிடம் வீணான வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். ஆகவே எல்லோரையும் அனுசரித்துச் செல்லவும்.

**மீனம்**: பு... தாக வாகனங்கள் ஏதேனும் வாங்கும் எண்ணமிருந்தால் நன்கு ஆராய்ந்து, ஆலோசனைகள் செய்தும் வாங்குவது நல்லது. முதலீடு இல்லாத புதிய தொழில் தொடங்குவதற்கும் உங்களுக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். பண விடயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை.

**நாளை** வைகாசி-20 செவ்வாய்க்கிழமை | 03.06.2014

திதி: பஞ்சமி கா.07.29 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் முழுவதும்
சுபநேரம்: 10.22-11.52 வரை
இராகுகாலம்: 02.52-04.22 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## செயல்முறை வேதாந்தம் - 2

ஒரு சிறுவனுக்கு ஞானம் எப்படி வந்தது என்பது பற்றி சாந்தோக்கிய உபநிடதத்தில் உள்ள மிகப் பழைமையான கதை ஒன்றைப் பற்றி உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அந்தக் கதையின் போக்கு நயமற்றது போலத் தோன்றினாலும், அதில் ஓர் உயர்ந்த கொள்கை அடங்கியுள்ளது. ஒரு சிறுவன் தன் தாயிடம், "அம்மா நான் வேதங்கள் கற்றுக் கொள்ளப் போகிறேன். எனவே தந்தையின் பெயரையும், நான் பிறந்த குலத்தின் பெயரையும் பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டான். ஆனால் அந்தத் தாய் முறைப்படி திருமணம் ஆனவள் அல்ல. இந்தியாவில் ஒரு பெண் திருமணம் ஆகாமல் குழந்தையைப் பெற்றுக் கொண்டால் அந்தக் குழந்தையைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளாது. அவளையும் அந்தக் குழந்தையையும் சாதியை விட்டே தள்ளி வைத்து விடுவார்கள். அந்தக் குழந்தைக்கு வேதங்கள் படிக்கும் தகுதியும் இல்லாமல் போய் விடும். எனவே அந்தப் பெண், "மகனே, உனது குலம் என்ன என்பது எனக்குத் தெரியாது. நான் பல இடங்களில் வேலை செய்து பிழைத்து வந்தேன், உனது தந்தையார் என்பதும் எனக்குத் தெரியாது, ஆனால் என் பெயர் ஜாபாலா, உன் பெயர் சத்தியகாமன்" என்றாள். அந்தச் சிறுவன் ஒரு முனிவரிடம் சென்று, அவரிடம் தன்னை அவருடைய மாணவனாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டான். அதற்கு அந்த முனிவர், "குழந்தாய், உன்னுடைய தந்தையின் பெயர் என்ன? உன் குலம் என்ன?" என்று கேட்டார். அந்தச் சிறுவன் தன் தாயிடம் தான் கேட்டு வந்த விபரங்களைப் பற்றிக் கூறினான். அதைக் கேட்ட அந்த முனிவர், "தன்னைப் பற்றிய இத்தகைய கேவலமான உண்மையை பிராமணனைத் தவிர வேறு யாரும் சொல்ல முடியாது. நீ ஒரு பிராமணனாகத்தான் இருக்க வேண்டும். எனவே நான் உனக்குக் கற்றுத் தருகிறேன். நீ உண்மை நெறி பிறழாதவன்" என்று கூறி அந்தச் சிறுவனைத் தம்மிடம் வைத்துக் கல்வி கற்பித்து வந்தார்.

# மூன்று நாடுகளின் வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தனர்



ரஷ்யா, ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தைச் சென்றடைந்தனர்.
உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கும் இடையே பனிப்போர் நிலவி வரும் சூழ்நிலையில் விண்வெளித்துறையில் அந்நாடுகளிடையே ஒத்துழைப்பு சிறப்பாக உள்ளதை இந்த நிகழ்வு உறுதிப்படுத்துகிறது.
3 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெற்றிகரமாகச் சென்றடைந்து விட்டனர் என்பதை ரஷ்யாவின் விண்வெளி ஆய்வு மையமான ராஸ்கோஸ்மாஸ் தனது அறிக்கையில் உறுதிப்படுத்தியுள்ளது.
ரஷ்யாவின் மேக்ஸிம் சுராயெவ், நாசாவின் வைஸ்மேன், ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஜெர்ஸ்ட் ஆகியோர் திட்டமிட்டதற்கு சுமார் 2 மணித்தியாலம் தாமதமாகவே சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தைச் சென்றடைந்தனர்.
எனினும் இதில் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை என்று ராஸ்கோஸ்மாஸ் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூவரும் கஜகஸ்தானில் உள்ள மையத்தில் இருந்து சோயூஸ் விண்வெளி ஓடத்தில் புறப்பட்டுச் சென்றனர். 16 நாடுகள் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன. இதில் அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றின் பங்களிப்பு பெரும்பான்மையானது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | | | | | | | |
| 8 | 6 | | 2 | | | | 3 | |
| | | 2 | | | 4 | | 9 | 8 |
| | 7 | | 4 | 2 | 9 | 8 | 1 | |
| | | | 3 | | 6 | | | |
| | 4 | 6 | 8 | 5 | 1 | | | |
| 4 | 2 | | 7 | | | 9 | | |
| | 8 | | | | 2 | | 4 | 3 |
| | | | | | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 8 | 4 | 7 | 2 | 5 | 6 | 3 |
| 5 | 6 | 3 | 1 | 9 | 8 | 7 | 2 | 4 |
| 7 | 4 | 2 | 6 | 3 | 5 | 9 | 8 | 1 |
| 8 | 1 | 9 | 2 | 6 | 3 | 4 | 5 | 7 |
| 6 | 3 | 5 | 9 | 4 | 7 | 8 | 1 | 2 |
| 2 | 7 | 4 | 5 | 8 | 1 | 6 | 3 | 9 |
| 9 | 5 | 7 | 3 | 2 | 6 | 1 | 4 | 8 |
| 4 | 2 | 1 | 8 | 5 | 9 | 3 | 7 | 6 |
| 3 | 8 | 6 | 7 | 1 | 4 | 2 | 9 | 5 |

# கலாசாலையில் பயிற்சி முடித்தோருக்கு இறுதிப் பரீட்சை

அச்சுவேலி, ஜூன் 2

ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் இரண்டு வருட கால பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறிய ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் இன்று ஆரம்பித்து எதிர்வரும் 8 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 8 ஆசிரியர் கலாசாலைகளிலும் இந்தப் பரீட்சை நடைபெறுகின்றது.

கல்வி உளவியல், கல்வி வரலாறும் கல்வித் தத்துவங்களும், கல்வி மதிப் பீடும் அளவீடு உள்ளிட்ட பாடங்களும் பயிற்சி பெற்ற பாடத்துறைக்கான கற்பித்தல் முறைகள் தொடர்பான பாடங்களும் இலங்கை பரீட்சை திணைக்களத்தாலும் மற்றும் செயல்முறை உள்ளிட்ட பாடங்களும் இறுதிப் பரீட்சையாக நடைபெறுகின்றது. (வ-11)

# முட்டையின் விலை குறைந்ததால் கோழி வளர்ப்போருக்குப் பாதிப்பு



கோப்புப்படம்

அச்சுவேலி, ஜூன் 2

வெளி மாவட்டங்களில் இருந்து பெருமளவில் லொறிகள் மூலம் கோழி முட்டைகளை ஏற்றி வந்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதால் உள்ளூர்ப் பண்ணையாளர்களும் கோழி வளர்ப்போரும் பாதிப்புக்கு உள்ளாவதுடன் தமது தொழில் முயற்சியைக் கைவிட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளி மாவட்டங்களில் இருந்து லொறி மூலம் வாராந்தம் லட்சக் கணக்கான எண்ணிக்கையில் கோழி முட்டைகளை ஏற்றி வந்து கிராமம், நகரம் என்ற வேறுபாடு இன்றி தென்னிலங்கை வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். அதுவும் கடன் அடிப்படையில் நடைபெறுகின்றது. தென்னிலங்கையில் இருந்து எடுத்து வரும் வெள்ளை நிற முட்டை பத்து ரூபாவுக்கும் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

வெளி மாவட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட கோழி முட்டை மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் கோழி வளர்ப்போர் செலவைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாமல் இடர்படுவதாகவும் கோழி வளர்ப்பைக் கைவிட்டு விட வேண்டிய நிலைக்கு உள்ளாகி இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். (க-11)

# மடு வலய மாணவர்களுக்கு ஊக்குவிப்புச் செயலமர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 2

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மடு வலயப் பாடசாலைகளில் தரம் ஐந்தில் கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையை ஊக்குவிக்கும் செயலமர்வுகளை நடத்தியது. இந்த செயலமர்வில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலயத்தில் மடு வலயப் பாடசாலை மாணவர்கள் 150 பேரும், ஆசிரியர்கள் 20 பேரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம், நா.கந்ததாசன் ஆகியோர் ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர். எதிர்வரும் ஜூன் மாதத்தில் மன்னார் வலயப் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-7)



## யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி கோயில்
## (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்) புனராவர்த்தன
## அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் 02.06.2014

விநாயகப்பெருமான் அடியார்களே!

விநாயகப்பெருமானின் ஆலயம் அழகுறச் செப்பனிடப்பட்டு எம்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெருக்கும் வண்ணம் விநாயகப்பெருமானுக்கும் விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வலிங்கப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

**நிகழும் மங்கலகரமான ஜய வருஷம் வைகாசித் திங்கள் 19ஆம் நாள் இன்று (02.06.2014) திங்கட்கிழமை**

**பூர்வபக்க பஞ்சமித் திதியும் பூச நட்சத்திரமும், சந்திரஹோரையும் சித்தயோகமும் கூடிய காலை 6.50 மணி முதல் 7.12 மணி வரையுள்ள மிதுன லக்ன சுபவேளையில் மகா கும்பாபிஷேக கிரியைகளில் ஆசார சீலர்களாகக் கலந்துகொண்டு**

பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

### பிரதமகுரு அருள் ஆசியுரை



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயிலில் (பன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோயில்) இன்று (02.06.2014) திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகம் செய்து வைப்பதில் பெரும் பேறு பெற்றவனாக உள்ளேன். கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற என் நல்லாசிகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொண்ட அனைத்து சைவ அடியார்களுக்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக.

அனைவரும் சித்திபுத்தி சமேத விநாயகப் பெருமானின் அருளோடு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி அருளாசி கூறுகின்றேன்.

வேத சிவாகம ஞானபானு கிரியாகரம்
பிரம்மஸ்ரீ க.ர.சோமசுந்தரக் குருக்கள்
பிரதம குரு ஸ்ரீ பர்வதவர்த்தனி ஆலயம்-இராமேஸ்வரம்

### ஆலய தேவஸ்தான குரு ஆசியுரை



சித்திபுத்தி சமேத ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயிலில் (பன்றிக் கோட்டுப்பிள்ளையார்கோயில் இன்று எம்பெருமானின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லோரும் இந்தக்கும்பாபிஷேகப் பெருவிழாவைக்கண்டு களித்து பேரானந்த பெருவாழ்வு வாழ்வீர்களாக.

ஆலயகுரு சிவஸ்ரீ சி.வைத்தியநாத சர்மா.

### ஆலய வரலாறு



ஈழமணித்திருநாட்டில் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கில் ''பன்றிக்கோட்டுவளவு'' எனும் காணியில் விஸ்வலிங்க மகாகணபதிகோயிலிருந்து சித்தி புத்திசமேத விநாயகப்பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கின்றார். இன்று விநாயகப் பெருமானுக்கு 12 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் மகாகும்பாபிஷேகப் பெருந்திருவிழா நடைபெறுகின்றது. இன்று நடைபெறும் நிகழ்வில் கலந்துகொண்டு பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளை அருளைப்பெற எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலயத்தின் ஆரம்பம் எக்காலத்தைச் சேர்ந்தது என்பது வரலாற்றுரீதியாக திட்டவட்டமாக தெரியவில்லை எனினும் கர்ணபரம்பரைக் கதைகளின்படி போத்துக்கேயர் (1505 ஆம் ஆண்டு) காலத்துக்கு முன்பே இக்கோயில் இதேயிடத்தில் அமைந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. ஒருபோத்துக்கேய சிப்பாய் கத்தோலிக்க மதத்தை பரப்பும் வேளையில் நவாலியிலிருந்து பொம்மை வெளியூடாக வந்தவேளை இப்பிள்ளையாரை ஒருகுளக் கரையில் மரநிழலில் வைத்து வணங்கிக் கொண்டிருந்த ஓர் அன்புப் பக்தனைக் கண்டு ஆவேசமடைந்து அக்கடவுள் சிலையை தனது சப்பாத்துகால்களால் உதைத்த போது அருகில் உள்ள வயலில் இருந்த ஒரு பன்றி கோபவேகத்துடன் அச்சிப்பாயை குத்திக்குதறிகொன்றுவிட்டது. அதன் காரணமாகவே இக்கோயிலுக்கும் அக்கோயிலில் குடிகொண்டு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் பிள்ளையாருக்கும் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் என அக்காலத்திலிருந்து இன்றுவரை அழைக்கின்றனர்.

பின்பு ஒல்லாந்தர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் கோயிலானது சில அந்தணப் பெரியார்களினாலும், செட்டிமாராலும் விஸ்தரிப்புக்குள்ளனது. இதேயிடத்தைச் சேர்ந்த அந்தணப் பெரியார்களும், செட்டிமார்களும், பன்றிக்கோட்டு வளவு என்னும் இன்னோர் ஆதனத்தில் ''துவாதசி மடம்'' எனும் மடத்தையும் ஸ்தாபித்து பரிபாலித்துவந்ததுடன் அம்மடம் செவ்வனே நடை பெறுவதற்காக நிலங்களையும் தர்மதானம் செய்தார்கள். இவர்கள் பல திருப்பணிவேலைகளை செய்வித்ததுடன் கோயில் செயற்பாடுகள் தங்குதடையின்றி நடைபெற பல ஆதனங்களை தருமதானம் செய்தனர். 1792 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1794 ஆம் ஆண்டு தை மாதம் 27ஆம் திகதி முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது 1951 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி கோயிலினதும் துவாதசி மடத்தினதும் தர்மகர்த்தாசபை முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டது. சட்டரீதியாக தர்மகர்த்தாசபை ஒன்றிடம் கோயிலினதும் துவாதசி மடத் தினதும் ஆட்சியையும் நிர்வாகத்தையும் அதே ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இன்று 12 பேர் கொண்ட தர்மகர்த்தாசபை தெரிவுசெய்யப்பட்டு ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. ஆலய பரிபாலனத் துடன் வேறு சமூக, சமய கல்விச்செயற்பாடுகளிலும் சிறப்பான முறையில் வேலை செய்து வருகின்றனர். ஆலயத்தில் ஓர் அறநெறி பாடசாலையை உருவாக்கி கல்விச் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. கோயிலில் நித்திய பூசைகள் அலங்கார உற்சவங்கள் உரிய காலங்களில் நடைபெற்று வருகின்றன.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற பலரின் ஒத்துழைப்புடனும் உதவிகளுடனும் புனருத் தாரண வேலைகள் செய்யப்பட்டு நடைபெற்று முடிந்திருக்கின்றன. உதவிகள் நல்கிய கொடை வள்ளல்கள் பணியை சிறப்புறச்செய்த கலைஞர்களுக்கும் கும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகள் சிறப் பாக நடைபெற உதவிய அந்தண குருமார்கள், சிவாச்சாரியர்கள் தர்மகர்த்தாசபையினர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இந்தவேளையில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

வி.மாணிக்கம் - (செயலாளர்)

(39628)(7.6.3)

**655, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.** **"அனைவரும் வருக ஐங்கரன் அருள் பெறுக"** **தர்மகர்த்தா சபையினர்**

## வரவேற்பு வழிபாட்டிடம் திறப்பு

கொழும்புத்துறை, ஜூன் 2

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வரவேற்பு அந்தோனியார் வழிபாட்டிடம் ஈச்சமோட்டைச் சந்தியில் அமைக்கப்பட்டு இன்று மாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு றோய்பேடினன்ட் அடிகள் இன்று மாலை 5மணிக்கு திருச்சொரூபத்தை மந்திரித்து வரவேற்பு வழிபாட்டிடத்தை திறந்து வைக்கவுள்ளார். (வ-135)

## மனைப் பொருளியல் கண்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனைப் பொருளியல் அலகு, மனைப்பொருளியல் தொடர்பான கண்காட்சி ஒன்றை எதிர் வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இந்தக் கண்காட்சியானது மனைப் பொருளியலுடன் தொடர்பான மனை நிர்வாகம், மனித விருத்தி, புடைவையும் ஆடை அமைத்தலும், உணவும் போசணையும் ஆகிய பிரதான நான்கு பிரிவுகளை உள்ளடக்கியதாக இடம்பெறவுள்ளது.

இவற்றுக்குப் புறம்பாக இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள், உடனடி பழப்பானங்கள், வெதுப்பக உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்கிய பகுதி ஒன்றும், மேற்படி விடயங்களுடன் தொடர்புபடும் உணவு குடிவகைகள் தொடர்பான விடயங்கள், விருந்தோம்பல் முகாமைத்துவம் (Hospitality Management), ஹொட்டல் தொழிற்றுறை (Hotel Industry) தொடர்பான காட்சிப்படுத்தல்களும், விளக்கவுரைகளும் பார்வையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் எனப் பல தரப்பட்டவர்களும் கலந்து கொண்டு பயன் பெறும் வகையில் விளம்பரப்படுத்தல் செய்யப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கண்காட்சி தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மனைப்பொருளியல் துறை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு

உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் புதன்கிழமை குருதிக் கொடையாளர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த குருதிக் கொடையாளர்கள், ஒழுங்கமைப்பாளர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவில் பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண சுகாதார அமைச்சர் எஸ். சத்தியலிங்கம், யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.வி.டி.யு.ஏ.பெரேரா, வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் டயஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-10-36)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி திருநாவுக்கரசு



யாழ். வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியையும் முதலியார் குளம், செட்டிகுளத்தையும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி திருநாவுக்கரசு 27.05.2014 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி- ராசம்மாள் தம்பதியின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற ரட்ணம் -ராசமணி தம்பதியரின் மருமகனும், சிவானந்தம் (கமலம்) அவர்களின் பாசமிகு கணவரும், யோகரட்ணம், விஜயரட்ணம், பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், ஜெயந்தி (பிரான்ஸ்), நந்தினி (வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு), சுகந்தி (ஜேர்மனி), சுமதி (சுவிஸ்), சிவகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் பாச மிகுதந்தையும், அமிர்தலிங்கம்(ரவி-பிரான்ஸ்), கிறேனியர், ஜேம்ஸ் (ஜேர்மனி), ஜெயதாஸ் (சுவிஸ்), தங்கேஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுசன், நிதர்சன், சுதர்சன், தர்சன், தர்சினி, பவித்திரன், ஜனார்த்தனன், கவினேஸ், சஜீனா, ஜெரூசா, அசுஜா, அகீரன், அட்சயா, அகீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.06.2014 வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.73, முதலியார் குளம், செட்டிகுளம், வவுனியா. (சி/13956)(6.4.3)

தகவல்: குடும்பத்தினர். 077 970 7808, 077 252 2675

## மரண அறிவித்தல்

### சபாபதி தியாகராசா

(இளைப்பாறிய பிரதம லிகிதர் -பொதுப்பணிகள் திணைக்களம்)



ஆலங்குளாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி தியாகராசா நேற்று (01.06.2014) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா- பறுவதபத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் பாசமிகு கணவரும், சிவபாலன் (UK) சிவராஜன் (பிரான்ஸ்), சிவநேசன், சிவரஞ்ஜனி, சிவரஞ்ஜன் (UK), சிவகுமார் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபத்திரா (UK), சந்திரமலர் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி, Dr.சிறிபவானந்தராஜா (பிரதிப் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கலாஜினி (UK), சுகந்தா (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகாலட்சுமி, காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மைத்துனரும், தர்சினி, தர்சன், சிவவைஷ்ணவி, சிவநிஷா, வினோதா, இஷாணி, லக்ஷன், துர்கவி, ஜதீசன், லஷ்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி புனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி பாடசாலை முன்வீதி, அராலி மத்தி, அராலி. (48676)(7.6.3)

தகவல் : குடும்பத்தினர்.

## மூடிய நிலையில் ச.ச.நிலையம் முன்பள்ளிக்கான உதவிகள் பாதிப்பு

வலி.தென்மேற்கு, ஜூன் 2

சுதுமலை நாமகள் சனசமூக நிலையம் பல மாதங்களாக மூடப்பட்டுள்ளதால் நிலையத்தின் கீழ் இயங்கி வரும் முன்பள்ளிக்கு பொது அமைப்புக்களால் வழங்கப்பட்டு வரும் உதவிகளைப் பெறுவதில் வீண் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் அபிவிருத்தியில் தடங்கலும் தாமதமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை குறித்து முன்பள்ளி ஆசிரியை, சிறுவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மேற்படி சனசமூக நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தரைக் கோரியுள்ளார்.

பல வருடங்களாக சிறப்பாக இயங்கி வந்த குறித்த சனசமூக நிலையம் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டாலும் ஒற்றுமையின்மையாலும் பல மாதங்களாக மூடிய நிலையில் உள்ளது.

கடந்த காலங்களில் முன்பள்ளியின் அபிவிருத்திக்கு பொது நிறுவனங்களால் வழங்கப்பட்டு வந்த உதவிகள் சனசமூக நிலையமூடாகவே வழங்கப்பட்டு வந்தன. தற்போது சனசமூக நிலையம் செயலிழந்துள்ளதால் முன்பள்ளிக்கு வழங்கப்படும் உதவிகளைப் பெறுவதில் கால தாமதமும், தடங்கலும் உருவாகியுள்ளது.

இந்த நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள முன்பள்ளி ஆசிரியை முன்பள்ளியின் அபிவிருத்தி கருதி முடங்கிக் கிடக்கும் சனசமூக நிலையத்தை மீண்டும் இயங்க வைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளார்.

இதேவேளை - இணுவில் மத்தியில் ஏற்பட்ட விரிசல் உச்சக் கட்டத்தை அடைந்ததனால் மேற்படி சனசமூக நிலையம் கழிவு ஓயில் வீச்சுக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது. (வ-115)

## தொடரும் நினைவுகளின் 31 ஆம் அலைகள்



உயிர்ப்பும் உயிரும் நானே!
என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வான்!

தாயின் மடியில் 03.03.1954

ஆண்டவன் மடியில் 02.05.2014

### அமரர் ஞானப்பிரகாசம் அன்ரன்

பத்து மாதம் சுமந்து
தாய் கொண்டு வந்ததை
தாலாட்டி வைத்ததை
நோய் கொண்டு போனதம்மா
காலம் வந்தால்
நேரம் வரும்
நேரம் வந்தால் யார்? யார்?
என்ன செய்ய முடியும்
இறைவன் படைத்ததை
இறைவன் கேட்கின்றார்
இல்லையென்றால் இறைவன்
இரங்கித்தான் விடுவாரா?
உறவைச் சொல்லி அழுவதினாலே
உயிரைத் தான் மீண்டும் தருவாரா?

இல.28, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி/13594)(4.6.3)

குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவுகள்

### பற்றிக் டிவின்சன்

(மில்ரன்)

பிறப்பு 26.07.1977



மறைவு 02.06.2008

அன்பாய் பண்பாய் பாசமாய் பழகி அனைவரையும்
சந்தோஷப்படுத்தும் உனக்கு எங்கிருந்து வந்தான் எதிரி
தாங்க முடியவில்லை உனது பிரிவு
நீங்கள் என்றும் இறைவனின் சன்னிதானத்தில்
வீற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


149/2, கதீற்றல் லேன், யாழ்ப்பாணம். (48671)(7.6.3)

உனது பிரிவால் துயருறும் அம்மா, சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள், மைத்துனர்.

## நீங்காத நினைவில் பதினோராம் ஆண்டு

### அமரர் கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், சோலை வரிப்பகுதி, யாழ்.மாநகரசபை)



வையத்துள் 09.02.1932

வானுலகில் 04.06.2003

திதி: வைகாசி பஞ்சமி (02.06.2014)

எங்கள் இதயமதில் பிரியமாய் இருந்த நீங்கள்
எம்மை விட்டு நிலையாய் பிரிந்து சென்றதேனோ
தந்தையென இருந்து நீங்கள் எம் கடமையெல்லாம்
நிறைவாக செய்து முடித்ததாலோ
சிவபாத சுந்தரமெனும் திருநாமம் பெற்றதனால்
சிவன் பாதம்தனை தேடிச் சென்றீரோ யாமறியோம்
நிறைவான வாழ்வு கண்டு அமரருலகடைந்த
உங்கள் ஆன்மா இறையடியில் வாழ்ந்திடவே தம்
பிள்ளைகள் பதினோராண்டுகளாய் கீரிமலைந்தோட்ட
கந்தனை வேண்டி நிற்கின்றோம்.

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (44677)(6.6.4)

என்றும் நீங்கா நினைவுடன் குடும்பத்தினர்.

## குடும்பஸ்தர் காயம்

உயரமான மாமரத்தில் மாங்காய் பிடுங்கிய குடும்பஸ்தர் கிளை முறிந்து வீழ்ந்ததில் இடுப்பு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில் தவசிக்குளத்தில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை மகிழ்ரஞ்சிதராஜா (வயது-48) என்பவர் மரத்திலிருந்து வீழ்ந்து பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வீரசிங்கம் ஜெகதீஸ்வரன்

(முன்னாள் கணித ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி, எடிசன் அக்கடமி)



கேட்டை நட்சத்திரத்தில்
வந்துதித்த ஜெகனே
ஊர்தி வந்துன்னை
அழைத்துச்சென்றதோ
காய்த்துக் குலுங்கி
கலகலக்கும் வேளையில்
ஏங்கி எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றாய்.

கொக்கன் மடத்தடி, நொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் (46621)(4.6.3)

ஜதுன் (மகன்)
அபர்ணா (மனைவி)

# ஆளும்கட்சி அமைச்சர்களிடம் எழுத்து மூலம் உறுதிமொழி

## மோடி பாணியில் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு.ஜூன் 2
ஆளும் கட்சி அமைச்சர்களிடம் உறுதிமொழியொன்றை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.
மீளவும் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு நிகராக இந்த உறுதிமொழி பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.
அமைச்சரவையில் எடுக்கப் படும் தீர்மானங்களுக்கு அனைத்து அமைச்சர்களும் கூட்டுப்பொறுப்பு வகிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உறுதி மொழி பெற்றுக்கொள்ளப்பட உள்ளது.
அண்மையில் இந்தியாவில் புதிதாக பிரதமர் பதவி ஏற்றுக் கொண்ட நரேந்திர மோடி, தனது அமைச்சர்களிடம் இவ்வாறான ஓர் உறுதிமொழியைப்பெற்றுக்கொண்டுள்ளார்.


மஹிந்த ராஜபக்ஷ

அதேவிதமான உறுதிமொழியொன்றை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.
எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த உறுதிமொழி குறித்த ஆவணம் அமைச்சர்களிடம்வழங்கப்பட்டுகையொப்பம் பெற்றுக்கொள்ளப்பட உள்ளது.
அரசு என்ற ரீதியில் அமைச்சரவையில் எடுக்கப்பட்டுவரும் சில தீர்மானங்களின் இரகசியத் தன்மையைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படவுள்ளது.
அமைச்சரவைக் கூட்டங்களில் அனைவரும்பங்கேற்க வேண்டும். அவ்வாறு பங்கேற்கத் தவறும் பட்சத்தில் அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க வேண்டியது அவசியமானது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.
அமைச்சரவையில் எடுக்கப் படும் தீர்மானங்கள் தொடர்பிலான கூட்டுப் பொறுப்பிலிருந்து எவரும் விடுபட முடியாது என்று அவர் தெரிவித்தாரென சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இதேவேளை ஆளும் கட்சி அமைச்சர்கள் அரசிலிருந்து விலகி ஐக்கியதேசியக்கட்சியில் இணைந்து கொள்ளப் போவதாக அண்மையில் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார்.
அதனையடுத்து அமைச்சர்கள் யாரேனும் தமது அரசிலிருந்து விலகிவிடுவார்களோ என்ற அச்சநிலை காரணமாகவே ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளார் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## நெஞ்சக் கதவைப் கொஞ்சம்........

### இக்கரை பச்சையில்லை

அயல் நாட்டின் அதிகாரி ஒருவருக்கான பிரிவுபசாரத்தின் போது அவர் ஆற்றிய உரை இந்த மண்ணுக்குப் பெருமை தருவதாக இருந்தது. நிறைகளை மட்டும் வெளிப்படுத்தும் பண்பாகவே அமைந்திருந்த உரையில் எம்மவரது சுத்தமான தமிழ் மொழி, தனித்துவமான கலாசாரம், இந்து ஆலய வழிபாட்டு முறைகள் ஆகியன தொடர்பில் மிக உயர்வாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவற்றுக்கு நாங்கள் அருகதை உள்ளவர்கள்தானா என்பதுதான் சந்தேகமாகவுள்ளது. சமூக நலன் விரும்பிகள் எத்தனையோ பேருக்கு இது மன உறுத்தலை, மன விரக்தியை ஏற்படுத்தியிருக்கக் கூடும். எது எப்படியாயினும் இந்த மண்ணின் குணங்கள் மெல்லச் செத்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் யதார்த்தமாகும்.
சுத்தமான தமிழ்மொழியைக் கற்றுத் தரும் மொழிப் புலமையாளருக்கு இங்கு பஞ்சமில்லை; கற்றுக் கொள்வோருக்கும் பிரயோகிப்போருக்கும்தான் பஞ்சமாகவுள்ளது. இங்குள்ளோரது கலாசாரம் தனித்துவமானது; ஆயினும் அதனைக் கடைப்பிடிக்க, அதன் தனித்துவத்தைப் பேணிக்கொள்ள இயலாத நிலைக்கு அது நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆலயங்களின் வழிபாட்டு முறைகள் சிறப்பானவைதான்; வழிபாட்டுக்கல்லாது ஆலயங்களுக்கு வரும் ஒரு சாரார் எமது வழிபாட்டு முறைகளை உதாசீனப் படுத்துவதைத் தடுக்க முடியாமல், ஆதங்கப்படுவதற்கு மட்டும்தான் முடியும்.
சுத்தமான தமிழ்மொழியா? "மவனே கொல்லிப்போடுவன்" என்பார்கள். இதுவும் பத்தியப்பட்டு விட்டதால் 'எஸ்கேப்' ஆகவேண்டியதுதான் புத்தி. விரட்டி விரட்டி வாளாலும் கைக்கோடரியாலும் தாக்குவது. சினைப் பசுவை அடித்துக் கொள்வது. இன்னோரன்ன பிறவுமே இன்றைய தனித்துவக் கலாசாரம். திருவிழாவை அமைதியான முறையில் நடத்த காவல்துறையினரை கூடுதலாகக் கோருவதும். புனித தீர்த்தவாரிக்கு இரண்டு சுற்று இரும்பு வேலி அமைப்பதும் வழிபாட்டுக்கல்லாது ஆலயத்துக்கு வரும் நரகத்து முட்களால் எமது வழிபாட்டு முறைகள் மலினப்படுத்தப்படுவதால்தானோ? இக்கரை பச்சையில்லை என்பது அக்கரைக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

# வாகன விபத்துக்களில் 2,728 பேர் உயிரிழப்பு


கோப்புப்படம்

கொழும்பு, ஜூன் 2
2009 ஆம் ஆண்டிலிருந்து ... வரையான காலத்தில் 2,728 பிள்ளைகள் வாகன விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.
அதே காலகட்டத்தில் வாகன விபத்துக்களில் பாடசாலை செல்லும் 8,524 பிள்ளைகள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்என்றுஅவர்கூறினார்.
இவ்வாறு விபத்துக்களுக்கு உள்ளாகியுள்ளோரில் சிலரது அவயவங்கள் அகற்றப்பட்டு வாழ்நாள் முழுவதும் வலது குறைந்தோர் என்ற நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-22)

# தமிழர்களின் சமாதிகள் திருமலையில் சேதம்

## நேரில் சென்று பார்வையிட்டார் நகரசபைத் தலைவர்


சேதமாக்கப்பட்ட சமாதிகள்.....

திருகோணமலை, அன்புவழிபுரம் பொது மயான சமாதிகளிலுள்ள தமிழ்ப் பெயர்களடங்கிய கல்வெட்டுக்கள் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன.
இந்தக் கல்வெட்டுக்களிலுள்ள பெயர்கள், விவரங்கள், மற்றும் புகைப்படங்கள் என்பவையே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா, உறுப்பினர் எஸ்.அருட்செல்வம் ஆகியோர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையன்று சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். (ச-40)

# அதிகார பகிர்வு குறித்த யோசனை வேண்டும்

## ரவி கருணாநாயக்க எம்.பி.கோரிக்கை

கொழும்பு.ஜூன் 2
நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான அதிகாரப் பகிர்வு குறித்த யோசனைகளை அரசு முன்வைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
மாகாணசபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்களைப் பகிர்வது அல்லது ஏனைய அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டங்கள் குறித்து அரசு யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.
யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டால் மட்டுமே அதற்கு ஆதரவளிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதற்கு முன்னர் அரசு யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டியது அவசியமாகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.
அரசின் தீர்வுத்திட்ட யோசனை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.
இந்த யோசனைத் திட்டத்துக்கு உள்ளீடுகளை வழங்க முடியும். அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒரே இடத்தில் இணைக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
எனவே சகல யோசனைகளும் முன்வைக்கப்பட்டால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கத் தயார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இலங்கையர் தொடர்பில் உன்னிப்பாக அவதானம்

கொழும்பு.ஜூன் 2
உக்ரைனிலிருந்து இலங்கையர்களை அழைத்துக் கொள்ளும் திட்டம் இல்லை. உக்ரைனில் இடம்பெற்று வரும் பிரச்சினைகள் குறித்து இலங்கை அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.
எனினும், உக்ரைனில் வாழ்ந்து வரும் இலங்கையர்களை அவசரமாக மீள அழைக்கும் திட்டங்கள் எதுவும் தற்போதைக்கு இல்லை என்று ரஸ்யாவுக்கான இலங்கைத் தூதர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார். உக்ரைனில் 200 இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர்.
அதில் 60 பேர் மாணவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.
உக்ரைனில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதுடன், தொடர்புகள் பேணப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# தமிழர் பிரச்சினைகளை தீர்க்க முனையவில்லை அரசு

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூன் 2
வடக்கு ,கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு காத்திரமான முறையில் தீர்வுத்திட்டங்களை முன்வைக்கவில்லை என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.


திஸ்ஸ விதாரண

வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு அரசு செயற்படவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் யதார்த்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படாத நிலைமை நீடித்து வருகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
13 ஆம் திருத்தச் சட்டத்தின் சகல அதிகாரங்களையும் வழங்க வேண்டியதில்லை. படிப்படியாக கிரமமான முறையில் ஒவ்வொரு விடயமாக வழங்கப்பட முடியும் என்று அவர் தெரிவித்தார்.
பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முடியும். நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
தமிழ் மக்களை திருப்தி செய்தால் பயங்கரவாதம் மீளத் தலைதூக்க வாய்ப்பில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**தேவை**

கருப்பஞ்சாறு எடுப்பதற்கு கரும்பு உற்பத்தி செய்பவர்களிடமிருந்து மொத்தமாக கரும்பு கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: T.தவராசா 077 592 5088

## இலங்கை அகதிகள் மீது ஆஸி. குற்றச்சாட்டு

ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்ற வீடமைப்பு பிரச்சினைகளுக்கு இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு குடிப்பெயர்ந்த தமிழ் குடும்பங்களே காரணம் என்று அந்த நாட்டு அரசு குற்றஞ் சுமத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய பசுமை கட்சியின் செனட் உறுப்பினர் ஸ்கொட் லூட்லாம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரொனிஎபட் தலைமையிலான ஆஸ்திரேலியா அரசு இலங்கை அகதிகளை மோசமாக நடத்துகிறது. தங்களின் தவறுகளை அகதிகள் மீது சுமத்துகிறது.

ஆஸ்திரேலியாவின் புதிய குடிவரவு சட்டம் விடயத்துக்கு ஒப்பானது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## போதைக்கு அடிமையானவர் குருந்தத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

கனடா சென்று போதைப் பொருள்களுக்கு அடிமையாகி மீளமுடியாமல் நாடு திரும்பிய குடும்பஸ்தர் குருந்தத்தில் இணைந்துள்ளார்.

உழைக்கவென புலம் பெயர்ந்து சென்று அங்குள்ள கலாசாரத்துக்கு மாறி போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி மீள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இந்த நிலையில் தாயகம் திரும்பிய குறித்த குடும்பஸ் தரை அவரின் எதிர்கால நலன் கருதி குருந்தம் சிகிச்சைப் பிரிவில் குடும்பத்தினரால்இணைக்கப்பட்டுள்ளார். (வ-9)

# மரண அறிவித்தல்



## ஞானரத்தினம் டேவிட் ஜெயரத்தினம்

**(இளைப்பாறிய பொறியியலாளர் லங்கா சிமெண்ற் லிமிடெட்)**

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாவும், தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும், கொண்ட ஞானரத்தினம் டேவிட் ஜெயரத்தினம் 2014.06.01 ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.அன்னார் காலஞ்சென்ற திரு.சாமுவேல் ஞானரட்ணம் - திருமதி. மேரி ஜீவமணி தம்பதியின் இளைய மகனும் காலஞ்சென்ற திரு.S.A குணநாயகம் திருமதி.ஞானமலர் குணநாயகம் தம்பதியின் மருமகனும் ரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும், றிச்சேட் ஜெயரஞ்சிற் (Australia), சாமுவேல் ஜெயந்தன் (U.K) சொலமன் ஜெயரூபன் (Sky Computers) ஆகியோரின் பாசமிகு தந்தையும், [illegible] Australia), அகிதா (U.K) நிஷாந்தி (பிரதேச செயலகம், தெகிவளை) ஆகி[illegible] அ[illegible]மனாரும், ஜெருஷா, ரனுஷா ஆகியோரின் பேரனும், ஜெயமணி, ஜெயரா[illegible] அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்றும் (02.06.2014), நாளையும் (03.06.2014) காலை 10 மணி முதல் இரவு 8.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 03.06.2014 மாலை 6 மணிக்கு ஆராதனை நடைபெறும். இறுதி நல்லடக்க ஆராதனை தோப்பு, ஏழாலை தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 04.06.2014 புதன்கிழமை அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்று C.A.C.M ஏழாலை தெற்கு சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் : மகன் J.S.ஜெயரூபன் – 077 7311772 / 011 2590051

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பையா சிவலிங்கம்**
(சந்திரன்)
(உரிமையாளர்,
சிவலிங்கம்
பல்பொருள் வாணிபம்)

ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ அப்பா!
ஆயினும் நீங்கவில்லை உங்கள் நினைவுகள்
ஏக்கத்துடன் காத்திருக்கிறோம் - ஐயா!
இன்னொரு பிறவி
எம்மோடு நீரிருக்க.....
கண்களில் ஈரம் காயவில்லை
கனத்த நெஞ்சங்களோடு பிரார்த்திக்கிறோம்
நின் ஆத்ம சாந்திக்காய்....!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தோற்றம்: 03.12.1954**
**மறைவு: 26.04.2012**
**திதி: பூர்வபக்க பஞ்சமி**

93/9, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(48682)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் 37 ஆவது பிறந்தநாளும்



அமரர் **வீரசிங்கம் ஜெகதீஸ்வரன்**
(யாழ். மத்திய கல்லூரி, ஆசிரியர்)

**தோற்றம்: 02.06.1977**
**மறைவு: 02.06.2012**

ஈர் ஆண்டு ஆனதுவே
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் நினைவுகளுடன்
**வீரசிங்கம் குடும்பம்.**

மாதகல்.

(48683)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகம்மா வைத்திலிங்கம்



காரைநகர் சின்னாலடி தங்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மணற்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது 36/2, 37 வது ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் யோகம்மா நேற்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தப்பு - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா - சிவகாமிபிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், தியாகராசா, தனலட்சுமி, பரஞ்சோதிபரமநாதனின் அன்புமிகு தாயாரும், சற்குணதேவி, கனகசபாபதி,சிவகௌரி,புஷ்பாஜினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02.06.2014) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
வை. தியாகராசா
(மகன்)

(C/13961)

## திருமதி மகேஸ்வரி வேலாயுதபிள்ளை



கெருடாவில் தெற்கு, தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வேலாயுதபிள்ளை நேற்று(01.06.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - புஸ்பராணி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் மருமகளும் வேலாயுதபிள்ளையின் (கடைமாமா; நவாலி) அன்பு மனைவியும் இராசலட்சுமி, கேதீசன் ஆகியோரின் பாசமிகு தாயும் சிவராஜா, துரைராஜா, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, கமலேஸ்வரி, விமலாதேவி, சண்முகராஜா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான புஸ்பவதி, கந்தசாமி, திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

(45563)

## அச்சுவேலியில் சுவீகரிக்கப்படும் காணிகள் நில அளவை செய்யும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜீன் 2

அச்சுவேலியில் இராணுவத்தின் பயன்பாட்டுக்கென சுவீகரிக்கப்படவுள்ள நான்கு ஏக்கர் காணி இன்று திங்கட்கிழமை நில அளவை செய்யப்படவுள்ளது. நில அளவை செய்யப்படுவது தொடர்பாக அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகம் மற்றும் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் இராச வீதி யாழ்- அச்சுவேலி பிரதான வீதி இரண்டையும் கிழக்கு மேற்கு எல்லைகளாகக் கொண்டு அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்தோடு இணைந்த நிலையில் உள்ள நான்கு ஏக்கர் காணியே சுவீகரிக்கப்படவுள்ளது.

காணிச் சுவீகரிகரிப்பு படிநிலையில் ஒரு கட்டமாக காணி உரிமையாளர்களின் காணி அடையாளப்படுத்தலுடன் காணி நில அளவை செய்யப்பட்டு அது தொடர்பான வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கு உரிய முறையிலேயே காணி நில அளவை செய்யப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

காணி நில அளவை செய்யப்படவிருப்பதால் அதில் கலந்து கொண்டு தங்களது காணிகளை அடையாளம் காட்டுமாறு அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்துக்கும், காணி உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-4)

## யாழ்.வலயத்தில் நியமனம் வழங்குமாறு ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜீன் 2

பிறமாவட்டங்களில் சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்கள், தாம் முன்னர் பணியாற்றிய தமது வதிவிடமாகவுள்ள யாழ்.வலய - கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் நியமனம் வழங்குமாறு கோரி வட மாகாண கல்வி அமைச்சுச் செயலகம் முன்பாக இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். அவர்களது கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கமும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இரண்டு வருட ஒப்பந்தத்தில் வெளிமாவட்டங்களில் கடமையாற்றிய ஆசிரியர்கள் தமது சேவைக்காலம் நிறைவடைந்ததை அடுத்து தமது சொந்த வலயத்துக்கே திரும்பி வருகின்றார்கள். அவர்களுக்கு சொந்த வலயங்களில் நியமனம் வழங்கப்படும் என்று அவர்களுக்கு முன்னர் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் தற்போது அவர்களுக்குச் சொந்த வலயங்கள் வழங்கப்படவில்லை. அதை யடுத்தே அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், குறித்த ஆசிரியர்களது நியாயமான கோரிக்கையைப் பரிசீலனை செய்து அவர்கள் விரும்பும் வலயத்திலுள்ள கோட்டப் பாடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

(ந-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இந்திய

வர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றைய 4 மீனவர்களும் நேற்று நண்பகல் கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகு பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ்.மெராண்டா,

"கைது செய்யப்பட்டவர்களிடம் முழுமையான வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் மீனவர்கள் அனைவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு இன்று திங்கட்கிழமை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள். அதே வேளை இன்று (நேற்று) கைது செய்யப்பட்ட 4 மீனவர்களும் இதுவரை எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை"- என்று தெரிவித்தார்.

அதேவேளை, இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைக் கொண்டு மீன் பிடியில் ஈடுபடுகின்றனர் என்று இலங்கை மீனவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டு வந்த போதும், இதுவரை அவ்வாறான உபகரணங்கள் எவையும் இலங்கை நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால் இம்முறை மீனவர்களைக் கைது செய்துள்ள இலங்கைக் கடற்படை அவர்கள் பயன்படுத்திய இரட்டை மடி வலைகளையும் (இரட்டை மடி வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுவது இலங்கையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடிமுறையாகும்) கைப்பற்றியுள்ளது. அவையும் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகத்தில் கடந்த 45 நாள்கள் விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடைக்காலம் நேற்று முன்தினம் முடிவடைந்துள்ள நிலையில் இந்தக் கைதுகள் நடந்துள்ளன. இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் இடம்பெறும் இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் முதற் சம்பவம் இதுவாகும். (ந-14-56)

### பொதுபல சேனா

வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"பொதுபலசேனா, இராவண சேனா போன்ற இனவாதம் கக்கும் அமைப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கைது செய்ய வேண்டும், கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டுமென்றெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் கல்முனைப் பிராந்தியத்தில் புத்திஜீவிகளென நாமம் சூட்டிக்கொண்டுள்ள சுயநலமிகளான சில தமிழர்கள் விஷம் கக்கும் பலசேனாவின் அடிவருடிகளாக செயற்படுவது வருந்தத்தக்க விடயமாகும்.

இத்தகைய அடிவருடிகள் ஒரு போதும் புத்திஜீவிகளாக இருக்கவே முடியாது. ஜெனிவா மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படவிருந்த சந்தர்ப்பத்தில் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் என்ற நாகத்தை முன்வைத்து பொதுபலசேனா எம்மத்தியிலேயே படமெடுத்தாட இந்த புத்திஜீவிகள் வழிவகுத்துக் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு இனத்தைக் காட்டிக் கொடுத்து இனவாதக் கும்பலுக்குத் துணை போகும் நபர்களா? புத்திஜீவிகள் என நாமம் சூட்டிக்கொள்வது? கல்முனை தமிழ் பிரதேச செயலகம் கல்முனை கலாசார மண்டபம் போன்றவை உருவான வரலாறுகளையும் இவற்றுக்காக அன்று தொட்டு இன்று வரை தமிழ்க் கூட்டமைப்பு ஆற்றி வரும் பங்களிப்புகளையும் இங்குள்ள தமிழ் மக்களுக்கு நன்கு புரியும். அதைவிட்டு கூட்டமைப்பு என்ன செய்தது? என மொட்டைப் பிரசுரங்கள் வெளியிடும் புத்திசாலித்தனம் எம் மக்களிடையே ஒரு போதும் எடுபடாது. எம் மக்களை சிறிதும் திசை திருப்பாது"- என்று தெரிவித்துள்ளார். (ந-10)

### இலங்கைத்

தனக்குத்தானே தீமூட்டிய நிலையில், வீதியால் சென்றவர்களின் அழைப்பின் பேரில், லியோ சீமான்பிள்ளை என்ற 29 வயதான புகலிடக் கோரிக்கையாளர் நேற்றுமுன்தினம் மு.ப. 11.38 மணியளவில், மெல்பேர்ன் அம்புலன்ஸ் பிரிவினரால் மீட்கப்பட்டார். பின்னர் உலங்கு வானூர்தி மூலம் மெல்பேர்ன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்.

95 சதவீதம் எரிகாயங்களுக்குள்ளான அவர் உயிருக்குப் போராடிய நிலையில் நேற்றுக் காலை 9.15 மணிக்கு உயிரிழந்தார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் படகு மூலம் டார்வின் வந்த இவர் இணைப்பு நுழைவிசைவு மூலம், மெல்பேர்னில் தங்க அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவோம் என்ற அச்சத்தினாலேயே அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. மென்பானப் போத்தல் ஒன்றில் நிரப்பிய பெற்றோலைக் கொண்டே அவர் தனது உடலில் தீயை மூட்டியுள்ளார்.

இறப்பதற்கு முன்னதாக இவர் தனது உடல் உறுப்புகளைத் தானம் செய்ய விருப்பம் வெளியிட்டிருந்தார். அதனையடுத்து, இவரது ஒரு கண், ஈரல், நுரையீரல், இரண்டு சிறுநீரகங்கள் என்பன மருத்துவ மனையில் தானமாக அளிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் அகதி முகாம் ஒன்றில் வசிக்கும் அவரது பெற்றோருடன் நேற்றிரவு தொடர்பு கொண்ட போது அதற்கு அனுமதி அளித்திருந்தனர்.

ஆஸ்திரேலியாவில் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தம்மைத்தாமே அழித்துக் கொள்ளும் நிகழ்வுகள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. அதிகளவு மனவழுத்தம், எதிர்காலம் குறித்த நிச்சயமின்மை, மீளவும் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவோமென்ற பயம் போன்றவை இவற்றுக்குக் காரணமாகவிருக்கின்றன.

(ந)

### வற்றாப்பளை

ருக் கும் பொதுமக்களுக்கும் புலப்படுத்தும் பாக்குத் தெண்டல் நிகழ்வு கடந்தவாரம் இடம்பெற்றது. பாக்குத் தெண்டியவரே தீர்த்தமெடுக்கும் வெண்கலப் பாத்திரத்தைச் சுமந்து செல்வர். தீர்த்தமெடுப்பவர் தன் வாயை வெள்ளைத் துணியால் கட்டியிருப்பர். தீர்த்தமெடுப்பவருக்கு உதவியாக இருவர் பணியாற்றுவர்.

கடலில் இறங்கி வாயூறு நீர்வரைக்கும் சென்று நிற்பர். பாத்திரத்தைத் தோளில் தாங்கி வைத்திருக்கும் போதே கடல் அலை வந்து மூடும் போது பாத்திரம் தண்ணீரால் நிறைந்து விடும். தண்ணீர் நிறைந்த பாத்திரத்தை அங்குள்ள மடையில் வைத்துப் பூசை செய்வர். அதன்பின்னர் மாலை சுமார் 6.30 அளவில் அங்கிருந்து காட்டா விநாயகர் கோயிலை நோக்கிப் புறப்படுவர். அப்பொழுது கடற்கரை மண் சிறிதளவு எடுத்துத் துணியில் முடிந்து கொண்டு இன்னொருவர் செல்லத் தீர்த்தக்குடம் வரும் வழிநெடுகிலும் மக்கள் பந்தலிட்டு மாவிலைத் தோரணம் கட்டி, நிறைகுடம் வைத்து வரவேற்பர். நிறைகுடப் பந்தல்களில் தரித்து நின்று இறுதியில் இரவு ஒன்பது மணியளவில் காட்டாவிநாயகர் ஆலயத்தைச் சென்றடைந்துவிடுவர்.

அங்கு விசேட பூசை, நடைபெறும். அந்தத் தருணம் அடிக்கப்படும் ஆலயமணியின் ஓசையும் பறை ஒலியும் சேர்ந்து பரவி அப்பகுதி மக்களை மெயசிலிர்க்க வைக்கும். தீர்த்தக்குடத்தை விநாயகர் ஆலயத்திலுள்ள அம்மன் மண்டபத்தில் இறக்கி வைப்பர். இரவு 10மணியளவில் அம்மன் மண்டபத்தில் கும்பம் வைத்து (அம்மன் கும்பம்), மடை பரவி, ஒரு மட்பாத்திரத்தில், கொண்டு வரப்பட்ட உப்புநீரை நிரப்பி, அதனைக் கடற்கரையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட மண்மீது வைத்துத் திரியிட்டு விளக்கேற்றுவர். தொடர்ந்து ஏழு நாள்கள் கடல்நீரில் விளக்கு எரியும்.

ஏழாவது நாளான ஞாயிற்றுக் கிழமை இரவு விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நடைபெறும். மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு பொங்கல் பொருள்களுடன் கடல்நீரில் எரியும் விளக்கு என்பன வாத்தியங்களுடன் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும். அன்று பகல் தொடக்கம் பூஜை வழிபாடுகள் இடம்பெறும். இரவு பொங்கல் இடம்பெறும்.

(ந-4)

### ஐ.நா.

யில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அந்தவகையில் தற்போது விசாரணைகளை மேற்கொள்வதற்கான நிபுணர்கள் குழுவை அமைக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் முழுவீச்சுடன் முன்னெடுத்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் விசாரணைக் குழு இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று தற்போது கூறப்படுகின்றது. அத்துடன் இதுகுறித்து இன்னமும் இலங்கை அரசுக்கும் உத்தியோகபூர்வமான அறிவிப்புகளும் விடுக்கப்படவில்லை.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள்,

விசாரணைக்குழு பற்றிய அறிவிப்பு இந்த வாரம் அல்லது அடுத்த வார ஆரம்பத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 26 ஆவது கூட்டத்தொடர் அடுத்த வாரம் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. அதில் உரையாற்றவுள்ள மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை குறித்த கருத்துகளையும் வெளியிடக் கூடும்.

தமது உரையின்போது விசாரணைக் குழு தொடர்பான அறிவிப்பையும் விடுக்கக் கூடும் - என்று தெரிவித்துள்ளன.

அதேவேளை, விசாரணைக் குழு தொடர்பான விடயங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இலங்கை அரசு மும்முரமாக ஆராய்ந்து வருகின்றது. இதுதொடர்பில் புதிதாகப் பதவியேற்றுள்ள இந்திய அரசின் நிலைப்பாடு குறித்தும் இலங்கை அரசு அறிய முயற்சித்தபோதும், அதுகுறித்து இன்னமும் தெளிவாகவில்லை என்றும் வெளிவிவகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ந)

### குடாநாட்டில்

சம்பங்கள் தொடர்பில் குற்றவாளிகள் கைது செய்யப்படுகின் றார்களுமில்லை- இவ்வாறு யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் சுட்டிக்காட்டியுள்ளன பொதுமக்கள் ஆலோசனைக் குழுக்கள்.

பொதுமக்கள் ஆலோசனைக் குழுக்களுக்கும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பின்போதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவசர தேவை கருதி பொலிஸ் நிலையங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி விடயத்தைத் தெரியப்படுத்தினால் சம்பவ இடத்துக்கு உடன் வருவதற்கு வாகன வசதி இல்லை என்று பதிலளிக்கப்படுகின்றது. இருக்கும் வாகனம் கண்காணிப்புப் பணிக்குச் சென்று விட்டது என்று கூறப்படுகின்றது. அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தினாலும் இதே நிலைதான்.

குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்கின்றன. ஒரு பகுதியினர் கைதாகியுள்ளனர். ஆயினும் அவர்களை விடவும் இன்னும் பலர் உள்ளனர் என்பதனையே அண்மைக்கால சம்பவங்கள் காட்டுகின்றன. குற்றவாளிகளுக்கு வாள்களைத் தயாரித்துக் கொடுப்பவர்கள் என்று இன்றுவரை எவருமே கைதாகியிருக்கவில்லை. அவர்களையும் கைது செய்தல் வேண்டும்.

இரவுநேர ரோந்து நடவடிக்கையின்போது பொலிஸாருடன் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களையும் அழைத்துச் செல்வதன் மூலம் குறித்த பிரதேசத்துக்குள் சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டத்தை இனங்காண்டு தடுக்கவும் முடியும்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் மாதாந்தம் பொலிஸாரால் சிவில் பாதுகாப்புக் கூட்டங்களை நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அது தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை உயர் அதிகாரிகளுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல மாதங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் பிரச்சினையாக இரகசியத் தகவல்கள் வழங்குவோர் விவரங்கள் ஏனையவர்களுக்கு இலகுவாகக் கிடைக்கிறது. அதனால் தகவல் வழங்கும் பொது மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது. அதனைத் தடுக்க வேண்டும். ஆலயங்களில் உள்ள பெறுமதியான வாகனங்கள் பணங்கள் நகைகள் திருடப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே அதனைத் தடுக்க காவலாளிகள் நியமிக்கப்படவேண்டும். உற்சவ காலங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில் நகைகள் வங்கிகளில் வைத்து பராமரிக்கப்படவேண்டும் என்றும் இந்தக் கலந்துரையாடலின்போது பொதுமக்கள் ஆலோசனைக் குழுக்கள் கருத்துக்களை முன்வைத்தன.

அதன்போது, இவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளைத் தாம் எடுப்பேன் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

(ந-4-9)

### இந்தியாவிலுள்ள

மைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வனியார் அகதி முகாமைச் சேர்ந்த இலங்கை அகதிகளுக்காக 41 வீடுகளும், தமிழ்நாடு அகதி முகாமைச சேர்ந்த அகதிகளுக்காக 150 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ந-10)

### விக்னேஸ்வரன்

விடயங்கள் உள்ளன. ஆயினும் அவை எழுத்து வடிவத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் இருக்கும் நிலையில், அவருக்குக் கீழ் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில் சிக்கல் ஏற்படப்போவதில்லை. ஆனால் ஏனைய மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங் களை வழங்குவதிலேயே பிரச்சினை காணப்படுகின்றது.

அதேவேளை, வட பகுதியில் காணப்படும் காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சுயாதீன ஆணைக்குழு ஒன்று அவசியம்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-4)

# ஆண்களுக்கான எல்லே போட்டியில் உடுவில் பிரதேச செயலகம் வெற்றி



வெற்றி பெற்ற அணியினர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். துரையப்பா மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

2 இன்னிங்ஸ் கொண்ட இறுதியாட்டத்தில் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக விளையாடிய பருத்தித்துறை செயலக அணி 5 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காக விளையாடிய உடுவில் பிரதேச செயலக அணி 7ஓட்டங்களைப் பெற்றது.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக விளையாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி 4 ஓட்டங்களைப்பெற்றது.

தனது 2அவது இன்னிங்ஸில் விளையாடிய உடுவில் பிரதேச செயலக அணி 3 ஓட்டங்களைப் பெற்றது.

ஆட்டத்தின் இறுதியில் உடுவில் பிரதேச செயலக அணி 10:9 என்ற ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# வென்றது ஆலடி சிந்து

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பர்ள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 11:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

# கரப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்



'ஏ' பிரிவில் வெற்றி பெற்ற ஆவரங்கால் மத்திய வி.க.



'பி' பிரிவில் வெற்றி பெற்ற புத்தூர் சோமஸ்கந்தா வி.க.

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 'ஏ' பிரிவு 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா விளையாட்டுக்கழக அணி 3:1 எனற் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

## யாழ். மாவட்டம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங் களுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் யாழ். மாவட்டம் 53 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் முல்லைத்தீவு மாவட்டம் 49 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி மாவட்டம் 14 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (த-23)

# வடக்கு மாகாண கராத்தேயில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 17வயதுப்பிரிவு, 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கராத்தே போட்டி கடந்த 30ஆம், 31ஆம் திகதிகளில் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் குழு நிலை கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**15 வயதுப்பிரிவு - ஆண்கள்**
முதலாம் - இடம் பளை மத்திய கல்லூரி, இரண்டாம் இடம் - சென். பற்றிக்ஸ் கல்லூரி, மூன்றாம் இடம் - நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாட சாலை.

**17 வயதுப்பிரிவு ஆண்கள்**
முதலாம் இடம் - சென். ஜோன்ஸ் கல்லூரி, இரண்டாம் இடம்- சென். பற்றிக்ஸ் கல்லூரி, மூன்றாம் இடம்- நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை.

**19 வயதுப்பிரிவு ஆண்கள்**
முதலாம் இடம் - சென். ஜோன்ஸ் கல்லூரி, இரண்டாம் இடம் - அச்சுவேலி மத்திய கல்லூரி.

**15 வயதுப்பிரிவு பெண்கள்**
முதலாம் இடம் -கைதடி நவீல்ட் பாடசாலை, இரண்டாம் இடம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**17வயதுப்பிரிவு பெண்கள்**
முதலாம் இடம் -கைதடி நவீல்ட் பாடசாலை ,இரண்டாம்இடம் - முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, மூன்றாம் இடம் - கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

**19 வயதுப்பிரிவு பெண்கள்**
முதலாம் இடம் - கிளிநொச்சி இந்துக்கல்லூரி. (த-23)

## உதைபந்து வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம்,ஜூன் 2

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் வடமராட்சிக் கல்வி திணைக்களத்தின் பருத்தித்துறை, மருதங்கேணி கோட்ட மட்ட பாடசாலைகளின் இடையில் 13 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணியை ஊக்குவிக்கும் வகையில் உதைபந்து வழங்கும் நிகழ்வு இன்று மதியம் ஒரு மணிக்கு வடமராட்சிக் கல்வி வலய மண்டபத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் நவநீதமணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் செல்வக்குமரன், உடற்கல்வி அசிரிய ஆலோசகர் ராஜாசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# ஸ்கந்தாவை வென்றது நெல்லியடி

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 35.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக தனுசன் 20 ஓட்டங்களையும், ரஜீவன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

நெல்லியடிமத்தியகல்லூரிஅணியைச் சேர்ந்த தர்சிகன் 4 இலக்குகளையும், விஜிந்தன் 3 இலக்குகளையும், அபிலாஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 120 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி தர்சிகனின் அரைச் சதத்தின் உதவியுடன் 25.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குக்ளை மட்டும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றியீட்டியது.

இந்த அணி சார்பாக அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய தர்சிகன் 56 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததோடு சிந்துஜன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தனுசன், விதுசன், ஜீவிதன் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். (த-108)

# குத்துச் சண்டைப் போட்டியில் வெற்றி பெற்றோர்.

யாழ்ப்பாணம், ஜூன் 2

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான குத்துச்சண்டைப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு சிலாவத்தை பாடசாலையில் இடம்பெற்றது.

இதில் வெற்றி பெற்ற வீரர்களின் விவரங்கள் வருமாறு:-

**49 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - கதிரவன் (தங்கப்பதக்கம்) யாழ். மாவட்டம், இரண்டாம் இடம் - வரதாஸ்(வெள்ளிப் பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம்.

**52 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - பானுஷண் (தங்கப்பதக்கம்) கிளிநொச்சி மாவட்டம், இரண்டாம் இடம் - செந்தூரன் (வெள்ளிப்பதக்கம்) யாழ். மாவட்டம், மூன்றாம் இடம் ஆதவன்- (வெண்கலப் பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம்.

**56 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - சுதர்சன் (தங்கப்பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம்.

**60 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - ஸ்ரீயனன் (தங்கப்பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம், இரண்டாம் இடம் - பிரசாந் (வெள்ளிப் பதக்கம்) யாழ்.மாவட்டம்.

**64 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - நிக்கிளஸ் (தங்கப்பதக்கம்) கிளிநெச்சி மாவட்டம்,இரண்டாம் இடம்- பத்மராஜா (வெள்ளிப்பதக்கம்) யாழ்.மாவட்டம்.மூன்றாம் இடம் - அருள் (வெண்கலப் பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம்.

**69 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் -லெறிஸ்லால் (தங்கப்பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம்,இரண்டாம் இடம் ஸ்ரீகரன் (வெள்ளிப்பதக்கம்) யாழ் மாவட்டம்.

**75 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம்- ரமேஸ் (தங்கப்பதக்கம்) யாழ்.மாவட்டம், இரண்டாம் இடம் - பிரியந்தன் (வெள்ளிப்பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம்.

**81 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - வி.பிரசாந் (தங்கப்பதக்கம்) யாழ். மாவட்டம்.

**91 கிலோ எடைப் பிரிவு**
முதலாம் இடம் - நாகேந்திரன் (தங்கப்பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம், இரண்டாம் இடம் - ஜெயந்திரன் (வெள்ளிப்பதக்கம்) யாழ்.மாவட்டம்.

**91 கிலோ எடைப் பிரிவுக்கு மேற்பட்டவர்கள்**
முதலாம் இடம் - பரன்குமார் (தங்கப்பதக்கம்) யாழ். மாவட்டம், இரண்டாம் இடம் -அருணன் (வெள்ளிப்பதக்கம்) முல்லைத்தீவு மாவட்டம். (த-23)



## ரெய்னாவை கடுப்பேற்றிய ஜடேஜா

ரெய்னாவின் ஆட்டத்தை விட அவரது காதலி ஸ்ருதிதான் அழகு என சென்னை அணியின் சக வீரரான ஜடேஜா கிண்டல் செய்துள்ளார்.

பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டத்தின் அதிரடியால் ரசிகர்களைத் தன் பக்கம் இழுத்தார் ரெய்னா. கடினமான பஞ்சாப் அணியின் இலக்கை நோக்கி சென்னை அணியைப் பயணிக்க வைத்தார்.

6 பந்துப்பரிமாற்றத்தில் சென்னை அணி 100 ஓட்டங்களைப் பெற்று அசத்தக் காரணமாக இருந்தார் ரெய்னா. இவர் 25 பந்தில் 87 ஓட்டங்கள் அடித்தார். இருப்பினும் மற்ற வீரர்களின் சொதப்பல் ஆட்டத்தால் சென்னை அணி தோல்வியடைந்தது.

இதனிடையே சென்னை அணியின் சக வீரரான ரவீந்திர ஜடேஜா ரெய்னாவின் ஆட்டத்தைவிட அவரது காதலி ஸ்ருதி ஹாசன் தான் அழகு என்று டுவிட் செய்துள்ளார்.

அவர் ரெய்னாவின் இன்றைய ஆட்டத்தை விட அழகானது ஒன்று உண்டு என்றால் அது அவரது காதலி ஸ்ருதி ஹுசைன் தான் என்று தெரிவித்திருந்தார். ஆனால் அவசரத்தில் ஸ்ருதி ஹாசன் என்பதற்குப் பதிலாக ஹுசைன் என்று பெயரை மாற்றியிருந்தார். (கு)



## தொடரை சமப்படுத்தியது இலங்கை

இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கிடையில், இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான, இறுக்கமான நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை அணி 7 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

லசித் மாலிங்கவின் சிறப்பான இறுதிப் பந்துப்பரிமாற்றம் இலங்கை அணியின் வெற்றிக்குப் பெரிதும் உதவியது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகளைப் பெற்றுள்ளன. இதன் மூலம் தொடர் சமநிலையில் உள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை அணி, 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமார் சங்ககார 112 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரின் 19ஆவது சதமாகும். திலகரட்ன டில்ஷான் 71 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் 30 ஓட்டங்களையும் பெற்றனர். சங்ககார, டில்ஷான் ஆகியோர் இரண்டாவது இலக்குக்காக 172 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஹரி கௌர்னி 4 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், கிறிஸ் ஜோர்டான் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பாடிய இங்கிலாந்து அணி, 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோஸ் பட்லர் 121 ஓட்டங்களைப் பெற்றார். ரவி போபரா 51 ஓட்டங்களையும், ஜோ ரூட் 43 ஓட்டங்களையும், கரி பலன்ஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கையின் பந்துவீச்சில் லசித் மாலிங்க 3 இலக்குகளையும், அஜந்த மென்டிஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி இழந்த மூன்றாமிடத்தை மீண்டும் பெற்றுள்ளது. ஐந்தாவது போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றினால் இரண்டாமிடத்துக்கு முன்னேறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)


சுனில் நரைன்

## சுனில் நரைனின் முடிவு; ஆதரவு அளித்தார் கம்பீர்

நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டியில் விளையாட மால் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட முடிவு செய்த சுனில் நரைனின் முடிவுக்கு கம்பீர் ஆதரவளித்துள்ளார். ஐ.பி.எல். கொல்கத்தா அணியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த சுனில் நரைன் விளையாடி வருகிறார்.

இந்நிலையில் நியூசிலாந்து அணிக்கெதிராக விளையாடும் டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்ள அவருக்கு நேற்று முன்தினம்வரை கால அவகாசம் கொடுத்தது.

ஆனால் அவர் ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் விளையாடுவதையே தெரிவு செய்துள்ளார்.


இதற்கிடையே நியூசிலாந்து டெஸ்ட் தொடருக்கான அணியில் இருந்து சுனில் நரைன் கழற்றி விடப்பட்டுள்ளார்.

இந்தக் காரணத்தினால் தர்மசங்கடத்துக்குச் சுனில் நரைன் ஆளானார். இது தொடர்பாக கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் கூறுகையில், கொல்கத்தா அணியின் வீரர் என்ற முறையில் நரைனுக்கு இன்னும் ஒரு ஆட்டமே இருக்கிறது. அதற்குள் கெடு விதிப்பது மோசமானது.

அதனால் எந்த ஒரு வீரராக இருந்தாலும் இந்த முடிவைத்தான் எடுப்பார்கள். எனவே அவரை நான் முழுமையாக ஆதரிக்கிறேன் என்று கூறியுள்ளார். (கு)

## ஸ்ருதி ஹாசனை காதலிக்கவில்லை


ஸ்ருதி ஹாசன்


ரெய்னா

கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னாவும் ஸ்ருதி ஹாசனும் காதலிப்பதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து அதனை ரெய்னா மறுத்துள்ளார்.

மும்பை பத்திரிகையில் இருவரும் காதல் வசப்பட்டிருப்பதாகவும், இரகசியமாகச் சந்தித்து காதலை வளர்ப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

இதற்கு முன்பே ரெய்னா பூர்ணா படேல், முன்னாள் மத்திய அமைச்சர் பிரபுல் படேல் மகள், இந்தி நடிகை அனுஷ்கா சர்மா என அனைவருடன் சேர்ந்து கிசுகிசுக்கப்பட்டவர்.

இந்நிலையில் தற்போது ஸ்ருதி ஹாசனை காதலிப்பதாகச் செய்திகள் பரவி வருகின்றன. இது குறித்து தனது டுவிட்டரில் ரெய்னா கருத்து கூறுகையில், நிறைய ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன. எல்லோருக்கும் ஒரு விடயத்தை தெளிவுபடுத்திக் கொள்கிறேன். நான் யாரையும் காதலிக்கவில்லை என்று கூறியுள்ளார்.

மேலும் ஸ்ருதி ஹாசனின் செய்தி தொடர்பாளர் தெரிவிக்கையில், சுரேஷ் ரெய்னாவைச் ஸ்ருதி ஹாசன் காதலிப்பதாக வெளியான செய்தி உண்மை இல்லை. ஸ்ருதிஹாசன் சினிமாவில் பிசியாக இருக்கிறார் என்று கூறியுள்ளார்.

## ரெய்னாவின் புதிய சாதனை

ஐ.பி.எல். அனைத்து தொடரிலும் சராசரியாக 400 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த ஒரே வீரர் என்ற சாதனையை சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் சுரேஷ் ரெய்னா பெற்றுள்ளார்.

ஐ.பி.எல். ஆரம்பம் முதலே சென்னை அணி அசத்தியது. இதன் மூலம் விரைவிலே பிளே-ஒப் சுற்றுக்குள் நுழைந்தது. தொடர்ந்து முதல் இரு இடத்தை பிடித்து வந்த சென்னை அணி திடீர் தோல்விகளாலும், கொல்கத்தா அணியின் எதிர்பாராத அதிரடியினாலும் இக்கட்டான நிலைமையைச் சந்தித்தது.

பிறகு பஞ்சாப் அணியிடம் வீழ்ந்து இறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

ஐ.பி.எல் தொடரில் சென்னை அணி 7 முறை பிளே-ஒப் சுற்றுக்கும், 5 முறை இறுதிப் போட்டிக்கும் நுழைந்தது. இது மட்டுமல்லாது இரண்டு முறை கிண்ணத்தைக் கைப்பற்றியும் அசத்தியது.

சென்னை அணியின் தொடர் வெற்றிகளுக்கு முக்கிய காரணம், சுரேஷ் ரெய்னாதான் என்றே சொல்லலாம். டோனியைப் போலவே, ரெய்னாவும் ஆரம்பம் முதல் அனைத்துச் சீசன்களிலும் சென்னை அணிக்காக ஆடி வருகிறார்.

சென்னை அணியின் சிறந்த ஆட்டம் போலவே அனைத்து தொடர்களிலும் சீரான ஆட்டத்தை வெளிப்படுத்துபவர் ரெய்னா.

ஐ.பி.எல். வீரர்களிலேயே 3 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற பெருமையை நடப்பாண்டு தொடரின் தொடக்கத்திலேயே பெற்றார் ரெய்னா. தற்போது அவரின் ஐ.பி.எல். மொத்த ஓட்ட எண்ணிக்கை 3,238. மொத்தம் 114 ஆட்டங்களில் ஆடி இந்த ஓட்டங்களை அடித்துள்ளார்.

மேலும் தற்போது ஐ.பி.எல். போட்டிகளின் 7 சீசனிலும் சராசரியாக 400 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சாதனையையும் சுரேஷ் ரெய்னா பதிவு செய்து, சென்னை ரசிகர்களின் ஹீரோவாக மாறியுள்ளார்.

(கு)

# மனிஸ் பாண்டேயின் அதிரடி ஆட்டத்தின் மூலம் ஐ.பி.எல். கிண்ணத்தை தனதாக்கியது கொல்கத்தா



ஐ.பி.எல். இறுதியாட்டத்தில் நேற்று யாரும் எதிர்பாராத வகையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை வீழ்த்தித் தனது வரலாற்று வெற்றியைப் பதிவு செய்து கொண்டது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி.

மனிஸ் பாண்டே அதிரடியாக ஆடி 50 பந்துகளில் 94 ஓட்டங்களைக் குவிக்க 3 இலக்குகளால் வெற்றி பெற்றது கொல்கத்தா. இதன் மூலம் ஐ.பி.எல். இந்த ஆண்டுக்கான கிண்ணத்தை அது தனதாக்கிக் கொண்டது. பலராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கிங்ஸ் லெவன் பஞ்சாப் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும் அதனை மிஞ்சும் வகையில் அதிரடி காட்டியது கொல்கத்தா. அது 19.3 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 200 ஓட்டங் களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

பெங்களூரில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

பஞ்சாப் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சேவாக்கும் மனன் வோராவும் களமிறங்கினர். சேவாக் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடிய மனன் வோரா 67ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய பெய்லி ஒரு ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். இருப்பினும் இளம் வீரர் விருத்திமான் சஹா அதிரடியில் இறங்கினார். மிகவும் எதிர் பார்க்கப்பட்ட மக்ஸ்வெல் டக்கவுட்டானார். இருப்பினும் 55 பந்துகளில் 10 பவுண்டரிகள் மற்றும் 8 சிக்சர்களுன் 115 ஓட்டங்களைக் குவித்து அசத்தினார் சஹா. இதனால் ஆட்ட நேர முடிவில் அந்த அணி 199 ஓட்டங்களைக் குவித்தது.



பந்து வீச்சில் கொல்கத்தா அணியின் பியுஷ் சாவ்லா 2 இலக்குகளையும், சுனில் நரைன், உமேஷ் யாதவ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

கொல்கத்தா அணி வெற்றி பெறுவதற்கு 20 பந்துப்பரிமாற்றங்களில் 200 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது.

முதலில் களமிறங்கிய உத்தப்பா-கம்பீர் ஜோடி நல்லதொரு ஆரம்பத்தைக் கொடுத்தது. இந்தவேளையில் உத்தப்பா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து கம்பீரும் 23 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதனால் கொல்கத்தா சற்றுத் தடுமாறியது. ஆயினும் பின்னர் களமிறங்கிய மனிஸ் பாண்டே தனது அதிரடியைக் காட்டத் தொடங்கினார். அவர் 50 பந்துகளில் 94 ஓட்டங்களை விளாசினார். இதில் 6 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கும். அவருடன் சேர்ந்து யூசுப் பதானும் 36 ஓட்டங்களைக் குவித்தார். கொல்கத்தாவின் ஓட்ட எண்ணிக்கை எகிறிய போதும் மறு புறத்தில் இலக்குகள் சரியத் தொடங்கின. பஞ்சாப் பந்துவீச்சாளர் கரன்வீர் சிங் தனது அபார பந்துவீச்சினால் கொல்கத்தாவின் இலக்குகளைச் சரித்தார். மனிஸ் பாண்டே, யூசுப் பதான் ஆகியோரை கரன்வீர் சிங் வெளியேற்றப் பின்னர் வந்தவர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும் தனது இலக்கை 3 பந்துகள் மீதம் இருக்கையில் அடைந்து வரலாற்று வெற்றியைப் பதித்தது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்.

ஆட்ட நாயகனாக 94 ஓட்டங்களை விளாசிய மனிஸ் பாண்டே தெரிவானார். (சு)


ஷாம்சனின்
தேசிய ஆங்கில டிப்ளோமா
இங்கிலீஷ் பேசுறது இப்ப ரொம்ப ஈசி
வீட்டிலிருந்தபடியே ஷாம்சனின் 20 புத்தகங்களையும் கற்று ஒவ்வொன்றிலுமுள்ள 250 பயிற்சிகளை செய்து எம்மிடம் ஒப்படைத்தால் போதுமானது. பயிற்சியின் முடிவில் உங்களாலும் சுயமாகவும் சரளமாகவும் ஆங்கிலத்தில் பேசமுடியும்.
20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட இப் பயிற்சியில் பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், மற்றும் வீட்டுப்பெண்கள் இணையமுடியும்
06.06.2014 இற்குமுன் பயிற்சியில் இணையும் அனைவருக்கும் பயிற்சிக் கட்டணம் ரூ.3000 என்பதுடன் 20 புத்தகங்களும் முற்றிலும் இலவசம்!
இலங்கையெங்கும் உள்ள எவரும் தபால் மூலமும் இப்பயிற்சிநெறியை தொடரமுடியும். பயிற்சி நெறிமுடிவில் "Diploma in English" Certificate வழங்கப்படும்.
இலங்கையில் பல அரச,தனியார் நிறுவன ஊழியர்களுக்கு ஆங்கிலம் பயிற்றுவித்த நிறுவனம்
SAAMSON LANGUAGE SCHOOL
171, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

இலவசமாக ஆங்கிலம் கற்க அரிய வாய்ப்பு
CAMBRIDGE ENGLISH
Pre-starters முன்பள்ளி, தரம் 1, 2
Young Learners தரம் 03, 04, 05
Teens தரம் 06-11 O/L தயார்ப்படுத்தல்
General User ஏனையோர்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். அடிப்படையில் இருந்து கற்கலாம்.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
பாட அலகு ஒன்று இலவசமாகக் கற்கலாம்.
ALISON DIGILITE
51/3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில். 0779866409

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரசுவாமி ஸ்ரீஸ்கந்தராஜன்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் PWD)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசுவாமி ஸ்ரீஸ்கந்தராஜன் நேற்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், மகாலக்சுமி, திருக்குமாரன், சண்முகானந்தன் (ஆனந்தன்), ஸ்ரீவேலாயுதம் (மணி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஸ்ரீராஜலட்சுமி, ஸ்ரீராஜேஸ்வரி (பிரான்ஸ்), ஸ்ரீசரவணபவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகிருஷ்ணன், ஸ்ரீகரன் (பிரான்ஸ்), செல்வி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், அபிலாஷ், சந்தியா, பிரகாஸ், ஆகாஸ், அபிஷன், அட்சயா, அபிநயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரமானந்த அம்மன் கோயிலடி,
இணுவில் மேற்கு.

தகவல் : குடும்பத்தினர்
T.P.077 248 9573

(48670) (45.3.6)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் சபாரத்தினம்

கொழும்புத்துறை சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும் ,நல்லூர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சபாரத்தினம் நேற்றுமுன்தினம் (31.05.2014) சனிக்கிழமை நண்பகல் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னமுத்து தம்பதியரின் மூத்த மகனும், ரத்தினம் - லக்ஸ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானம்பிகையின் அன்புக் கணவரும், கணேஸ்குமாரின் (ஜேர்மன்) அன்புத் தந்தையும், கோகிலவதி (ஜேர்மன்)யின் அன்பு மாமனாரும், அகிலவன் (ஜேர்மன்), ஆதிசன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேரனும், குணரட்ணம், பஞ்சரட்ணம், கமலாம்பிகை, பாலம்பிகை, விஜயரட்ணம் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நகேஸ்வரி மற்றும் செந்தில்நாதன் (ஜேர்மன்), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

414/4 கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
T.P. 0212054102

தகவல்: ஞானம்பிகை (மனைவி)
கணேஸ்குமார் (மகன்)

## மரண அறிவித்தல்



### சோமசுந்தரம் கனகசபாபதி

நவாலியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கனகசபாபதி நேற்று (01.6.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் -தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகராணியின் அன்புக் கணவரும், ஜெயந்தா, சுவித்தா, சயந்தன் ஆகியோரின் தந்தையாரும், கணேஸ்வரி, நாகேஸ்வரி, ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரரும், றதீஷ்குமாரின் மாமனும், ரஜிஷ்கா, திரிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.